Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ரூபா 16/50

மே 12 - 18, 2005

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMI 613

சிவராமும் - கிண்ண பாலாவும்

பொதுக் கட்டமைப்பு சாத்தியம்?

☞ P.வாசு கூறிய ரஜினியின் இரகசியம்

☞ தமிழ் நாட்டு ஆண்கள் அழகானவர்கள் - நயன்தாரா

வன்னி அவலம்

ஜெயதேவன் பேட்டி

விமானப் படையணி வைத்திருக்கும் தீவிரவாத இயக்கங்கள்

எப்படி நிம்மதி கிடைக்கும்?

நீதியற்ற ஆட்சி எங்கே நீடித்தாலும் அங்கே அமைதி தோன்றாது. இது மதங்கள் எல்லாம் கூறும் மகத்தான - மறுக்க முடியாத - உண்மை. இந்து மத நூல்களில் தத்துவார்த்தமாக எழுதப்பட்ட கதைகள் மூலம் இதை அறிய முடியும்.

சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் சிலம்பு விடயத்தில் செய்த தவறினால் கண்ணகியின் கேள்விக்குத் தலைகுனிய நேரிட்டது. சோழ மன்னன் தன் மகனொன்றும் பாராமல் கன்றை இழந்த பசுவின் கண்ணீருக்குத் தலை சாய்ந்து நீதியை நிலை நாட்டினான்.

இப்படி இந்து சமயத்தில் எத்தனையோ முன்னுதாரணக் கதைகளை அறிய முடியும். அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி நடந்த கதைகள் ஏராளம். காரணம் அரச கட்டில் ஏறி கட்வுளுக்குப் பயந்து அரசாண்ட தமிழ் மன்னர்கள் செங்கோல் வழுவாது சீராக ஆண்ட சிறப்பியல்புகளைச் சரித்திரங்களில் ஆதாரமாக அறியமுடிகிறது அல்லவா?

இன்றைய காலகட்டத்தில் கறைபடிந்த அரசியலே உலகின் பல நாடுகளில் கதையாகிறது. வாழல் நிறைந்த அதிகாரிகளே உலா வருகின்றார்கள். ஜனநாயகம் மிதிக்கப்படுகிறது. மனிதநேயம் புதைக்கப்படுகிறது. மகிழ்ச்சிக்குப் பதிலாக மனச் சஞ்சலங்களே மலிகின்றன. மத ரீதியான போதனைகள் மனிதத்துவத்தை வளர்க்காமல் குரோதத்தை வளர்ப்பதுவும் அமைதி குன்றக் காரணமாகிறது. எப்படி நிம்மதி கிடைக்கும்?

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

ஆன்மீகம்



எல்லாம் வல்லவர் இயேசு

"சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; காத்தராகிய நான் ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்." ஏசாயா - 60:22.

சின்னவனா(ள)யும், சிறியவனா(ளா)யும் இருக்கிற சகோதரனே, சகோதரியே! இந்தப் புதிய வருடத்திலே தேவன் உன்னை ஆயிரம் பேருக்குச் சமமாகவும், பலத்த ஜாதியாகவும் மாற்றி உன்னை உலகத்துக்கு ஒளியாக வைக்கப் போகிறார்.

"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்திரம் அடைவீர்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்"

ஏசாயா - 61:7

கடந்த காலத்தின் நிகழ்வுகள், மனக் காயங்கள், நிந்தைகள், அவமானங்கள், வியாதிகள் யாவற்றையும் உங்களிடத்திலிருந்து நீக்கி வாக்குத்தத்தத்தை தீவிரமாய் நடப்பிக்கப்போகிற தேவன், உங்களுடைய தேவன். உங்களுக்குத் துணை நிற்கிற தேவன். வழிகாட்டுகிற தேவன். வாக்கு மாறாத தேவன். உன்னுடைய இரட்சகர், உனக்குள்ளே வாசம் பண்ணுகிறவர், உன் வாழ்க்கையிலே, உன் மூலமாக மற்றவர்களுக்கு அற்புதங்களைச் செய்கிறவர். அதிசயமானவர். "இயேசு...." அந்த மகத்தான நாமம் உன் ஒவ்வொரு சுவாசத்திலும் இருக்கட்டும். ஒவ்வொரு இதயத் துடிப்பிலும் கேட்கட்டும். உனக்கு, உன் குடும்பத்துக்கு, உன் உறவினர்களுக்கு, உன் சிநேகிதர்களுக்கு, உன் ஊருக்கு, உன் தேசத்துக்கு நீ ஒளியாக மாற்றப்படப் போகிறாய். உன்னுடைய இயேசு அப்படிச் செய்ய வல்லவராயிருக்கிறார். ஆமென்.

-போல் ஜோன், தெல்தெனிய

அல்லாஹ்வின் அருள்

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்று அவன் ஆராய்ந்து பார்க்கட்டும். முதுகெலும்பிலிருந்தும் விலா எலும்பில் இருந்தும் பாய்ந்து வரும் நீரிலிருந்தும் அவன் படைக்கப்பட்டான்.

(5:86)

பூவுலகில் பிரயாணம் செய்து, இறைவன் எப்படி சிருஷ்டிகளைப் படைத்தான் என்பதை ஆராய்ந்து பாருங்கள் என்று கூறுக.

(29:20)

அல்லாஹ்வின் அருளின் பலன்களைக் கவனித்துப் பாருங்கள். பூமியை, அது மடிந்த பிறகு எப்படி உயிர்ப்பிக்கிறான் என்று கவனியுங்கள். நிச்சயமாக அவன்தான் இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்பவன். அவன் எல்லாம் செய்ய வல்லவன்.

(30:50)

-செல்வி செய்யது புஹாரி ஸஹானா, வாழைச்சேனை - 05.

கவிதைப் போட்டி இல.611

பரிசுக்குரிய கவிதை

விட்டார்களா?

சகோதர மொழி பேசும்
நண்பியும் நானும்
இப்படித்தான் வாழ விரும்பினோம்
எங்கே விட்டார்கள் - நம்
அரசியல்வாதிகளும்
ஆயுததாரிகளும்
அடுத்த பிறவியிலாவது.....

ரெ.பி.மரியடினேசன், மன்னார்.

தடையில்லை!

அன்பு சுரக்கும் பொழுது
சுமையின் துன்பம் தெரிவதில்லை.
ஆதரவுடன் அணைக்கும் பொழுது
அநாதைகளென்று இங்கு யாருமில்லை.
பாசம் பெருகும் பொழுது
பயம் என்று ஒன்றும் இல்லை.
நேசம் பெருகும்போது நம்மிடையே
மொழி மதம் தடையில்லை.

கே. பாலகிருஷ்ணன், கொழும்பு 12.

அநாதைகள்!

மழை வரும்
மழைக் காலமல்ல!
நாம் நனைவதும்
நமக்காக அல்ல!
அன்று சுனாமியால்....
இன்று அநாதைகளாய்!....

செ.ஞானராசா, மடுக்கோவில்.

நமக்குப் புரிகிறதா?

ஒருத்தி தமிழச்சி
இன்னொருத்தி சிங்களத்தி
என்று பார்த்தா
வானம் பொழிகிறது?
எதுவுமறியாத குடைக்கு
பிஞ்சுகளைக் காக்கப் புரிகிறது.

எஸ்.பி.பாலமுருகன்.

ஒட்டுறவு

அபாயம்.....
அச்சம்...
அரவணைப்பு
அபயம்!
உடன் பிறப்புகள்
ஒட்டுறவு
கொட்டும் - மழை
நீர்ப்பரப்பு
சொட்டு - நீர்
ஒட்டுறவு.

காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா-05.

பிழைத்தது பிழை

சுனாமியிற்
பிழைத்தது
பிழையாகிவிட்டது.
ஒண்டவோர்
கூரை கேட்டால்
குடையைக்
கொடுக்கிறார்களே!

அ.சந்தியாகோ, கண்டி.

பாதுகாப்பது யார்?

கடலலை வந்து
காவு எடுத்த பின்னே
எஞ்சியிருக்கும் கள்ளம்
கபடமற்ற குழந்தைகளின்
கண்களில் பயமும்
வயிற்றில் பசியும்
கொண்டு இருக்க
மழையும் வந்து நனைக்க
தம்மைப் பாதுகாக்கக் குடையைப்
பிடிக்கின்றனர் இவர்கள்.
ஆனால் இவர்களைத் துன்பத்தில்
இருந்து பாதுகாக்க யார்
உதவிக் குடை பிடிப்பாரோ.....?

எஸ்.சிவதர்சன், சுன்னாகம்.

நடுக்கமா?

குடை பிடித்தும் மழையில் நனைந்து
விட்டதால் வந்த குளிர் நடுக்கமா?
இல்லையேல் இனியும் ஒரு சுனாமி
வந்து விடுமோ என்ற குலை நடுக்கமா?

திருமதி சந்திரா கண்ணன், இராகலை.

கவிதைப் போட்டி இல.613



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 18.05.2005.

கவிதைப் போட்டி இல.613
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

வேறு வழி இல்லை!

சிங்களம் நீ, தமிழ் நான்
என்ற பேதம்
பேரலைக்குப் புரியவில்லை -
நம்கடும்பத்தை வாரி,
நம்மை மட்டும் வீசியது -
மழையோ, வெயிலோ
மாரியோ, கோடையோ, நாம்
ஒன்றாகத்தான்
இனி வாழவேண்டும். வேறு
வழி இங்கில்லை.

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

ஏக்கம் என்ன? கொடியது

ஒரு குடைக்குள்
இரு மலர்கள்!
மழைக் குளிரில்
நனைந்து
கொண்டு
விழிபிதுங்கி
நிற்பதென்ன?
நாதியற்ற
பறவைகளா - இல்லை
பாதை மாறியதால்
பரிதவிப்பா?

நதார், ஜின்னாநகர்.

இளமையில் வறுமை கொடிதில்லை! கொடிதிலும் கொடிது இவர்கள் போன்ற இளசுகள் இளமையில் அநாதைகள் ஆதல் அன்றோ!!

க.கமலதீன், ஏறாவூர்-03.

உங்கள் பக்கம்

புறக்கணிப்பது நியாயமல்ல!

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகரத்தில் உள்ள பழைய தபாலக வீதி, அலியார் வீதிகளுக்கிடைப்பட்ட குறுக்கு வீதிகளுக்கான கிறவல் கொட்டும் பணி தாமதமடைந்து வருகிறது. அதிலும் ஓரிரு வீதிகளுக்கு கிறவல் கொட்டும் பணி பூர்த்திசெய்யப்பட்டு, ஏனைய வீதிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரிய செயலாகும்.

இற்றைக்குப் பத்துப்பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு கொட்டப்பட்ட அதே கிறவலுடன் மணலாகிக் கிடக்கிறது. அத்தோடு இவ் வீதிகளுக்கான புனரமைப்பு வேலைகள் இன்னும் மேற்கொள்ளப்படாமல் இருப்பது நியாயமற்ற செயலாகும். கல்முனை நகர சபையானது மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பினும் பேச்சளவில் மட்டுமே தவிர, செயலளவில் எதுவுமில்லை.

அதிலும் ஆறாம் குறுக்கு வீதியில் சமூர்த்தி நிதியத்தினூடாக மதகு வடிகான் நிறுவப்பட்டு மூடிகள் இடப்பட்டிருக்கின்றன. இருப்பினும் வீதிக்கும் வடிகாலுக்குமிடையில் அரையடி உயர வித்தியாசம் காணப்படுகிறது. இதனால் பாதசாரிகளும் வாகன ஓட்டுநர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஆதலால் உரிய வீதிக்கு கிறவலைக் கொட்டி சமப்படுத்தித் தருவதோடு ஏனைய குறுக்கு வீதிகளையும் புனரமைக்குமாறும், மக்களின் நலனில் அக்கறை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்!

-செயின் தம்பி ஸியாம், கல்முனை - 06.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

வாசக[ர்] சாலை என்றும் நீ வாழ்க!

வாழ்க உன் பணி!

இனிய முரசே நீ வளர்க!
உன் சேவை என்றும் தொடர்க!
ஒவ்வொரு கிழமையும் உன்னைக்
கண்டவுடன்
தான் எனக்குத் தூக்கமே!
நீ சுமந்து வரும் அத்தனை
செய்திகளும்
அமுதிலும் இனியவை.
உன் அமுது மென்மேலும் சுவையாக
இருக்க
என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.
வாழ்க உன் பணி!
வளர்க உன் புகழ்!

-கே.எம்.எஸ்.சல்மீன், புத்தளம்.

உன் பெயர் ஒலிக்கட்டும்!

கத்தியின்றி
இரத்தமின்றி
யுத்தம் செய்யும்
முரசே!
சத்தியத்தின்
காவலரண்
எங்கள் தமிழ்
அரசே!
நித்திலத்தைப்
போல நீயும்
நீடு புகழ்
கொண்டாய்!!
எம்
நெஞ்சமெலாம்
நிறைந்தாய்!!
தித்திக்கும்
தீந்தமிழ்
'தினமுரசே!'
எத்திக்கும்
உன் பெயர்
ஒலிக
கட்டுமே....!!

-யாழ்மீர் மர்சூன், தெஹிவளை.

பெருமை மிக்க முரசே!

எனது அபிமான தினமுரசே!
உன் பல்லாயிரக்கணக்கான
வாசகர்களில் நானும்
ஒருத்தி. கடல் கடந்து
வந்தாலும் உன் இதழை
வாரம் தோறும் பார்க்க
மறந்தது இல்லை. அன்பே
முரசே! பல்வேறு தடைகள்
கொலைகள், உபாதைகள்,
எதிர்ப்புகள் மத்தியிலும்
உண்மைச் சம்பவத்தை
பிரசுரிக்கும் பெருமை
தினமுரசையே சாரும்.

- லெபனான் வாசகர்

தினமுரசு தரும் தகவல்கள் என்றும்
தித்திக்கும் முக்கனிகள்.
கத்தும் கடல் முத்தெனக் கவிதைகள்
தந்தெம் ஆவல் தினம் தினம்
தூண்டும்.
சொத்தையாம் செய்திகள் அங்கிலை.
வித்தகரும் போற்றும் வித விதச்
செய்திகள்.
கவிதைப்போட்டி எம் கற்பனைகளைத்
தூண்டிவிட வல்லது.
சினிமாச் செய்திகள், சிந்தனைத்
தகவல்கள்
கொண்ட எம் முரசை என்றும்
வாழ்ந்த
எவரும் கருதுவர் என்பதால்
எந்தன்முரசே
என் மனம் கவர்ந்த நீ என்றும்
வாழ்க.

சந்திவெளிச் சம்பவம் : சம்பந்தப்பட்ட இராணுவம், எம்.பி.க்கள், சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துக!

மட்டக்களப்பு வெகுஜனப் பேரவை கோரிக்கை

மட்டக்களப்புச் சந்திவெளியில் ஏற்படுத்தப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடியை அகற்றக் கோரி மக்களைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய சூத்திரதாரிகளையும், கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இராணுவத் தினரையும் கண்டறிய விசாரணை நடத்தித் தண்டனை வழங்குமாறு மட்டக்களப்பு வெகுஜனப் பேரவை என்ற அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, வெலிக்கந்தைப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் ஏட்டிக்குப் போட்டியான பல்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அப்பாவித் தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கொல் லப்பட்டதையடுத்தே இப் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஓரங்கமாகவே அண்மையில் பல சோதனைச் சாவடிகள் அமைக் கப்பட்டன. கிழக்கில் அதிகரித்துவரும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்து வதற்காகவே இச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன என்பதைக் கிழக்குவாழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வகையிலேயே சந்திவெளி ஆஸ்பத்திரிக்கு முன்பாக ஒரு சோதனைச் சாவடியும் சந்தைப் பகுதிக்கு அருகில் மற்றொரு சோதனைச் சாவடியும் அமைக்கப் பட்டன. இப் படுகொலைச் சூத்திரதாரி களான புலிகளே சோதனைச் சாவ டியை அகற்றக் கோரி மாணவர் களையும் மக்களையும் தூண்டிவிட்ட தோடு, மக்களுக்குள் மக்களாக மறைந்து நின்றுகொண்டு வீதித் தடைகளை ஏற்படுத்தி, இராணுவத் தினர் மீது கற்களை வீசி அவர்களை ஆத்திரமூட்டியுள்ளனர். இராணுவத் தினர் பதில் நடவடிக்கையில் ஈடுபடு வார்களென்பதை நன்கு தெரிந்து கொண்டே இச் செயல்களில் இறங்கி யுள்ளனர். மாணவிகள் தாங்களாக இப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அவர்களின் பெற்றோர் இதற்கு அவர்களை அனுப்பி வைக்கவில்லை. இவர்களைக் கூட்டி வந்தவர்கள் யாரென்பதை விசாரணை மூலம் அறிந்துகொள்ள வேண்டும். இதே வேளை இந்த ஆர்ப்பாட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.க்களான செல்வி. தங்கேஸ்வரி, அரிய நேந்திரன், ஜெயானந்தமூர்த்தி, கனக சபை ஆகியோர் ஸ்தலத்தில் நின்றே தூண்டிவிட்டிருக்கின்றனர். இராணுவ அதிரடிப் படையின் பாதுகாப்போடு நடமாடும் இவர்கள், யாருடைய தேவைக்காக மக்களை இராணுவத் துக்கு எதிராகத் தூண்டி விட்டார்கள். இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை யடுத்து சிவிலுடை தரித்த தமது அதிரடிப்படைப் பாதுகாப்புடன் இந்த எம்.பி.க்கள் தப்பிச்சென்றுள்ளனர். இவர்களும் விசாரணைக்கு உட்படுத் தப்படவேண்டும். இதேவேளை வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டு களைத் தீர்க்காமல் கண்மூடித்தனமாக மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்த கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென்றும் மட்டக்களப்பு வெகுஜனப் பேரவை கோரியுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக இருப்பிடங்களை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலையான இல்லங்களை அமைப்பது தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் பல மேற்கொண்டதன் பின்னர், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் துறை அமைச்சு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு என்பவற்றுக்கு இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இது தொடர்பான வைபவம் கடந்த மூன்றாம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் துறை அமைச்சில் நடைபெற்றது. அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, தினேஷ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் மேற்படி அமைச்சுகளைச் சேர்ந்த செயலாளர்கள் உட்பட அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர். தலா நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் இவ் வைபவத்தின்போது கைச்சாத்திடப்பட்டன.

சந்திவெளியில் சந்திக்கு வராத சங்கதிகள் இதோ!

முறக்கொட்டாஞ்சேனையிலும் கிரி முட்டி என்ற இடத்திலும் இரு இராணுவ முகாம்கள் அமைந்திருப்பதால் அதனூ டாகப் பயணம் செய்ய முடியாத ஆயுத தாரியான புலிகள் இந்த இடங்களுக் கிடையில் ஊடறுத்துச் செல்லும் சந்திவெளி வீதியைப் பயன்படுத்துவதைக் கண்டறிந்த பின்னரே, அங்கு இராணுவச் சோதனைச் சாவடியை நிறுவினரென்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கருணா அணியினரை வேட்டையாடுவதற்கு இந்தப் பாதையையே அவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால்தான் இந்தச் சோதனைச் சாவடியை அகற்றுமாறு மக் களைத் தூண்டி விட்டு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். சந்திவெளி விநாயகர் வித்தியாலயத்துக்கு நூறு மீற்றர் அப்பா லிருக்கும் இராணுவ முகாமை அகற்றுமாறு கோராமல் சந்திவெளிச் சோதனைச் சாவடியை அகற்றக் கோரியதற்கான சூத்திரம் இதுதான். வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்கு மிடையில் பயணம் செய்து கொண்டிருந்த பஸ்கள் வழிமறிக்கப்பட்டு பலாத்காரமாகப் பயணிகள் இறக்கப்பட்டு அவர்களுக்குள் மறைந்து நின்றுகொண்டே புலிகள் இராணுவத்தினர் மீது கற்களை வீசியுள்ளனர். பஸ்களை நிறுத்தாவிட்டால் கொளுத்துவோமென்று சாரதிகளையும் நடத்துனர்களையும் புலிகள் எச்சரித்த ரென்றும் பயணிகள் தெரிவிக் கின்றனர். இந்தப் பஸ்கள் மீது அடித்துப் புலிகள் நிறுத்துவதைப் படம் பிடித்த ஊடகவியலாளர் எம்.ஜி.ஏ.நாசர் என்பவர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிக் கை முறிந்த நிலையில் தற்போது ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளார். இந்த ஊடகவியலா ளரின் வீடியோ கமெராவையும் புலிகள் அடித்து நொறுக்கியுள்ளனர்.

ஜனநாயகப் பொதுக் கட்டமைப்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்கும்

-அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வடக்கு, கிழக்கில் சுனாமி நிவாரண மற்றும் மீள்கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள அமைக்கப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்பு அரசியல் மற்றும் இனரீதியாகப் பன்முகத்தன்மையைக் கொண்டதாகவும் ஜனநாயகப் பாரம்பரி யங்களை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டுமென்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச் சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இப் பொதுக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதை நாம் வரவேற்கிறோம். புலிகளும் ஏனைய தரப்பு களும் இணைந்து ஜனநாயக ரீதியில் அமைக்கப்படும் இப்பொதுக் கட்டமைப்பு, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் வழிசமைக்கும் என்றும் அவர் சொன்னார். கிழக்கில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம் மக்களே. எனவே முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கிப் பொதுக் கட்டமைப்புக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

இந்தியா கவலை

இலங்கையின் இராணுவக் கட்டுப்பாட்டி லில்லாத பகுதியில் புலிகள் விமான ஓடுபாதையொன்றினை நிர்மாணித்திருப்பது குறித்தும் இரண்டு விமானங்கள் வைத்திருப்பது குறித்தும் இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். புலிகள் மேலும் விமானங்களைக் கொள்வனவு செய்ய முயற்சிக்கிறார்களென்று கிடைக்கும் தகவலும் தமக்கு வேதனையளிப்பதாக அப்பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் நல்லூரில் கடத்தப்பட்டார்

ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவரான எஸ்.இராமச் சந்திரன் என்பவர், யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடந்த எட்டாம் திகதி கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாக அவரது பெற்றோர் ஜெனீவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டிக்கும், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் முறையிட் டுள்ளனர். யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த மாணவர், வெள்ளவத்தையில் தமது உறவினர்களுடன் வசித்து வந்தார். யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தமது மகனைப் புலிகளே கடத்திச் சென்றதாகவும் சர்வதேச அமைப்புகளிடம் முறையிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் இது தொடர்பாக அவர்கள் முறையிட்டுள்ளனர். விசாரணை நடத்தி முடிவை அறிவிப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்த போதிலும், இதுவரை தமக்கு எவ்விததகவலும் கிடைக்கவில்லையெனப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் பெயர் விபரங்களைத் தருமாறும் அவர்களிடம் நிதி சேகரித்துத் தருமாறும் அவரிடம் கேட்கப்பட்டதாகவும் அதற்குத் தமது புதல்வர் மறுப்புத் தெரிவித்ததாகவும் பெற்றோர் கூறுகின்றனர். தமது மகனை விடுவிக்கு மாறு கோரி நல்லூரிலுள்ள அரசியல் அலுவலகத்துக்குத் தாம் பல தடவைகள் சென்று கோரியதாகவும் அங்குள்ளவர்கள் தாம் கடத்திச் செல்லவில்லையென்று கூறியதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

கிழக்கில் உகண்டா குழு

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் ஆயுத மோதல்கள் மற்றும் படுகொலைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கும் பிள்ளைகளுக்கும் உதவவென உகண்டா நாட்டிலிருந்து இத்துறை சார்ந்த நிபுணர் குழுவொன்று விரைவில் அங்கு வரவுள்ளது. ஒரு சில மாதங்கள் அங்கு தங்கவிருக்கும் இக் குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களின் சேமநலன்களைக் கவனிப்பதோடு உரிய ஆலோசனைகளையும் வழங்கவுள்ளனர்.

சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள்

கிழக்கில் சந்திக்குச் சந்தி இரா ணுவச் சோதனைச் சாவடிகளை அமைத்து வாகனங்களையும், சந்தே கத்துக்கு இடமானவர்களையும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் அப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் படுகொலைகளை நிறுத்த முடியுமென்று முப்படைத் தளபதிகள், தேசிய பாது காப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக் கையில் தெரிவித்துள்ளனர். அத்துடன் பொலிஸ் மற்றும் முப்படைகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

நிந்தவூரில் கருத்தரங்கு

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசியப் பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர் களுக்கான இலவசக் கருத்தரங்கு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளது. தென் கிழக்குக் கல்வி அபி விருத்திச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கிற்குச் சமாதானத்திற்கும் கல்வி அபிவிருத்திக் குமான அமைப்பு பிரதான அனுசரணை வழங்குகிறது. இலங்கை வெகுஜன ஊடக அமைப்பும் தினமுரசு 'பத்திரிகையும் இணை அனுசரணை வழங்குகின்றன. காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை இக்கருத்தரங்கு நடைபெறும்.

தினமுரசு விலை அதிகரிப்பு

காகிதாதிகள் மற்றும் பிரசுரச் செலவுகள் அதிகரித்திருப்பதால் தவிர்க்க முடியாதபடி தினமுரசு வாரமலரின் விலையை ஒன்றரை ரூபாவினால் அதிகரிக்க வேண்டியேற்பட்டுள்ளது. அடுத்த வாரத்திலிருந்து (614 ஆவது) தினமுரசின் விலை 18.00 ரூபாவாகவிருக்கும் என்பதை வாசகர் களுக்கு அறியத் தருகிறோம்.

(ஆ-ர்)

சிறுவர் போராளிகளைப் பாதுகாக்க ஐ.நா.தீர்மானம்

இரண்டொரு வாரங்களில் சிறுவர்களை ஆயுதப் படைகளில் இணைக்கும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபை பல தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கலாமென Human Right Watch எனப்படும் மனித உரிமை அமைப்பின் சிறுவர் பிரிவுக்கான பிரதிநிதி ஜோ பெக்கர் லண்டனில் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிருபருக்குத் தெரிவித்தார்.

சிறுவர்களை ஆயுதப் படைகளில் இணைக்கும் பல அரசியல் அமைப்புகள் ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் இயங்கி வருகின்றன. இவற்றின் விபரங்கள் இதுவரை பாதுகாப்புச் சபையின் பரிசீலனையிலிருந்து வந்தது. எவ்வாறான தடைகளை விதிக்கலாம் என்பதைத் தீர்மானிப்பதில் பல இழுபறிகள் இருந்து வந்தன. தற்போது பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கு வந்திருப்பதாக ஜோ பேக்கர் தெரிவித்துள்ளார்.

இப் பட்டியலில் புலிகள் அமைப்பின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையின் சிறுவர் பிரிவான 'யூனிசெவ்' உடன் புலிகள் ஒப்பந்தமொன்றை மேற் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை அவர்கள் பல தடவை மீறியுள்ளார்கள். ஐ.நா. சபையின் சிறுவர் பிரிவின் பொறுப் பதிகாரி ஒலாரா ஒட்டுண்ணு பல தடவை புலிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தி யிருந்தார். இதேபோன்று பல குற்றச்சாட் டுகளைத் தாமும் பல ஆதாரங்களுடன் நிரூபித்திருந்ததாகவும் புலிகள் சர்வதேச சட்டங்களைத் தொடர்ந்தும் அலட்சியம் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

எவ்வாறான தடைகள் புலிகளுக்கு எதிராகப் போடப்படலாமெனக் கேட்டபோது, வெளிநாடுகளுக்கான பயணங்களைத் தடை செய்தல், வெளிநாடுகளில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை முடக்குதல், சர்வதேச நிறுவனங்களுடனான தொடர்புகளைத் தடைசெய்தல் எனப் பலவகைப்பட்ட நடவடிக் கைகள் எடுக்கப்படலாம். தொடர்ந்தும் மீறுவதாகக் குற்றம் சாட்டப்பட்டால் சர்வதேச மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகள் பல்வேறு அமைப்புகள் சார்ந்ததாக இருந்த போதிலும் புலிகள் தொடர்பாக வேறு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என வினவியபோது, தாம் ஓரிரு மாதங்களில் இலங்கை செல்லவுள்ளதாகவும், அங்குள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுடன் சிறுவர்கள் பிரச்சினை தொடர்பாக அதிக அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு தாம் வேண்டப்போவதாகவும் தெரிவித்த அவர், அங்கு செயற்படும் அரசு சார்பற்ற நிறு வனங்கள் இப் பிரச்சினையில் மெத்தனமாக நடந்துகொள்வதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப் படலாம் என்ற சாக்குப்போக்கை புலிகள் தெரிவிப்பதாகவும், அவர்கள் சர்வதேச சட்டங்களை மீறுகிறார் கள் என்ற உண்மையை அவர்களுக்கு வற்புறுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

சமீபத்தில் கனடிய பாராளுமன்றக் குழு மரியா மினா என்ற பெண் பாராளுமன்ற உறுப்பினரின் தலைமையில் இலங்கை சென்றிருந்ததாகவும், வெகு விரைவில் கனடிய வெளிநாட்டமைச்சர் இலங்கை செல்ல உள்ளதால் இப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அபிப்பிராயங்களை அந்த அமைச்சருக்குத் தெரிவிக்க தாம் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

முரசம்

தாய்மையைப் போற்றும் அன்னையர் தினம்!

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

முதலாவது முரசிலிருந்து இன்று வரை அறுநூறாவது முரசையும் தாண்டி வெற்றிகரமாகப் பணியாற்றுவதற்கு வாசகர்களாகிய உங்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இந்த மகத்தான வெற்றிக்குப் பின்னால் முரசு பல அச்சுறுத்தல்களையும், எதிர்ப்புகளையும் சந்தித்து வந்துள்ளது என்பதும், தொடர்ந்தும் எம்மோடு பயணிக்கும் உங்களுக்கும் தெரிந்திருக்கும். இந்த நீண்டகால ஓட்டத்தில் அவ்வப்போது கழுத்தை நெரிக்கும் விலைவாசி ஏற்றங்களும் தொடரவே செய்கின்றன. அதன் தொடர்ச்சியாக தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

பத்திரிகை காகிதாதிகள் மற்றும் அச்சகப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக முரசின் வீற்பனை விலையிலும் சிறு அதிகரிப்பைச் செய்யவேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இதுவரை காலமும் ரூபா 16.50 ஆக வீற்பனை செய்யப்பட்ட முரசு, 614ஆவது இதழிலிருந்து 18.00 ரூபாவாக விலையதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. வாசகர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் எமக்கு மிக நெருக்கமாக இருப்பதால் நெருக்கடிகளை எதிர்கொண்டும் முரசு வெற்றிவாகை சூடும்.

உண்மைகளுக்காகவும், நியாயங்களுக்காகவும் ஓங்கிக் குரல் கொடுப்பதோடு எழுத்துலகில் பெரும் சவாலையும் எதிர்கொண்டு முரசு பயணிக்க முடிகிறதென்றால், இரும்புக்கு நிகரான முரசு வாசகர்களின் பங்களிப்பேயன்றி, வேறு எதுவுமில்லை. ஆகவே, எதிர்காலத்திலும் சூடு - சுவை - சுவாரஸ்யத்தோடு முரசின் பணி தொடரும்.

இதேவேளை, தாய்மையடையும்போதே ஒரு பெண் பூரணமடைகிறாள். இப் புனிதமான அன்னையர்களைக் கௌரவிக்கும் மே - 8 அன்னையர் தினத்தை முன்னிட்டு அனைத்து அன்னையருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இந்த வேளையில், யுத்தத்திற்கு முன்னும் பின்னும், சுனாமிக்கும் கணவனை, பிள்ளைகளை இழந்து, அனாதைகளாகவும், விதவைகளாகவும் ஆகிப்போன - ஆக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆறுதல்களும் உரித்தாகட்டும். தேசியத்தின் பெயரால் ஒவ்வொரு நாளும் நிகழும் படுகொலைகளினால் ஒவ்வொரு நாளும் ஒரு பெண் விதவையாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். இந்தக் கொடுமைக்கு எதிராக அன்னையர்கள் பொங்கி எழும்போதுதான் விதவைகளின் நீண்ட பட்டியல் முற்றுப் பெறும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

நடுப்பக்கம்

சிவராமும் சின்ன பாலாவும்

இலங்கைத் தமிழ்த் தேசியப் பரப்பில் தாம் சார்ந்த கொள்கைகளுக்காக, கோட்பாடுகளுக்காக அல்லது அவர்களின் எழுத்துக்களுக்காகக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் வரிசையில் இப் போதைக்குக் கடைசியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பவர் டி.சிவராம். இவ் வருடம் கொலை செய்யப்பட்ட முதலாவது தமிழ் ஊடகவியலாளர் இவராவார். கடந்த வருடம் இரண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவர் ஐ.நடேசன். மற்றவர் சின்னபாலா என்று அழைக்கப்பட்ட பாலநடராஜ ஐயர். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட நடேசன் எந்தப் பத்திரிகையிலோ அல்லது இலத்திரனியல் ஊடகங்களிலோ தொழில்சார் ரீதியில் பணியாற்றியவரல்லர். மட்டக்களப்பு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றி வந்த இவர், ஒரு பத்தி எழுத்தாளராகவே செயற்பட்டு வந்தார். வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வரதராஜப்பெருமாள் பணியாற்றி வந்த காலத்தில், அந்த மாகாண சபையின் ஊடகத்துறைப் பணிப்பாளராகப் பணியாற்றியவர் நடேசன். மாகாணசபை கலைக்கப்பட்ட பின்னர் வரதராஜப்பெருமாளும், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். ஆகிய மாகாணசபையில் அங்கம் வகித்த கட்சிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் அவர்களது குடும்பத்தினரும் இந்தியாவுக்குச் சென்றனர். இதனையடுத்துத் திருமலையிலிருந்து தனது சொந்த ஊரான நெல்லியடிக்குச் சென்ற நடேசன், புலிகளால் கைது செய்யப்பட்டார். பின்னர் நடத்தப்பட்ட பேரப் பேச்சுக்களையடுத்து நடேசன் விடுவிக்கப்பட்டார். இதனையடுத்து இறுதிவரை அவர் புலிச்சார்புப் பத்தி எழுத்தாளராகவே பணியாற்றி வந்தார். கருணா - பிரபா அணி முரண்பாடு கடந்த வருடம் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் உச்சக்கட்டத்துக்கு வந்தபோது சிறிது ஈடாடிய அவர், பின்னர் தன்னைப் பிரபா அணிச் சார்புப் பிரசாரகராக நிலை நிறுத்திக் கொண்டார்.

பாமன்கடையில் சுட்டுக்கொல்லப்பட்ட சின்னபாலாவின் சடலத்தின் முன்னால் மனைவி கதறியழும் காட்சி

கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பம்பலப்பிட்டியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டு எங்கேயோ வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சிவராமின் சடலம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற வளாகத்துக்கு அப்பால் கண்டுபிடிக்கப்பட்டது. நடேசனைப் போல் சிவராமும் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்ற போதிலும், கருணா - பிரபா முரண்பாடு வெடித்துப் பிளவுண்டபோது கருணாவுக்கெதிராகப் பிரபாகரனின் பக்கம் சார்ந்து எழுதியவர், இறுதிவரை பிரபாவுக்காகவே எழுதி வந்தவர் சிவராம். சிவராம் நடேசனைப் போலன்றி ஒரு போராளியாகவே தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தவர். தனது மாணவப் பருவத்திலேயே புளொட் இயக்கத்தோடு இணைந்து கொண்ட இவர், புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளராகவும் பணிபுரிந்தவர். ஒரு காலத்தில் போராளியாகவும் பிரசாரகராகவும் செயலாற்றினார். டாக்டர் மனோராணி சரவணமுத்துவின் புதல்வரும் கடத்திக் கொலைசெய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளருமான ரிச்சர்ட் டீ சொய்ஸாவோடு பின்னாட்களில் இவர் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கத்தின் காரணமாக 'தராகி' என்ற பெயரில் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

சின்னபாலா யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது பதினாறாவது வயதிலேயே மாணவனாக இருந்த காலத்தில் மாணவர் பேரவையோடு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டவர். பின்னாட்களில் ஈரோஸோடு இணைந்து மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். அக் காலகட்டத்தில் ஆயுதப் பயிற்சி பெற்ற இவர் ஒரு முன்னணிப் போராளியாகவும் திகழ்ந்தார். ஈரோஸ் தலைவர் வே.பால குமாரன் தனது இயக்கத்தைக் கலைத்துவிட்டுப் புலிகள் இயக்கத்தோடு இணைந்து கொண்டபோது சிறிது காலம் ஒதுங்கி வாழ்ந்த இவர், பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாதம்' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இணைந்து சில வருடங்கள் தொழில்சார் பத்திரிகை யாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த போது 'ஈழநாதம்' ஆசிரியபீட உறுப்பினர் கள் பிரபாகரனுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தில் சின்னபாலாவும் காணப்படுகிறார். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப்.புடன் இணைந்து பிரதேச சபைத் தேர்தலிலும் போட்டியிட்டார். சிறிதுகாலம் ஒதுங்கியிருந்த இவர், கொழும்பு வந்தபோது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியோடு தன்னை இணைத்துக் கொண்டார். இக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினரான இவர், மேற்படி கட்சியின் ஊடகப் பிரிவுச் செயலாளராகவும் பிரசாரச் செயலாளராகவும் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். கொழும்பு, பாமன்கடையில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி காலை சுட்டுக் கொல்லப்பட்டார். தனது மகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக ஆட்டோ வொன்றினை எதிர்பார்த்து வீட்டிலிருந்து வந்தபோதே, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்று விட்டனர். இவரும் சிவராமைப் போல தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை வாய்ந்தவர்.

ஐ.நடேசன், சின்னபாலா, சிவராம் ஆகிய மூன்று ஊடகவியலாளர்களின் சடலங்களும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வீதியோரங்களில் கிடந்தன. இன்றுவரை இம் மூவரின் கொலை தொடர்பாக எவருமே கைது செய்யப் படவில்லை. சின்னபாலாவும், சிவராமும் தமது 47ஆவது வயதிலேயே கொல்லப்பட்டிருக்கின்றனர். இருவருக்குமே மூன்று பிள்ளைகள். சின்னபாலாவுக்கு மூன்றும் பெண் பிள்ளைகள். சிவராமுக்கு இரு பெண் பிள்ளைகளும் ஒரு புதல்வரும் உண்டு. சின்னபாலா கொல்லப்பட்டபோது அவரது மூத்த புதல்வியின் வயது 14. சிவராம் கொலையுண்டபோது அவரது மூத்த புதல்வியின் வயது 15.

ஆக, பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறைக்கெதிராக, அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராக தமிழ்த் தேசியத்தின் விடுதலை வேண்டி மாணவ காலத்திலேயே போராடப் புறப்பட்ட இருவர், தாம் சார்ந்து நின்ற கொள்கை களுக்காகவும், செயற்பாடுகளுக்காகவுமே சுட்டுத்தள்ளப் பட்டிருக்கிறார்கள். ஆரம்ப காலங்களில் இருவருமே நெருக்கமான அமைப்புகளில் இணைந்து ஒரே நோக்கத்துக் காகப் போராடினார்கள். பின்னாட்களில் - அதாவது, அவர்கள் கொலை செய்யப்பட்ட போது - ஒரே தமிழ்த் தேசியத்துக்காக இரு வேறு தளங்களிலிருந்து செயற்பட்டார்கள்.

சிவராம் கொலையுண்டு வீதியோரத்தில் கிடந்தபோது, அவரது சடலத்துக்கு முன்னால், அவரது மகள் கத்திக் குளறிய காட்சி, இந்த நாட்டின் சக்தி மிக்கதென்று கூறிக்கொள்ளும் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டபோது பார்த்தவர்களின் மனது விம்மி வெடித்திருக்கும். நெஞ்சங்களை நெக்குருக வைத்திருக்கும். இந்த வேதனைமிக்க காட்சி சகல தமிழ்ப் பத்திரிகைகளிலும் முன் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளிலும் கூடப் பிரசுரிக்கப்பட்டன. மனிதர்கள், குறிப்பாக ஊடகவியலாளர்கள் தாம் கொண்டிருக்கும் கருத்துக்களுக்காகக் கொல்லப்படும் கோரக் காட்சியையும் அவர்களின் உடன்பிறப்புக்கள் கண்ணீர் விட்டுக் கதறியழும் சோகக் காட்சிகளையும் படம் பிடித்துக் காட்டிய ஊடகங்களுக்கு சபாஷ் போடலாம். ஆனால், மனிதர்களுக்கு இறந்த பின்னர் 'மா' என்றும், 'வேம்பு' என்றும் பட்டம் கொடுக்கும் பிரகிருதிகளைப் பாராட்டும் ஊடகங்களே சின்னபாலாவின் மூன்று பெண் பிள்ளைகளும் தெருவோரத்தில் சடலத்துக்கருகே வீழ்ந்து அழுத காட்சியை மட்டும் உங்களால் படம் பிடிக்க முடியாமல் போனதேன்? இந்தச் சோகக் காட்சியை ஊடகங்கள் உலகுக்கு எடுத்துக்காட்டத் தவறியதேன்? கதறியழுத சிவராமின் புதல்விக்கும், சின்னபாலாவின் புதல்விக்குமிடையில் இருப்பது ஒரேயொரு வித்தியாசம்தான். சிவராமின் புதல்வி நவீன மோஸ்தரில் ஆடை அணிந்திருந்தார். சின்னபாலாவின் புதல்வி பாரம்பரிய தமிழ் முறைப்படி ஆடை அணிந்திருந்தார். இரு தரப்பு இதயங்களுமே தந்தையர்களின் இறப்பைக் கண்டு வெடித்துச் சிதறியிருக்கும்.

சின்னபாலாவுக்கு முன்னரேயே நடேசன் கொல்லப் பட்டுவிட்டார். நடேசன் கொலையுண்டபோது சின்னபாலாவின் பேனா இரத்தக் கண்ணீர் வடித்துக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்து எழுதியது. கருத்துக்களுக்காகச் சக ஊடகவியலாளன் ஒருவன் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டித்தவர் சின்னபாலா. ஆனால், சிவராம்....? சின்னபாலா கொல்லப்பட்டபோது ஏன் சிவராமின் பேனா கண்டனம் தெரிவிக்கவில்லை? கண்ணீர் வடிக்கவில்லை? எந்தப் பக்கம் சார்ந்து எவன் எழுதுகிறான் என்பதைப் பார்த்தே மாமனிதரா? துரோகியா? எனத் தாரதம்மியம் பார்த்துப் பட்டம் சூட்டும் தரப்பினரைச் சேர்ந்தவர் என்பதாலா?

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கும், கிழக்கும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களுக்கு உள்ளக சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கோட் பாடுகளைத் தழுவியே இந்த இரு ஊடகவியலாளர்களும் போராடினார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னர் சின்னபாலா சார்ந்து நின்ற இயக்கங்களும் தனிநாடு கோரித்தான் போராடின. 1987 காலப் பகுதியில் உள்ளக சுயாட்சியை ஏற்றுக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்துடனும், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, வடக்கு - கிழக்கு பிரிக்க முடியாத இணைப்பு என்ற மூலக் கோட்பாட்டை முன்வைத்து உள்ளக சுயாட்சியை வலியுறுத்திய ஈ.பி.டி.பி.யோடு 1990 காலப் பகுதியில் இணைந்தும் தனது போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார் சின்னபாலா. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னரும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்ற சிவராமின் புலிகள் இயக்கம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் உள்ளக சுயாட்சியை ஏற்றுக்கொண்டதாக உலகுக்கு அறிவித்தது. ஆக, உள்ளக சுயாட்சிதான் உண்மை யிலேயே புலிகளின் இலக்கு என்றால், இருவரினதும் பொது இலக்கு ஒன்றுதான். போராட்ட வழிமுறைகளில் மட்டும்தான் மாற்றமா? மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைச் சுட்டுக்கொன்று கொண்டே உள்ளக சுயாட்சியைக் கோருவது சிவராம் சார்ந்த புலிகளின் போராட்ட வழிமுறை. கருத்துக்களைக் கருத்துக்களால் மோதி தமிழ் மக்களின் போராட்ட இலக்கை அடைவது சின்னபாலா பின்னாட்களில் சேர்ந்து இயங்கிய அமைப்புக்களின் தூரநோக்கு.

சிவராம் முதன் முதலில் அரசியல் கட்டுரைகள் எழுதத் தொடங்கியது மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த முதலாவது பிராந்தியத் தினசரியான 'தினக்கதிர்' பத்திரிகையில்தான். பின்னர் இந்தப் பத்திரிகை அலுவலகம் குண்டர்களால் தாக்கப்பட்டதும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு 'ஈழநாதம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதும் பழைய சங்கதிகள். 'தினக்கதிர்' பத்திரிகை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு ஏன் 'ஈழநாதம்' ஆக மாற்றப்பட்டது? மாற்றுக் கருத்துக்களைத் தரும் நோக்கிலா? அல்லது ஒரே நாதம் மட்டும்தான் ஒலிக்க வேண்டுமென்பதற்காகவா?

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தவர்கள் ஐ.நடேசனும், இரா.துரைரத் தினமும், சண்.தவராஜாவும் என்று குறிப்பிடப்படுகிறது. நடேசனின் கொலைக்குப் பின்னர், அதனையே சாட்டாகப் பயன்படுத்தி, சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த சுனந்த தேசப்பிரியாவின் கை, கால்களைப் பிடித்து துரைரத்தினமும், தவராஜாவும் பிரான்ஸில் புகலிடம் பெற்றுவிட்டார்களென்று கிழக்கிலங்கை ஊடகவியலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். துரைரத்தினம் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை நிர்வாக சேவை அதிகாரி தர்மகுலசிங்கத்தின் உடன் பிறந்த சகோதரரென்று கூறப்படுகிறது. தர்மகுலசிங்கம் முன்னர் மட்டக்களப்பில் உதவி அரசாங்க அதிபராகவும் பின்னர் முல்லைத்தீவில் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றித் தற்போது கொழும்பில் பணிபுரிகிறார். "சிவராமின் மறைவு ஜெயானந்தமூர்த்திக்கு (முன்னாள் பத்திரிகையாளர், இந்நாள் எம்.பி.) பேரிழப்பென்றே சொல்ல வேண்டும். ஜெயானந்தமூர்த்தி அரசியலுக்கு வந்ததும் நின்று பிடிப்பதும் சிவராமின் துணையில்தான்" என்று மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'ஈழநாதம்' என்ற புலிச்சார்புப் பத்திரிகை எழுதியிருக்கிறது. என்ன நோக்கத்தோடு 'ஈழநாதம்' இப்படி எழுதியிருக்கிறதோ தெரியவில்லை. பதவி பறிபோகுமா? அல்லது.....? அந்தப் பத்திரிகைக்கே அது வெளிச்சம்!

அற்புதன் வானொலியில் நடத்திவந்த 'மக்கள் குரல்' நிகழ்ச்சிக்குக் குரல் கொடுத்த சிம்மக் குரலோன் கே.எஸ்.ராஜா சயனைட் கொடுத்துக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தபோது, திக்கம் வடிசாலை உற்பத்தி செய்த சாராயத்துக்குப் "புலி மார்க் சாராயம், இன்றே வாங்கி அருந்துங்கள்" என்று கேலி செய்ததற்காகவா சயனைட் கொடுத்து கே.எஸ்.ராஜா கொல்லப்பட்டார்?

நடேசன் கொல்லப்பட்டபோது "ஒரு நடேசனையோ ஒரு சிவராமையோ கொலை செய்வதன் மூலம் அவர்களின் இலட்சியத்தைக் கொன்று விட முடியாது" என்று சிவராம் தெரிவித்திருந்தார். அது உண்மையிலும் உண்மை. இந்தப் பட்டியலில் சின்னபாலாவுடன் அற்புதன், கே.எஸ்.ராஜா, அன்ரனி மரியதாஸ், நிமலராஜன், ஐ.சண்முகலிங்கம், செழியன் பேரின்பநாயகம் ஆகியோர்களையும், இன்னும் கருத்துக்களுக் காகக் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நூற்றின்

சந்திரிகா



விமல் வீரவன்ச

ரணில்

டக்ளஸ் தேவானந்தா



பிரபாகரன்

பொதுக்கட்டமைப்பு சாத்தியம்?

இலங்கையில் வாழ்கின்ற அனைவரின் கருத்துக்களும் பொதுக் கட்டமைப்புப் பற்றியதாகவே உள்ளது. அதாவது இலங்கையைப் பொறுத்தவரை சுனாமி என்ற சொல்லை வீடவும் பொதுக் கட்டமைப்பு பீரபலமாகியுள்ளது. வெறும் வாய்க்கு அவல் கீடைத்தது போல் ஒவ்வொருவரும் பொதுக் கட்டமைப்பைத் தமது தளத்திலிருந்து கொண்டு அசைபோடுகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான பொதுக் கட்டமைப்பானது உதவி வழங்கும் நாடுகள் தரும் நிதி உதவிகளைக் கொண்டு செயற்படுத்தப்படும் ஒரு அமைப்பு முறையாகும். இதில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அரசாங்கத்தோடு புலிகளும் மீள்கட்டுமாணப் பணிகளில் இணைந்துகொள்ள வேண்டுமெனக் கோரி வருகின்றனர். அரசாங்கத்தால் வீடுவிக்கப்படாத பகுதிகளும் உள்ளடங்குவதால் புலிகளையும் உள்ளடக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு என்பதால் அதன் நியாயத்தை அரசு உணர்ந்து கொள்வதாகத் தெரிகிறது. ஆனால் புலிகள் அரசின் பங்களிப்பை வீடவும் தமது பிரதிநிதித்துவம் அதிகமாக இருக்க வேண்டும் எனக் கேட்டு வருகின்றனர். இதன் காரணமாகவே பொதுக் கட்டமைப்பு விவகாரம் சுனாமி தாக்கி நான்கு மாதங்கள் கழிந்து வீட்ட நிலையிலும் இன்னும் இழுபட்டுக் கொண்டிருக்கிறது. இப் பொதுக் கட்டமைப்பானது சுனாமி தாக்கிய கரையோரப் பகுதிக்கு உட்பட்ட 2 கிலோ மீற்றர் பரப்புக்குள்ளேயே மீள் நிர்மாணப் பணிகள் செய்ய முடியும். அதைத்தாண்டி வேலைகளை வீஸ்தரிக்க பொதுக் கட்டமைப்புக்கு அதிகாரமிருக்காது. பொதுக் கட்டமைப்பு ஊடான மீள்கட்டுமாணப் பணிகள் குறித்த தீர்மானங்கள் முன்று மட்டத்திலிருந்து திட்டமிடப்படும். அதாவது மத்திய அரசு, மாவட்ட மட்டம், பிராந்திய மட்டம் என்பவையாகும். இந்த அமைப்புகள் புலிகள் உள்ளடங்கலாக தீர்மானிக்கும் வேலைகளை அரசின் இயந்திரம் நடைமுறைப்படுத்தும். தவிரவும் இவ்வொப்பந்தமானது ஒரு வருட காலத்துக்கே செயற்படுத்த முடியும் என்றும் இதுவரை வெளியாகியுள்ள தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

போர்நிறுத்த ஒப்பந்தமானது மீக மீக ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது. அதைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் புலிகளைச் சமரசப்படுத்துவதற்கு பொதுக் கட்டமைப்பீல் புலிகளை பல எதிர்ப்புக்கு மத்தியிலும் உள்வாங்க முயற்சிக்கிறது. ஆனால் புலிகளோ அரசாங்கத்தை சமரசப்படுத்தும், எவ்விதமான நடவடிக்கையையிடவும், மேலும் மேலும் போர் முழக்கங்களையே தெரிவித்து வருகின்றனர். இந்தக் கடைசிக் கட்டத்தில் இப்பொதுக் கட்டமைப்பு ஊடாக இருதரப்பும் ஒரு இணப்பாட்டுக்கு வருவதோடு பேரழிவைச் சந்தித்த மக்களுக்கு உதவ வேண்டுமென்பதே தற்போதைய தேவையாகும். பலத்த சவால்களுக்கு முகங்கொடுத்தபடி பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் பகீரதப் பீரயத்தனத்தைப் புலிகள் சரியாகப் பயன்படுத்துவதன் ஊடாகவே மக்களுக்கு உதவும் தமது நல்லெண்ணத்தை தெளிவுபடுத்தவும், மீண்டுமொரு யுத்தம் மூளாதிருப்பதனை உறுதிப்படுத்தவும் முடியும். இச்சந்தர்ப்பத்தில் புலிகள் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பதே பல மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

சர்வதேச சமூகம்

தற்போதைய அவசரத்தேவை சுனாமிப் பேரலைகளால் அழிந்துபோன இலங்கை கரையோரப் பகுதிகளில் மக்களை மீள்குடியமர்த்துவதும் அழிந்த குடியிருப்புக் தொகுதிகளைமீளகட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதுமாகும். இதற்காக தாம் வழங்கும் நிதியை இலங்கை அரசுக்கு வழங்குவதே தமது வாக்குறுதியாக தமது அரசியல் தலையீடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதுமே பீரதான நோக்கமாகக் கொண்டு உதவும் நாடுகள் செயற்படுகின்றன. தமது வலைக்குள் புலிகள் வீழுவார்கள் என்ற நம்பீக்கையில் இலங்கை அரசுக்கு பணத்தைக்காட்டி இக்கட்டு நிலைக்குள் தள்ளி வீடுகின்றன. புலிகள் இதிலிருந்து நழுவீப் போகின்ற போது இலங்கை அரசுக்கு ராஜதந்திர ரீதியில் துரோகமிழைத்த தலைகுனிவை நிச்சயம் அனுபவிக்கப்போகிறார்கள்.

இலங்கை அரசு - (ஜே.வி.பி. தவிர்ந்த)

சமாதானமும் இல்லாமல் யுத்தமும் இல்லாமல் சுனாமியின் பேரழிவுக்கும் முகம் கொடுத்திருக்கும் நாட்டை இறைமையுள்ள அரசு என்ற வகையில் மீளக்கட்டியமைக்க வேண்டிய பாரிய கடமையும், பொருளாதார நெருக்கடியும், நாட்டை பேயாட்டம் ஆட்டுகையில் முன்னோக்கியும் நகர முடியாமல் பின்னுக்கும் வரமுடியாமல் திண்டாடும் அரசு, சர்வதேச சமூகத்தின் நிதி உதவிக்காக அவர்களின் இழுப்புக்கெல்லாம் இழுபட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள், பங்காளிகளின் பழிச் சொல்லுகள், புலிகளின் நேர்மையற்ற அரசாங்கங்கள் என்பன இவ் அரசாங்கத்துக்கு பொதுக் கட்டமைப்பையாவது நிறுவி அதனூடாகக் கீடைக்கும் நிதி உதவியைக் கொண்டு நாட்டைப் புனரமைப்பதோடு யுத்த வலயுறுத்துகின்றனர். ஒரு பயங்கரவாத அமைப்பை எப்படி ஒரு இறைமையுள்ள அரசின் செயற்பாடுகளீல் இணைத்துக் கொள்ளும்படி இவர்களால் அழுத்தம் முழுக்கத்திலிருந்து புலிகளைப் பின்னுக்குத் தள்ளும் ஒரு முயற்சியாகவே பொதுக்கட்டமைப்பைப் பார்க்கிறது.

ஜே.வி.பி.

அரசின் பங்காளியாக இருக்கும் அதே நேரம் ஜனநாயகத்தையும் பன்முகத்தன்மையையும் நிராகரிக்கும் புலிகளிடம் அரசு எவ்வகையான ஒப்பந்தங்களையும் செய்வதை விரும்பாத சக்தியாக இருக்கிறது.

ஒரு இறைமையுள்ள அரசு இயந்திரத்தின் ஊடாக மீள் கட்டுமாணப் பணிகளை செய்யமுடியும் என உறுதியாக நம்புகிறது. தெற்குப் பகுதியில் சுனாமிப் பேரழிவுகளை மீள் கட்டுவதில் பெரும் பங்கை வகிக்கும் இவர்களின் கருத்தில் நியாயமுண்டு. ஒரு புறத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கையில் ஈடுபடும் புலிகள் மறுபுறத்தில் தமது அரசியல் எதிரிகளையும் படுகொலை செய்து வருகின்றனர். அதுபோக, அண்மைக்காலமாக அரசின் அதிகாரிகளையும் படுகொலை செய்கின்றனர். இவ்வாறானவர்களுடன் எவ்வாறு இணைந்து பணியாற்ற முடியும். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எனும் போர்வையில் புலிகள் சர்வதேச அமைப்புகளிடம் பணம் வசூலிக்கின்றனர். நோர்வேயின் பூரண அனுசரணையுடன் அவர்களின் வாகனங்களிலேயே நடமாடுகின்றனர். மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வே போன்ற நாடுகள் இவ்வாறு ஒருபக்கச் சார்பாக புலிகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாகவே பொதுக் கட்டமைப்பில் புலிகளையும் உள்வாங்க வேண்டும் என கொடுக்க முடியும் என்று ஜே.வி.பி.அழுத்தமாக தமது வாதத்தை முன்வைத்து வருகிறது. அப்படி ஒரு பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டால் அரசிலிருந்து தாம் வீலகிக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

அலசுவது - மதியுகி -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.

பொதுக்கட்டமைப்பில் புலிகளின் கோரிக்கைக்கு அமைய அவர்களை உள்வாங்க முடியாது என்று அரசு பீடிவாதமாகக் கூறுகையில், தமது அரசியல் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு புலிகளையும் பொதுக் கட்டமைப்பில் சேர்க்கவேண்டும். அப்படி ஒரு பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டால் தமது பூரண ஆதரவு உண்டு எனத் தெரிவித்து வந்த ஐ.தே.க.இப்போது ஜனாதிபதி உடன்படுகின்ற போது வீழி பீதுங்கி நிற்கிறது. புலிகளோடு பொதுக்கட்டமைப்பை நிறுவப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துவிட்டு அதுபற்றி கலந்துரையாட எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு வீடுத்தபோது அதை நிராகரித்து தமது சுயரூபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

அதிரடி அய்யாத்துரை

அடைக்கலத்தாரின்ர பொலிரிக்ஸைப் பார்த்தி யளோ. தன்ர தலைவருக்கும் விசுவா சமில்லாம, உப்ப அடைக்கலம் புகுந்திருக்கும் அவையின்ர ஏகத் தலை மைக்கும் விசுவாசமில்லாம இருக்கிறார். உண்மையான ரெலோவின்ர தலைவர் சபாரத் தினத் தாரின்ர பத்தொன்பதாவது நினைவு நாளண்டு ஒரு கூட்டத்தையும் கூட்டி ஒரு விளம்பரத்தையும் போட்டிருக்கிறார். அதில 'பகைவரை வென்றும் உன் விடியல் விடியும் வரை விழித்திருப்போம். நீ ஊட்டிய உணர்வுகள் உரம்சேர்க்க உறுதியுடன் உமைத்தொடர்வோம்' எண்டு வசனமும் எழுதியிருக்கிறார். அப்பிடி யெண்டால் இண்டைக்கு இல்லாட்டில் எண்டைக்காவது ஒருநாள் சந்தர்ப்பம் வாச்சுதெண்டால் ரெண்டெழுத்தாரிண்ட தலைவருக்கு வேட்டு வைப்பன் எண்டதைப் பூடகமாகச் சொல்லிப் போட்டார் எண்டு ரெலோ பெடியள் கேக்கினம். தலைவரைக் கொண்ட வனிண்ட அடி கழுவி வயிறு கழுவுற இவரா அப்படிச் செய்வார் எண்டு புலம் பெயர்ந்து வாழிற பழைய ரெலோ பெடியள் கெட்ட ஆத்திரத்தில இருக்கினமாம். தூள்வித்து செல்வத்தோடை அடைக்கலம் புகுந்து வாழ்வீராக.....

காரைநகரைப் பிறப்பிட மாகக் கொண்ட தவம் எண்டவர் பிரான்சுப் பிராங்போர்ட்டில ரெண்டெழுத்தாருக்கு பணம் வசூல் செய்து கொண்டிருக்கிறாராம். தேன் எடுக்கிறவன் கையை நக்காமல் இருப்பானோ? தன்ர மச்சாளுக்கு மணவாழ்க்கையும், மச்சானுக்கு ஓட்டோவும் என்று வவுனியா பூந்தோட்டத்தில உல்லாசமாக வாழ வச்சிருக்கிறாராம். என்னப்பா திடீரெண்டு இதெல்லாம் எண்டு கேட்டவரிட்டை, மச்சான் கக்கிப்போட்டாராம். வசூல் நடத்திறார்; வாரதில கொஞ்சம் வங்கிக்கு அனுப்புறார். எங்கட யோகம் இராஜ யோகம் எண்டிறாராம். தவா! நீ தவமிருந்தாலும் உந்தப் பதவி வெளியாலை கிடைக்காது. ஜமாய் யப்பா ஜமாய்.

தமிழான நெட்டை நடத்தி வந்த சிவராம் சிவபதம் அடைந்த பிறகு தமிழான நெட்டை எப்படி நடத்தப்போயினம் எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்க, தலை வீங்கின ஒரு சிலர் முண்டியடிச்சுக் கொண்டு பேரைக் கொடுத்து இருக்கினமாம், தாங்கள் இருந்ததை விடவும் சிறப்பா நடத்திறம் எண்டு. என்ன பகிடியெண்டால் அதில ஒரு சில ஊடகக்காரரும், பேராசிரியர்களும் மல்லுக்கட்டினதுதானாம்.

எண்டாலும் சிவமானராமர் அளவுக்கு இரகசியத்தோடையும், விசுவாசத்தோடையும் அதைச் செய்ய மாட்டினம் எண்டிட்டு வன்னியில இருந்தே ஒரு குரூப்பிடம் ஒப்ப டைப்பது பற்றி வன்னித் தரப்பு யோசித்து வருகுதாம். சப்போஸ் அதுமட்டும் நடந்துதெண்டால், இனி யாரையும் வெடி வச்ச உடனேயே ஈரம் காயமுதலில வெப்சைட்டில பார்க்கலாமெல்லோ....அப்ப இனி இரத்தம் சுடச்சுட செய்திதானாக்கும்.....

அதிகார அம்மணி பொதுவான கட்டமைப்பை நிறுவியே தீருவதெண்டு ஒற்றைக்காலில நிக்கிறா. சிவப்புச் சட்டைக் காரரும், காவிக் காரரும் எதிர்ப்பு தெரிவிக்கிற தெண்டதிலை வலு இறுக்கமா இருக்கினம். அட இந்தக் கட்டத்திலை கூட எங்கட கூத்தணிக்காரர் உந்தப் பொதுவான கட்டமைப்புக்குத் தங்கட ஆதரவு இருக்கெண்டு பச்சைக் கொடியைக் காட்டாம இருக்கினமே எண்டு வாத்தியார் கேக்கிறார். ஒருவேளை அவைக்கே உதில விருப்பமில்லையோ எண்டும் மனிசன் அறியாமையில கேக்குது. இவா ஒண்டையும் தர மாட்டா எண்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் சொல்லிப்போட்டு எப்பிடி பச்சைக் கொடி காட்டிறது எண்டு இருபத்திரண்டு பேரில யாரும் பச்சைக் கலரிலை உடுப்புக்கூடப் போடினமில்லையாம். இதுக் குள்ளையும் சம்பந்தமானவர் மட்டும் ஒரு கிறிஸ்துவ அமைச்சரோடை நட்பை வலுப்படுத்தி வாறாராம். எல்லாம் முன்னால் விசுவாசம் தானுங்கோ.

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா போன ரெண்டெழுத்தார் குழு கனடாவின்ர கியூபெக் மாகாணத்துக்குப்போக வீசா கேட்டவையாம். கனடாக்காரர் கறாரா மறுத்துப்போட்டினமாம்.

அங்கத்தைய சுயாட்சிமுறைபற்றி தெரிந்து கொள்ளத்தான் தாங்கள் போக வேணுமெண்டு கேட்டிச்சினமாம். ஆனால் அதில்லையாம் உண்மை. கியூபெக் மாநிலத்தில முன்று லகரத்துக்கும் அதிகமான தாயகக்காரர் இருக்கினமாம்.

அவையளிட்டை நேரடியா வசூல் பண்ணத்தான் போகப்பாக்கினம் எண்டிட்டு வீசா தரமாட்டம் எண்டிட்டினமாம். படு கொலைகளையும், ஜனநாயக மறுப்புகளை யும் கைவிட்டுப்போட்டு சமாதானத்துக்கு உண்மையாக நடந்துகொண்டால் பிறகு யோசிக்கலாம் எண்டு விளக்கமும் கொடுத்திச்சினமாம். வெள்ளைக்காரனிட்டை பருப்பு வேகயில்லை கண்டியளே!

தென்றலடிக்கிற வானொலியில இதயவீணை மீட்டினமெல்லோ. அவை ரெண்டெழுத்தாரிண்ட வண்டவாளத்தை அப்படியே தண்டவாளம் ஏத்தின மெண்டு ஏக தலைவருக்கு எக்கச்சக்க கடுப்பாம் எண்டு முல் விளையிற தீவில இருந்து வந்தவை சொல்லினம். அவருக்குக் கடுப்பெண்டது உங்களுக்கு எப்பிடித் தெரியுமெண்டு கேட்டால், அங்கே அவை பின்னேரம் ஆறரை மணி யெண்டால் முல்லுமேலை நடக்கிறவை மாதிரித்தான் திரியுவினமாம். எத்தனை மீடியாக்கள் சப்போர்ட் பண்ணினாலும் உந்த ஒரு நிகழ்ச்சி தலைவலியாக்கிடக்கு எண்டினமாம். அதுக்கு உதாரணம் சொல்லுறார் இப்பிடி. இருபத்திரண்டு எம்.பி.மார் ஒரே ஒரு தேவமானவரை பார்ளி மெண்டில சமாளிக்கப் படாதபாடுபடுகினமெல்லோ அப்படியாம். கூடவே ஒரு பாட்டும் படிக்கிறார். ஆள் கொல்லிறவர் அலிபாபாவாம். அவருக்கு வக் காலத்து வாங்க இருப்பத்திரண்டு திருடர்களாம்... பாத்தியளோ வாய்க்கொழுப்பை! கட்டுப்பாடு இல்லையெண்டவுடன எப்படி நாக்கு நீளுதெண்டு.....

இங்கிலாந்தில ரெண்டெழுத்தாரை தடை செய்திருக்கினமெல்லோ. அதையும் தாண்டி அங்க ரெண்டெழுத்தார் கலக்ஷன் பண்ணின மெண்டது பழைய கதை. புதிய கதை என்ன தெரியுமோ? உங்க இருக்கிறவை கணக்கு வழக்கில கரடி விடுகினம் எண்டதால ஏக தலைவர் தன்ர நேரடிப் பிரதிநிதியா மனோ மாஸ்டரையே இங்கிலாந்துக்கு அனுப்பி வச்சிருக்கிறாராம். அவர் எங்கட உறவுகளிட்டை ஒரு நாளைக்கு நீங்கள் விரும்பினால் எவ்வளவும் தரலாம், ஆனால் கட்டாயம் ஒரு நாளைக்கு ஒரு பவுண் தரவேணுமெண்டு கட்டளையிட்டிருக் கிறாராம். அப்படியெண்டால் நம்மவர் ஒருவர் ஒரு மாசத்துக்குக் கட்டாயம் முப்பது பவுண் இவைக்கு அழுதேயாகவேணுமாம். பிச்சை எடுக்குமாம் பெருமாள்; அதைப் பறிக்குமாம் அனுமார் எண்ட கதை பொருத்தமா இருக் கெல்லோ!

பாலசிங்கத்தின் உயிர் காக்க உதவிய என்னைப் புலிகள் சித்திரவதை செய்தனர்

வன்னி அனுபவம் ஜெயதேவன் பேட்டி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரித்தானிப் பிரஜையுமான இராஜசிங்கம் ஜெயதேவன் என்பவர் வன்னிக்கு அழைக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டாரென்ற அதிர்ச்சித் தகவல் அண்மையில் லண்டனிலும் இலங்கையிலுமுள்ள ஊடகங்களால் அம்பலப்படுத்தப்பட்டமை தெரிந்ததே. கொழும்பிலிருந்து வெளிவரும் 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகையின் லண்டன் நிருபரான சுஜிவ நிபுன்கெல்ல என்பவருக்கு ஜெயதேவன் அளித்த பேட்டியை இங்கே தருகிறோம்.

கேள்வி : நீங்கள் இலங்கைக்குச் சென்றிருந்த சமயம், புலிகள் இயக்கத்தினர் உங்களை 62 நாட்களாகச் சிறை வைத்திருந்தனர். உண்மையில் நடந்தது என்ன?

பதில் : நான் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பிருந்தே எனக்குப் புலிகள் இயக்க உறுப்பினர்களால் லண்டனிலேயே பிரச்சினைகள் இருந்து வந்தன. புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து ஒரு சமரசத்திற்கு வருவதற்காகத் தான் நான் இலங்கைக்குச் சென்றேன். எனினும் அவர்கள் என்னைக் கைது செய்து விட்டனர்.

கேள்வி : இந்தப் பிரச்சினைச் எப்படி ஆரம்பித்தது?

பதில் : அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்கு வந்த பிறகுதான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஆரம்பித்தன. நான் புலிகள் இயக்கத்தின் உறுப்பினரல்ல என்பதை முதலில் இங்கு நான் கூற வேண்டும். என்றாலும் தமிழ் மக்களுக்காகப் போராடும் ஒரு நபர் நான். அதுபோலவே நான் பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் உறுப்பினருமாவேன். அன்ரன் பாலசிங்கம் லண்டன் வருவதற்கு நான்தான் உதவி செய்தேன். பிரித்தானிய அரசாங்கத்துடன் எனக்குள்ள தொடர்புகளை முன்வைத்து அன்ரன் பாலசிங்கத்துக்கு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நான் உதவி செய்தேன். இதனால் அவரால் லண்டன் வரமுடிந்தது. எனினும் பிரித்தானியாவின் பயங்கரவாதக் கட்டளைச் சட்டம் தொடர்பான சட்ட ரீதியிலான விளக்கமொன்றை அளிப்பதற்கான போராட்டங்களை நான் ஆரம்பித்ததன் பின்னர்தான் அவர் என்னுடன் முரண்பாடு கொள்ள ஆரம்பித்தார்.

கேள்வி : அன்ரன் பாலசிங்கம் லண்டன் வருவதற்கு நீங்கள் உதவி செய்ததாகக் கூறினீர்கள். அதனை இன்னும் விளக்கமாகக் கூறமுடியுமா?

பதில் : அவர் லண்டன் வருவதற்குக் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொடுப்பது எனது கடமையாக இருந்தது. அவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால், அவர் மூன்று மாதங்களுக்கு மேல் உயிர் வாழமாட்டாரென மருத்துவர்கள் கூறினார்கள். இதன் பிரகாரம் அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக கொழும்பு ஊடாக ஒஸ்லோ செல்வதற்கு வழிசெய்யுமாறு நோர்வே அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது. பாலசிங்கம் கொழும்பு ஊடாக ஒஸ்லோ செல்ல வேண்டுமென்றால், புலிகள் இயக்கம் கொழும்பில் தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபடக் கூடாதென்றும், விமானங்களைத் தாக்குகின்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்றும் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன. எனினும், புலிகள் இயக்கம் இதற்கு இணங்கவில்லை. இதனால், பாலசிங்கத்துக்கு விமானக் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வது அவர்களது அடுத்த துரும்பாக இருந்தது. இவ்விடயம் தொடர்பாக புலிகள் இயக்கம் லண்டனில் உள்ள அவர்களது முக்கியஸ்தர்களுக்கு அறிவித்த போதிலும் அவர்களால் இதனைச் செய்துகொள்ள இயலாமல் போய்விட்டது. இதனால் இந்தப் பணியை அவர்கள் என்னிடம் ஒப்படைத்தனர். இதன்படி பிரித்தானிய அரசாங்கத்தின் உதவியுடன் நான் பாலசிங்கத்துக்கு விமானக் கடவுச்சீட்டினைப் பெற்றுக்கொடுத்தேன். அதே போன்று எனது தொடர்புகளைப் பயன்படுத்தி, பாலசிங்கத்தின் மனைவியான அடேல் பாலசிங்கத்துக்கு அவுஸ்திரேலிய விமானக் கடவுச்சீட்டொன்றையும் பெற்றுக் கொடுத்தேன். இந்தக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி, அவர்கள் லண்டனுக்கு வந்து, சத்திரசிகிச்சைக்காக ஒஸ்லோவுக்குச் சென்றனர். அவர்களுக்கான கடவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொடுப்பது மாத்திரம்தான் எனது பணியாக இருந்தது. அவர்கள் எந்த விமானத்தில் இங்கு வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது.

கேள்வி : அதாவது நீங்கள் சட்டரீதியாக அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரித்தானிய அரசாங்கத்தின் மூலமாக விமானக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுத்ததாகக் கூறுகிறீர்கள்? இது பிரித்தானிய கடவுச் சீட்டா?

பதில் : ஆமாம். அது பிரித்தானிய கடவுச் சீட்டாகும். நீங்கள் அறிந்த வகையில் அவர் பிரித்தானிய பிரஜையாவார். அவர், கொழும்பில் பிரித்தானிய தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார். எனினும் அவர் புலிகள் இயக்கத்துடன் இணைந்து நீண்ட காலமாக இலங்கையில் தங்கி இருந்ததனால், அவரது காலாவதியான பிரித்தானிய கடவுச் சீட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அவரால் இயலாமல் போய்விட்டது. பிரித்தானிய அரசு அவரது கடவுச் சீட்டைப் புதுப்பித்துக் கொடுக்காது என்று அவர் அச்சம் கொண்டிருந்தார். எனினும் பிரித்தானிய அரசாங்கத்துடன் நான் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக அக் கடவுச்சீட்டைப் புதுப்பித்துக் கொடுப்பதற்கு என்னால் முடிந்தது.

கேள்வி : அவரது கடவுச் சீட்டைப் புதுப்பித்துக் கொடுப்பது மட்டும் தானா உங்கள் பணி?

பதில் : ஆமாம். நான் அதனைப் புதுப்பித்துக் கொடுத்தேன். அதனை நான் சிங்கப்பூரில் வைத்து வழங்கினேன்.

கேள்வி : இப்படியான பாரிய தொரு உதவியைச் செய்த நீங்கள் அவரது நண்பராக இருக்க வேண்டும். எனினும் நீங்கள் இருவரும் எப்படி எதிரிகளானீர்கள்?

பதில் : பயங்கரவாதக் கட்டளைச் சட்டம் தொடர்பாக சட்ட ரீதியான விளக்கங்களை அளிப்பதற்கான செயற்பாடுகளை நான் மேற்கொண்டதன் பின்னர்தான் அவர் என்னுடன் முரண்பட்டுக்கொண்டார். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நான் ஒரு அப்பீலை முன்வைத்துள்ளதாக அவர் நினைத்துவிட்டார். அப்பீல் என்பதும் சட்டரீதியிலான விளக்கமளித்தல் என்பதும் வெவ்வேறு விடயங்களாகும். சட்டரீதியிலான விளக்கமளித்தலின் மூலம் பயங்கரவாதக் கட்டளைச் சட்டத்தினால் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்ள முடியும். எனது நோக்கம் இதுவே. எனினும் இவ்விடயம் தொடர்பில் பாலசிங்கம் என்னை ஏசினார். நான் அவரது நடத்தையை அனுமதிக்கவில்லை. அன்று முதல் எங்களது நட்பு முறிந்து விட்டது.

கேள்வி : சட்டரீதியிலான விளக்கமளித்தல் தொடர்பாக இன்னும் சற்று விளக்கமாகக் கூற முடியுமா?

பதில் : இது பிரித்தானிய பயங்கரவாதக் கட்டளைச் சட்டம் தொடர்பான விடயம். இதற்குப் புலிகள் இயக்கத்தின் தொடர்பு கிடையாது. அதாவது, இந்தப் பயங்கரவாத கட்டளைச் சட்டத்தின் மூலம், பிரித்தானியாவில் உள்ள தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்கள் எவை என்பன பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இருந்தது. புலிகள் இயக்கம் காரணமாக, ஏனைய தமிழ் அமைப்புக்களும் பயங்கரவாத அமைப்புக்கள் என்று கணிக்கப்படும். எனவே, தமிழ் மக்கள் எங்களது அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட அச்சம் கொண்டிருந்தனர். இந்த நிலையில் பிரித்தானிய பயங்கரவாதக் கட்டளைச் சட்டமானது புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய அமைப்புகளின் மீது கொடுக்கக் கூடிய அழுத்தங்கள் தொடர்பான சட்ட ரீதியிலான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதுதான் எமது நோக்கமாக இருந்தது. எனினும், இச் செயற்பாடுகள் அவர்களது மேற்பார்வையின் கீழ் இடம் பெற வேண்டும் என்றே புலிகள் இயக்கத்தினர் எதிர்பார்க்கின்றனர். அதாவது தனியாகச் சிந்தித்து, செயற்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. எனவே, இதற்கு எதிராகத்தான் நாங்கள் எழுந்து நின்றோம்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம் பார்க்க.....

சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்



நவசித்தர் மாந்திரீகம்

ஓம் குருவே நம: கர்ம வினைகளால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வியாபாரம், கல்வி, வெளிநாட்டுப் பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிரச்சினைகள் தீர, வேண்டாதவரை பிரிக்க, கிரகதோஷ நிவர்த்தி செய்து, வீட்டில் லெட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அனேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹாசக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷமருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01. Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077



நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்
46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.

ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831

கடிதங்களுக்கு பதில் எழுத அவகாசம் கிடையாது. என்னிடம் மாந்திரீக பரிகாரத்தால் நன்மை பெற்ற வெளிநாட்டவர்கள். உள்நாட்டவர்கள். நற்சாட்சி கடிதங்களை அவர்களின் நலனுக்காக விளம்பரம் செய்வதில்லை.

நிவரெல்பா கிளையிலும் கொழும்பிலும் கொடுக்கும் பணத்திற்கு பற்றுச் சீட்டுவாங்கக் கொள்ளவும். மாந்திரீக பரிகாரத்திற்கும் கரண்டி காரட்டும் வாங்கிச் செல்லவும். சாந்தி பரிகாரம் நிவர்த்தி பெறும் கிரகமாயம் தெரிந்து கொள்ள முடியும்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 19 07 1929



உதிர்வு 16 04 2005

அமரர் இரா. பத்மநாதன்

திதி: 16.05.2005 பூர்வபக்கத்து அட்டமி

மட்டுநகரைப் பிறப்பிடமாகவும், களுதாவளை, 3ஆம் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட, இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், 'தினமுரசு' வார இதழின் கௌரவ ஆசிரியரும், "வானொலி மாமா" என அன்போடு அனைவராலும் அழைக்கப்பட்டவருமான **கலாபூஷணம், கலைமணி, கலைவாருதி** அமரர் இரா. பத்மநாதன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி, தந்திகள் மூலமாகவும், தமது அநுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும், அன்னாரின் மறைவு தொடர்பான செய்திகளை வெளியிட்டுதவிய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் ஆகிய நிறுவனங்களுக்கும். அன்னாரின் தகனக் கிரியைகளிற் கலந்து கொண்ட அனைவருக்கும், எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மகன்மார் :- காண்டீபன், அமிர்தராஜா, சுதேசன், மற்றும் குடும்பத்தினர்.
சோமர் வீதி, களுதாவளை - 03, களுவாஞ்சிக்குடி, தொ.பேசி : 065-2250638

இவர்களுடன் தினமுரசு நிர்வாகிகளும், ஊழியர்களும்

இன்னொருவர் பார்வையில்

உலகிலுள்ள பயங்கரவாத இயக்கங்கள் மற்றும் சம்பிரதாயபூர்வமற்ற அரசுகள் ஆகியவற்றின் விமானப் படையணிகள் பற்றிய இந்தக் கட்டுரை கடந்த பெப்ரவரி மாதம் 22ஆந் திகதிய 'டெய்லி மிரர்' பத்திரிகையில் வெளிவந்தது. ஸ்கொட்லான்ட் செயின்ற் அன்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்செயல்கள் தொடர்பான பட்டப் பின்படிப்புக் கற்கை நெறியை மேற்கொண்டு வரும் சாணக ஜெயசேகர என்பவரே இக் கட்டுரையின் ஆசிரியராவார். புலிகள் இயக்கம், ஹெஸ்புல்லா இயக்கம் போன் தீவிரவாத அமைப்புக்களிடமும் மொல்டோவா, அசர்பைஜான், துருக்கிய - சைப்பிரஸ் போன்ற சம்பிரதாயபூர்வமற்ற அரசுகளிடமும் இருக்கும் விமானப் படையணிகள் பற்றிக் கட்டுரையாளர் இங்கே ஆராய்கிறார். சோவியத் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியாகவிருந்த கொர்பச்சேவ் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்வைத்த 'பெரோஸ்ரொய்கா', 'கிளாஸ்னொட்' போன்ற கொள்கைகளும் சோவியத் ரஷ்யாவின் பொருளாதார வீழ்ச்சியும், ரஷ்யா பல நாடுகளாகவும், பிராந்தியங்களாகவும் பிரியக் காரணமாகியதற்கான சில அம்சங்களென்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். இதனால் சில யுத்தப் பிரபுக்கள் சில பிராந்தியங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். இவ் வாரம் விமானப் படையணி வைத்திருக்கும் தீவிரவாத இயக்கங்கள் மற்றும் சம்பிரதாயபூர்வமற்ற அரசுகள் பற்றிய விடயங்களைத் தருகிறோம்.

விமானப் படையணி வைத்திருக்கும் தீவிரவாத இயக்கங்கள்

ஆப்கானிஸ்தான் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப் படுவதற்கு முன்னர் முல்லா முஹம்மத் ஒமரின் தலைமையிலான தலிபான் ஆட்சியாளர்களிடம் பல விமானங்கள் இருந்தன. இவற்றில் மிக்-21, எஸ்.யு.-22, எம்.ஐ.-24, எம்.ஐ.-35 போன்ற விமானங்களும் ஹெலிகொப்டர்களும் இருந்தன. காபூலுக்கு அண்மையிலுள்ள பாக்ராம் விமானத்தளத்தில் இவை நிலைகொண்டிருந்தன. 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் தலிபான் அமைப்பின் விமானங்கள் வடக்குக் கூட்டணியின் நிலைகள் மீது பல்வேறு தாக்குதல்களை நடத்தின. இதனால், குறிப்பிடத்தக்க அளவு குடிமக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

அஹ்மத் ஷா மசூத்தின் தலைமையிலான வடக்குக் கூட்டணியினரிடம் இரண்டு எம்.ஐ.-35 மற்றும் ஆறு எம்.ஐ.-17 ரக ஹெலிகொப்டர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

தற்போது ஆப்கானிஸ்தானில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சுதந்திரப் படைகள் மற்றும் நேட்டோ (ஐ.எஸ்.ஏ.எப்.4) படைகளினால் இந்த விமானங்கள், ஹெலிகொப்டர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டிருக்க வேண்டும் அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டிருக்கலாமெனத் தெரிகிறது.

லெபனான் - ஹெஸ்புல்லா

சிரியா ஆதரவிலான லெபனான் ஹெஸ்புல்லா ஷியா இயக்கம் இஸ்ரேலின் வட பகுதியிலுள்ள இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குவதற்காக 2004ஆம் ஆண்டு நவம்பரில் ஆளில்லா உளவு விமானம் ஒன்றினை (UAV) உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

ஹெஸ்புல்லா தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா, இஸ்ரேலுக்கு மேலான வான் பரப்பில் 'மிர்ஸாத் -1' என அழைக்கப்படும் இந்த ஆளில்லா வேவு விமானம் முதலாவது பயணத்தை மேற்கொண்டதாகக் கூறினார். இந்த விமானத்தில் 50 கிலோ வெடிபொருட்களை ஏற்றிச் செல்ல முடியுமென்று அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். ஈரானின் விமான உற்பத்தி நிறுவனமான "ஹெச" உற்பத்தி செய்யும் 'அபாபில்' ரக ஆளில்லா விமானத்தை மாதிரி வடிவமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதே 'மிர்ஸாத்-1' என்று இராணுவ ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ஹெஸ்புல்லா அமைப்பு எஸ்.ஏ.-18 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முதற் தடவையிலேயே பெற்றுக்கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. இது இஸ்ரேலிய இராணுவ விமானங்களுக்கு மட்டு மல்ல, வர்த்தக ரீதியான விமானங்களுக்கும் ஓர் அச்சுறுத்தலாக விளங்கியதென நம்பப்பட்டது. இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய அரசாங்கத்தினால் நடத்தப்படும் 'ராபேல்' பாதுகாப்பு ஆய்வுக் கம்பெனி பிரிட்டனிங் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பொன்றினை உருவாக்கியது. நெருங்கி வரும் ஏவுகணைகளைச் சீர்குலைப் பதற்கு கதிர்வீச்சுக்களைப் பயன்படுத்தக் கூடியதாக இது அமைந்திருந்தது.

மோல்டோவா - ட்ரான்ஸ் - நிஸ்டர் (ட்ரான்ஸ்னி ட்ரியா)

மோல்டோவாவின் கிழக்குப் பகுதியிலுள்ள ட்ரான்ஸ் - நிஸ்டர் என்ற பிராந்தியம் பிரிந்து சென்றுள்ளது. 1990ஆம் ஆண்டு ரஷ்யத் தலையீட்டையடுத்து அங்கீகரிக்கப்படாத அரசாங்கமொன்று அங்கு உருவாக்கப்பட்டது. இப்போது ரஷ்யாவின் 14ஆவது இராணுவப் பிரிவு ட்ரான்ஸ் - நிஸ்டரில் நிரந்தரமாக நிலை கொண்டுள்ளது. அத்தோடு பிரிடினெஸ்ரோவியன் மோல்டோவியன் குடியரசு என்று அழைக்கப்படும் இப் பிரிவினைவாத அரசாங்கத்துக்கு ரஷ்யத் துருப்புக்கள் ஆதரவளிக்கின்றன.

1992ஆம் ஆண்டு பிரிடினெஸ்ரோவியன் ஆயுதப் படைகள் ரஷ்ய உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டன. இந்தப் படையணிகளில் எதிர்த் தாக்குதல் துருப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மோட்டார் தாக்குதல் நடத்தும் காலாட் படை, விமானப் படை, விமானப் பாதுகாப்புப் படை, விசேட படை, ரிசேவ் படைகள் ஆகியன இருந்தன. இந்தப் படையணிகளிடம் 29 விமானங்கள் இருந்தன. இவற்றிடம் Mi-8 விமானங்கள் ஆறும் Mi-4 விமானங்கள் இரண்டும் இருந்தன. அத்துடன் பிராஸ்பொல் என்ற இடத்தில் விமானத்தளமும் இருந்தது. பிரிந்து சென்ற இந்தப் பிராந்தியத்தின் ஜனாதிபதியாகத் தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கோர்ஸ்டோப் பிரிவின் கோர் சிமிர்நோவ், டுபோசொரி மாவட்டத்திற்கு ஆயுதப் படைகளின் Mi-8 ஹெலிகொப்டரில் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி பயணம் செய்தார் என்று ஜனாதிபதி செயலக இணையத் தளம் செய்தி வெளியிட்டது.

ட்ரான்ஸ் - டினிஸ்டரில் ரஷ்யத் துருப்புக்கள் பெருமளவு உள்ளதால் விமானக் கடத்தல் செய்யக்கூடிய சாத்தியம் அங்கு கிடையாது. இதனால் பிரிவினைவாத அரசாங்கத்தின் விமானத் திறன்களையும், வசதிகளையும் வெளியிட அவர்கள் தயங்குவார்கள். எனினும் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஒரேஞ்ச்' புரட்சியின் மூலம் உக்ரேனிலிருந்த ரஷ்ய சார்பு அரசாங்கத்தின் பதவி கவிழ்க்கப்பட்டது. எனவே அயல் பிரதேசமான ட்ரான்ஸ் - டினிஸ்டரின் விமானப் படை சக்திகள் பிராந்தியத்தின் பந்தோபஸ்துக்கு முக்கியத்துவமிக்க அம்சமாக விளங்கியது.

ஜோர்ஜியா - அப்காசியா மற்றும் தென் ஒசிடியா

1994ஆம் ஆண்டு அப்காசியப் பிரதேசத்தில் ரஷ்யத் தலையீடு இடம் பெற்றதையடுத்து ரஷ்யாவின் ஆதரவு பெற்ற, தன்னைத் தானே பிரதமராகப் பிரகடனப்படுத்திக்கொண்ட அலெக்சாண்டர் அன்ட்வாப்பின் தலைமையிலான பிரிவினைவாத அரசாங்கத்தினால் அப் பிராந்தியம் ஆளப்பட்டு வருகிறது. அப்காசி இராணுவப் படைகளிடம் பலமிக்க கடற்படை ஒன்றுள்ளது. 6 கிரிப் ரகப் படகுகள் உட்பட 23 கப்பல்கள் இவற்றிடம் உள்ளன. இவை கருங் கடலில் செயற்படுகின்றன. இவை விமானங்களைக் கொள்வனவு செய்ததாக எவ்விதத் தகவலுமில்லை.

ஆனால், அப்காசியப் படைகள் சுகுமி கிராண்டா என்ற இடத்தில் விமான நிலையமொன்றை வைத்துள்ளன. பிரிந்து சென்ற தெற்கு ஒசென்டியா என்ற பிராந்தியத்தில் ரஷ்ய ஆதரவுமிக்க பிரிவினைவாத அரசாங்கம் ஆட்சி புரிகிறது. இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதியாக எடுவார் பொஹொட்டி தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்த அரசாங்கத்திடம் விமானங்கள் இருப்பதாக எந்த விதத் தகவலும் இல்லை. ஆனால் ஒசென்டியா படைகளின் கட்டுப்பாட்டில் ஸ்கின்வலி விமான நிலையம் உள்ளது.

அசர்பைஜான் / ஆர்மேனியா / நாகோன் கரபாஹ்

நாகோன் கரபாஹ்வில் ஆர்மேனிய ஆதரவு பெற்ற அரசு உள்ளது. இது தன்னிச்சையாகவே பிரகடனப்படுத்தப்பட்ட அரசாகும். க்சான்காந்திலுள்ள பழைய ஸ்ராதானகால் விமான நிலையம் இந்த அரசின் கட்டுப்பாட்டிலுள்ளது. Mi-8 ரக ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி ஆர்மேனியாவிற்கும் க்சான்காந்திக்குமிடையில் தனியார் கம்பெனி ஒன்று விமானப் பயணங்களை மேற்கொள்வதாக அறிய முடிகிறது.

கௌகுசஸ் பிராந்தியத்திலுள்ள அங்கீகரிக்கப்படாத அரசாங்கங்களிடம் விமானங்கள் இருப்பதாகக் கூற முடியாது. இங்குள்ள பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் பலமிக்க ரஷ்யப் படைகள் இருப்பதாகவும், அவற்றின் செல்வாக்கு அதிகமாக இருப்பதாலும் இங்கு பயணங்களை மேற்கொள்ளும் விமானங்களைக் கடத்த முடியாது. எனினும் இப் பிராந்தியங்களில் சிறு ஆயுத விற்பனைகள் இடம் பெறுவதாகவும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

சுவிற்சர்லாந்துத் தயாரிப்பான பிளட்டஸ் பி.சி.7 ரக விமானத்தைப் படத்தில் காண்கிறீர்கள். இந்த மென்ரக விமானம் எப்படிச் சில தீவிரவாத இயக்கங்களின் கைகளுக்குச் சென்றடைந்துள்ளனவென்பது பெரும் கேள்விக்குறி. ஏனெனில் சுவிஸ் நாடு பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆயுதங்களையோ, விமானங்களையோ, உபகரணங்களையோ ஏற்றுமதி செய்வதில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

சைப்பிரஸ் - துருக்கி - வட சைப்பிரியட்

1974ஆம் ஆண்டு துருக்கியப் படைகளால் சைப்பிரஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. அன்றிலிருந்து நாடு பிரிக்கப்பட்டு நாட்டின் வடபகுதி துருக்கிய சைப்பிரஸ் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இப் பிராந்தியத்தைத் துருக்கி மட்டுமே அங்கீகரித்துள்ளது. துருக்கிய - சைப்பிரஸ் அரசாங்கத்திடம் விமானங்கள் இருப்பதாகத் தகவலில்லை. எனினும் துருக்கிய விமானப் படையின் அணியொன்று அந்தப் பிராந்தியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எர்கான் என்ற இடத்திலிருந்து அங்காராவுக்கும் இஸ்தான்புலுக்கும் விமானப் பயணங்கள் இடம்பெறுகின்றன. இப்ரிஸ் துருக்கி விமான சேவையும் இஸ்தான்புல் விமான சேவையும் மட்டுமே வடக்கு சைப்பிரஸுக்கு விமான சேவைகளை நடத்துகின்றன. இந்த நாட்டில் துருக்கியத் துருப்புக்கள் பெருமளவு இருப்பதாலும் ஐரோப்பிய யூனியனில் இணைந்து கொள்ளத் துருக்கி முயற்சிப்பதாலும், துருக்கிய - சைப்பிரஸ் அரசாங்கம் விமான சேவைகளில் எவ்விதமான ஒழுங்கீன நடவடிக்கைகளும் இடம் பெற அனுமதிக்க மாட்டாது.

பொஸ்னியா ஹேஸ்எகோவினா

முன்னைய பொஸ்னிய - ஹேர்வியக் படைகள் ஒராவோ ரக விமானங்களும் ஆறு 'J-21' ஜாட்ரப் தாக்குதல் விமானங்களும் அடங்கும். இவை மாகோவில் ஜானி விமானத் தளத்திலும் சலுசானி விமானத் தளத்திலும் உள்ளன.

டேயிடன் சமாதான ஒப்பந்தத்திற் கிணங்க நேட்டோ படைகளின் கடுமையான மேற்பார்வையின் கீழ் இவை வைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த வெவ்வேறான ஆயுதப் படைகளை ஒருங்கிணைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் நேட்டோ படைகளின் மேற்பார்வையின் கீழ் ஸ்பிரிஸ்கா விமானப் படை பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது.

நன்றி : 'டெயிலி மிரர்'

(அடுத்த வாரம் புலிகள் இயக்கத்தின் விமானப்படையணி பற்றிய சுட்டுரை வெளிவரும்)

கவிஞர் வாலி எழுதுகிறார்!

–வாழ்க்கைச் சரிதம்–

இது எனக்கு ஓர் உறுத்தலாகவே இருந்தது. காலம் கனியட்டும் என்று நான் குனிந்துகொண்டு குட்டுகளை ஏற்றுக்கொண்டேன். காலமே என்னை நிமிர வைத்தது. அப்போது என் மன உறுத்தலுக்கு ஒரு வடிகாலை தேடினேன்.

அது ஒருபுறமிருக்கட்டும். 'நீங்காத நினைவு' படத்திற்குப்

பிறகு, திரு. சுலைமான் அவர்களும் திரு.மாரா அவர்களும் சேர்ந்து என்னைக் குறித்து திரு. முக்தா ஸ்ரீநிவாசனிடம் பேசியிருக்கிறார்கள்.

இதன் விளைவாக, முக்தா பிலிம்ஸார் தயாரித்துக் கொண்டிருந்த ' இதயத்தில் நீ' என்னும் படத்தில் பாட்டெழுதும் வாய்ப்பானது, என்னைத் தேடி வந்து கதவைத் தட்டியது.

என் ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. ஏனெனில் அந்தப் படத்தின் இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி.

இவர்களிடம் பாட்டெழுதும் வாய்ப்புக்காகத் தானே நான் இத்துணை காலம் தவமிருந்தேன்!

1963 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஒரு மத்தியான வேளையில், முக்தா பிலிம்ஸ் மாடியிலுள்ள சின்ன அறையில் நான் திரு.எம்.எஸ். விஸ்வநாதனுக்கும், திரு. ராமமூர்த்திக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன்.

நான் ஏற்கனவே எம்.ஜி.ஆர். படத்திலும் எஸ்எஸ்.ஆர. படத்திலும் பாடல்கள் எழுதியிருப்பதையெல்லாம் விஸ்வநாதனிடம் விவரித்துச் சொன்னார் முக்தா ஸ்ரீநிவாசன்.

"நல்ல கவிஞன், பாட்டைப் பாருங்கள், பிடித்திருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். ஒத்துவராது என்று தோன்றினால் நான் உங்களை வற்புறுத்த மாட்டேன்" என்றெல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார் திரு. ஸ்ரீநிவாசன்.

எம்.எஸ். விஸ்வநாதனுக்கு நான் ஒரு வணக்கத்தைப் போட்டேன்.

அவர் என்னைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி எனக்கு சற்று அதிர்ச்சியை அளித்தது.

"நீங்க ப்ராமிணா?" என்றார்.

'ஆம்' என்று நான் சொல்லி முடிப்பதற்குள், "எங்களுக்கு உறவுக்காரப் பையன்" என்றார் திரு.முக்தா ராமஸ்வாமி.

விஸ்வநாதன் சாதிக் கண்ணோட்டமில்லாதவர்; பாபநாசம் சிவனை தலைக்கு மேல் வைத்துக்கொண்டாடுபவர் என்றெல்லாம் எனக்குத் தெரியும். ஆகவே என் சாதியைப் பற்றி அவர் தன்னிச்சையாகத் தெரிந்து கொள்ள விரும்பியிருக்கிறார் என்றே தீர்மானித்துக் கொண்டேன்.

பிறகு, மாடியிலிருந்து நாங்கள் அனைவரும் கீழே சென்றோம்.

"ஏதாவது பல்லவி எழுதிக் கொடுங்கள்" என்றார் விஸ்வநாதன். பாட்டுக்கான காட்சி விளக்கத்தை இயக்குநர் ஸ்ரீநிவாசன் சொன்னார்.

உடனே நான் ஒரு பல்லவியை எழுதி விஸ்வநாதனிடம் நீட்டினேன்.

'பூவரையும் பூவைக்கும் பூமாலை போடவா?
பொன்மகளே! வாழ்கவென்று பாமாலை போடவா?'

என்பதுதான் அந்தப் பல்லவி "பூவைக்கு...." என்பதெல்லாம் ட்யூனுக்கு சரியாக வராதே..." என்றார் எம்எஸ்.வி.

உடனே "பூங்கொடியே" என்று மாற்றிக்கொடுத்தேன்.

ஒரு சிட்டிகை பொடியை எடுத்து மூக்கில் உறுஞ்சினார் விஸ்வநாதன். அப்போதெல்லாம் அவருக்குப் பொடி போடும் பழக்கமுண்டு.

நான் எழுதிக் கொடுத்த பல்லவிக்கு ஐந்தே நிமிடங்களில் ஐந்து விதமான மெட்டமைத்துப் பாடியதைக் கேட்டு நான் அசந்து போனேன்.

சரணத்திற்கு, நான் கொடுக்கும் மெட்டுக்குத்தான் நீங்கள் பாட்டு எழுதவேண்டும்" என்று விஸ்வநாதன் சரணத்திற்கான மெட்டை வாசித்தார். (தொடரும்.....)

துணிச்சல் மிக்க காவல்துறைப் பெண் அதிகாரி

ஜெனட் ரோஜர்ஸ் தனது 18ஆவது வயதில் லண்டன் காவல் துறையில் இணைந்து கொண்டவர். இவர் கடந்த 18 வருடங்களாக இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். அதிலும், இவர் பணி புரிவது காவல்துறையிலேயே உள்ள மிகவும் கடினமான பிரிவில். அதாவது, கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபடுகின்ற சந்தேக நபர்களை வளைத்துப் பிடிப்பதுதான் இவரது பணியாகும்.

ஜெனட் தனது 26ஆவது வயதில்தான் இந்தப் பிரிவில் கடமையை ஏற்றுக்கொண்டார். இவர் கராத்தே, ஜூடோ போன்ற பயிற்சிகளைப் பெற்றவாவார்.

இக் காலகட்டத்தில்தான் காட்டுப் பகுதியில் மறைந்திருந்து பெண்களைக் கற்பழிக்கும் ஒரு பயங்கரமான குற்றவாளியைக் கண்டுபிடிக்க பொலிஸார் வலை விரித்திருந்தனர். இரு தடவைகள் இந்த நபர் பொலிஸாரிடம் சிக்கவிருந்து,

நூலிழையில் தப்பித்துக்கொண்ட போதிலும், தன் குற்றச் செயல்களை ஒரு போதும் குறைத்துக் கொள்ளவில்லை. ஒரு வருட காலத்துக்குள் இந்த நபர் எட்டுப் பெண்களைக் கற்பழித்துள்ளான். அதே நேரம் நான்கு தடவைகளில் நான்கு பெண்கள் இவனிடமிருந்து தப்பித்துக்கொண்டுமுள்ளனர்.

அன்றைய தினம் இக் குற்றவாளி, ஜெனட் பணியாற்றி வந்த பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் வைத்து 16 வயதுடைய பாடசாலை மாணவியொருத்தியைக் கற்பழித்துள்ளான்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இக் குற்றவாளியைப் பிடிப்பதற்காக, சாதாரண ஒரு பெண்ணைப் போல் அவன் இருக்கும் பகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு ஒரு பெண் பொலிஸ் தேவை எனக் கூறினார்.

இதன்போது ஜெனட், தான் அங்கு செல்வதாக உடனடியாக முன் வந்தார். இப் பயணம் பயங்கரமானதொரு பயணமாகும் என்பதை விபரித்த பொறுப்பதிகாரி, தேவையெனில் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவும் இயலும் எனக் கூறிய போதிலும், ஜெனட் தனது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

குற்றவாளியைப் பிடிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்ட போதிலும், ஐந்து வாரங்களாக குற்றவாளி பற்றிய எவ்விதமான விபரங்களும் பொலிஸாருக்குக் கிட்டவில்லை. ஆறாவது வாரம் மீண்டும் அவன் ஒரு பெண்ணைக் கற்பழித்துள்ளதாக அறியக் கிடைத்தது.

பொலிஸாருக்கு இச் சம்பவம் பிடிபடாவிடினும் இவர்கள் இருந்த இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில்தான் மேற்படி சம்பவம் இடம் பெற்றிருந்தது.

மேலும் 10 தினங்கள் கழிந்த நிலையில் இக் குற்றவாளியினால் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண் கூறிய தகவல்களையொத்த ஒரு நபர் பற்றிய தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்தன. எனினும் பொலிசார் அந்த இடத்துக்குச் செல்லும் முன்பாகவே அந் நபர் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்தான்.

மேலும் ஒரு வாரம் சென்ற நிலையில், அதிகாலை ஒரு மணியளவில் சந்தேக நபர் சென்று கொண்டிருக்கும் ஒரு பாதையைப் பற்றிய தகவல் பொலிஸாருக்குக் கிடைத்தது. இந்த நிலையில் மேலும் துணைகளின்றி அப் பகுதிக்குச் செல்ல ஜெனட்டுடன் இருந்த பெண் பொலிஸார் அச்சம் கொண்ட நிலையில், ஜெனட் எதுவிதமான அச்சமுமின்றி தான் அங்கு செல்வதற்கு முன்வந்தார்.

குறிப்பிட்ட இடத்தில் சந்தேக நபர் இருக்கக் கண்ட ஜெனட், எதுவுமே தெரியாத வகையில் வாகனத்தை விட்டு இறங்கி, சாலையோரமாக நடந்து சென்றார். சந்தேக நபர் திடீரென மறைந்து விட்டான்.

ஜெனட் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் போது ஒரு தொலைபேசிப் பெட்டியின் பின்னால் மறைந்திருந்த சந்தேக நபர் திடீரென ஜெனட்டின் மீது பாய்ந்து, அவரை அடித்து, இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

ஜெனட் சந்தேக நபருடன் போராடிக்கொண்டிருந்த போது மேலும் பல தாக்குதல்களுக்கு அவர் உள்ளாக நேர்ந்துவிட்டது. இதனிடையே வாகனத்தில் இருந்த பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்று ஜெனட்டை சந்தேக நபரின் பிடியிலிருந்து காப்பாற்றியபோது, அவரது உடம்பில் பல வெட்டுக் காயங்கள் காணப்பட்டதுடன் முகம் உட்பட பல பகுதிகள் வீங்கி இருந்தன.

இதனிடையே சந்தேகநபர் தப்பியோடும் முயற்சியில் ஈடுபட்டதும், தனது வேதனையையும் பொருட்படுத்தாத ஜெனட், பாய்ந்து சென்று அவனைத் தாக்கி, வளைத்துப் பிடித்துக் கொண்டார்.

பிரீத்தானியாவில் ஒன்றன்பின் ஒன்றாகக் கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த இளம் குற்றவாளியான இச் சந்தேக நபர், இப்போது பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டான்.

ஷோன் ப்ரென்கிஸ் எனப்படும் இந்தக் குற்றவாளி கைதுசெய்யப்பட்ட போது அவனது வயது 17 ஆகும். பின்னர் இவன் 13 வருட சிறைத் தண்டனையைப் பெற்றான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

எனினும், இச் சம்பவத்துக்குப் பின்னர், இவ்வாறான குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்கு, குறிப்பாக பெண் பொலிஸாரை ஈடுபடுத்துவது பயங்கரமான செயலாகும் என்பதைப் பொலிஸ் உயரதிகாரிகள் உணர்ந்து கொண்டனர்.

தற்காப்புக் கலையைக் கற்றிருந்த காரணத்தினால் ஜெனட் உயிர் பிழைத்துக் கொண்டார். இவ்வாறானதொரு நிலையில் ஒரு சாதாரணப் பெண்ணால் எந்த வழியிலும் தப்பிக்க இயலாது.

இச் சம்பவத்துக்குப் பின் சில நாள் கழித்து ஜெனட் ரொஜர்ஸ் புலனாய்வுப் பிரிவுக்கான பதவி பெற்றதுடன் பிரித்தானியாவிலிருந்து 200 பெண் பொலிஸார் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதிலும், குறிப்பாக மேற்கூறியவாறான குற்றவாளிகளைப் பிடிப்பதற்காக, அவர்களிடம் சாதாரணப் பெண்களைப்போல் நடந்துகொள்ளக் கூடிய பயிற்சிகள் இங்கு முக்கியத்துவம் பெற்றன.

இவ்வாறான பயிற்சியினை மேற்கொள்ளும் ஜெனட், தானும் இன்னமும் குற்றவாளிகளிடமே செல்லுகின்ற அந்தப் பயங்கரமான பணியையும் மேற்கொண்டு வருகின்றார். இவர் தனது கடமைகளின்போது இதுவரையில் 19 தடவைகள் காயமடைந்துள்ளார்.

தான் இவ்வாறானதொரு பணியை மேற்கொள்வதற்காகவே பொலிஸ் துறையில் சேர்ந்ததாகப் பெருமையுடன் கூறும் ஜெனட், இன்னுமொருவருக்குத் தவறிழைத்து விட்டு, அதற்காகத் தண்டனை பெறாமல் தப்பித்துச் செல்லும் நபர்களை தான் வேறுப்பதாகவும் கூறுகின்றார்.

தற்போது இவரது வயது 44 ஆகும். இன்னமும் தனது பணியிலேயே முழுக் குறியுடன் இருந்து செயற்பட்டு வருகின்றார். -பாலுக்

உளவாளிகள் 30

உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

ஒரு நாட்டு உளவாளி இன்னொரு நாட்டில் புகலிடம் கேட்டுத் தஞ்சமடைவதற்கு விசித்திரமான சம்பவங்களும் காரணமாகி வீடுவதுண்டு. ஆஸ்திரேலியாவில் உள்ள கான்பரா நகரில் விலாடிமர் பெட்ரோம் என்பவர் ரஷ்யத் தூதரகத்தில் மூன்றாவது செயலாளராக வேலை பார்த்து வந்தார். அவருடைய மனைவி பெயர் யூடோகியா. சோவியத் தூதர் அளித்த விருந்தில் விலாடிமரும் யூடோகியும் கலந்து கொண்டார்கள். சோவியத் தூதருக்கும் யூடோகியாவுக்கும் சிறு தகராறு ஏற்பட்டது. கோபமடைந்த யூடோகியா மேஜை மீதிருந்த ஐஸ்கீரிமை சோவியத் தூதரின் மேல் எறிந்து விட்டார். இது பெரிய பிரச்சினையாகி விலாடிமர் நிம்மதி இழந்தார். கடைசியில் தொல்லைகளிலிருந்து விடுபட சோவியத் தூதரகத்திலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியா அரசாங்கத்திடம் புகலிடம் கேட்டு தஞ்சமடைந்தார்.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து சோவியத் தூதரக அதிகாரி ஒருவர் உலாவச் சென்றபோது திடீரென்று காணாமல் போனார். அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை.

பின்பு அவர் அமெரிக்காவில் இருப்பதாகச் செய்தி வெளியாயிற்று.

KGBயைப் பொறுத்தவரையில் அதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிற நாடுகளில் தஞ்சமடைவது குறைவு என்றே சொல்ல வேண்டும். KGB உளவாளிகள் உலகிலுள்ள முக்கிய நாடுகள் அனைத்திலும் செயல்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரே நோக்கத்தோடு செயல்படுவதாகச் சொல்ல முடியாது. பெருமளவில் தொழில் முன்னேற்றமடைந்துள்ள மேற்கத்தைய நாடுகளிலிருந்து விஞ்ஞான தொழில்நுட்பத் தகவல்களைத் தெரிந்து கொள்வது ஒரு நோக்கம். வேறு சில நாடுகளில் கம்யூனிஸ சித்தாந்தத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக செயல்படுகிறார்கள். தங்களுக்குச் சாதகமாக இல்லாத அரசுகளைக் கவிழ்ப்பதற்காகவும் ஆதரவாக உள்ள அரசுகளுக்குப் பலமளிப்பதற்காகவும் சில நாடுகளில் செயல்படுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தாங்களே நேரிடையாக ஈடுபடாமல் எதிர்ப்புச் சக்திகளுக்கு நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்துவதும் உண்டு.

CIA யின் நடவடிக்கைகள் வெளிநாட்டு ஆட்சிகளை கவிழ்ப்பதில் ரஷ்ய KGBயைவிட அமெரிக்க CIA அதிக முனைப்புடன் செயல்படுவதாகத்தான் சொல்ல வேண்டும். CIA 1947 இல் நிறுவப்பட்டது. அமெரிக்காவில் உள்நாட்டு பாதுகாப்பைக் கண்காணிக்க FBI அமைப்புக்கு CIA துணை நிற்கிறது. ஆனால் அதன் பிரதான வேலை வெளிநாடுகளில் உளவு வேலை பார்ப்பதுதான்.

செயல்படுகின்ற முறையில் CIA யும் KGB யும் ஒரே தன்மை கொண்டவை என்று சொல்லி விடலாம்.

(தொடரும்.....)

(நன்றி : நர்மதா)

சங்கர மடத்துக் கிங்கர்கள்

18

காஞ்சிபுரம் தெற்கு மாட வீதியில்தான் சங்கரராமனின் வீடு உள்ளது. அதாவது, அவர் மேலாளராகப் பணிபுரிந்த ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்துக்கு அண்மையில் அவரது வீடு இருக்கிறது. இங்குதான் சங்கரராமனின் மனைவி பத்மா, மகன் அனந்தசர்மா, மகள் உமா மைத்திரேயி ஆகியோர் வாழ்ந்து வந்தார்கள். ஸ்ரீ வரதராஜப்

உமா மைத்திரேயி

பெருமாள் ஆலயத்தின் நிர்வாகியாகப் பதவி வகித்திருந்தபோதிலும் பொருள் சேர்க்கத் தெரியாத மனிதரென்று அயலவர்கள் அவரைப் பற்றிக் கூறுகின்றார்கள். சங்கரராமனின் வீட்டுக்கு நான்கு வீடுகள் தள்ளித்தான் வக்கீல் அன்பழகனின் வீடு இருக்கிறது. சங்கரராமன் சார்பான இரு வழக்குகளில் ஆஜராகும் வக்கீல் அன்பழகன், சங்கரராமன் ஊழல் பேர்வழியல்ல என்று அடித்துச் சொல்கிறார்.

காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலய வளாகத்துக்குள்ளேயே கடந்த வருடம் செப்டெம்பர் மூன்றாம் திகதி சங்கரராமன் கொலை செய்யப்பட்டார். மறுநாள் நான்காம் திகதி அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கே கையில் பணமில்லாமல் தவித்தனர் சங்கரராமன் குடும்பத்தினர் என்கிறார் வக்கீல் அன்பழகன். மடத்திலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கவில்லை, நண்பர்கள்தான் உதவினார்களென்றும் சொல்கிறார் அன்பழகன்.

கொலை நடைபெற்றுப் பல மாதங்கள் கடந்து விட்டன. இன்னும்தான் மனைவி பத்மா அழுதுகொண்டிருக்கிறார். மூத்த பிள்ளை அனந்தசர்மாவும், மகள் உமா மைத்திரேயியும் ஜெயேந்திரரின் பெயரைக் கேட்டதுமே பொரிந்து தள்ளுகிறார்கள். அனந்தசர்மா கூறிய ஒரு விடயம் அதிர்ச்சியைத் தந்தது. தனது தந்தையின் கொலைக்கு ஜெயேந்திரரே காரணமென்பது அனந்தசர்மாவின் அசைக்க முடியாத நம்பிக்கை.

"அப்பாவின் நல்லடக்கம் நடைபெற்ற பிறகு பதின்மூன்றாவது நாள் காரியங்கள் முடிந்த பின்னர் கோயிலுக்குப் போகணும் என்பது எமது வழக்கம். அதற்காக நான் மடத்துக்குப் போய் மகா பெரியவரின் சந்நிதி அமைந்திருந்த பிருந்தாவனத்திற்குச் சென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். நான் அங்கு வந்திருப்பதை யாரோ ஜெயேந்திரரிடம் சொல்லியிருக்க வேண்டும். அவர் மகா பெரியவரின் சந்நிதியை நோக்கி வருவதைக் கண்டதும் அவர் காலில் வீழ்ந்து வணங்கினேன். ஜெயேந்திரர் பின்னர், 'காரியமெல்லாம் முடிஞ்சுதா? கோபாலபுரத்து மணி ஐயரிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். உன் அப்பா கேட்கவில்லை. விதி யாரைத்தான் விட்டது' என்று சொல்லிச் சிரித்தார்" என்கிறார் அனந்தசர்மா.

தனது சொந்தப் பெயரில் மட்டுமல்ல, 'சோமசேகரக் கனபாடிகள்' என்ற பெயரிலும் ஜெயேந்திரருக்குக் கடிதங்கள் எழுதினார் சங்கரராமன் என்று கூறுகிறார்கள் அவரது நண்பர்கள். ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்டதற்குப் பின்னர்தான் கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்று கூறுகிறது தனிப்படைப் பொலிஸ் பிரிவு. இவ்வாறு 39 கடிதங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். இதில் வேடிக்கையான விடயமென்னவென்றால், இந்தக் கடிதங்களை மட்டுமே கொலை வழக்கிற்கான ஆதாரங்களாக பொலிஸ் வைத்திருக்கிறது. சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி 'இறுதி அறிவிப்பு' என்ற தலைப்பில் அனுப்பிய கடிதம்தான் ஜெயேந்திரரை ஆத்திரப்படுத்தியிருக்கலாமென்றும் சங்கரமடத்தைச் சேர்ந்த சிலர் கூறியிருக்கிறார்கள்.

சென்னையில் அனந்தசர்மா படித்துக்கொண்டிருக்கிறான். அவன் மனரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறானென்று கூறும் உமா மைத்திரேயி, கடந்த மார்ச் மாதம் பத்தாம் கிளாஸ் பரீட்சை எழுதியிருக்கிறார். சில நாட்களில் வேதனை தாங்காமல் தனது தாய் சாப்பிடாமலேயே விரதம் இருக்கிறாரென்று வேதனையோடு கூறுகிறார் சங்கரராமனின் மகளான உமா.

சங்கரராமன், ஜெயேந்திரருக்கு அனுப்பிய இறுதி எச்சரிக்கைக் கடிதத்தில் மூன்று நாட்களுக்குள் பதில் தர வேண்டுமென்றும் இல்லையேல் ஜெயேந்திரரின் ஊழல்களை அம்பலப்படுத்தப் போவதாகவும் எச்சரித்திருந்தாராம். இந்த நோட்டீஸை அச்சடிப்பதற்குப் பல பிரசுர நிலையங்களைச் சங்கரராமன் நாடியபோதும், ஜெயேந்திரருக்கு எதிராக அதனை அச்சடித்துக் கொடுக்கப் பல பிரசுராலயங்கள் மறுத்து விட்டனவாம். இறுதியில் இன்னொரு பிரசுராலயமொன்று கணனியைப் பயன்படுத்தி இந்த நோட்டீஸை அடித்துக் கொடுத்ததாகவும் தனிப்படைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த நோட்டீஸ்கூட ஜெயேந்திரரை ஆத்திரப்படுத்தியிருக்கலாமென்பது தனிப்படைப் பொலிசாரின் வாதம்.

2001ஆம் ஆண்டு சங்கரராமனின் தாயார், அதாவது உமா மைத்திரேயின் பாட்டி காலமானார். அப்போது தனது பாட்டியாரின் சுபஸ்கீகரணக் கிரியைகளுக்காகச் சங்கரமடத்துக்குச் சென்ற தனது தந்தையார் அவமானப்படுத்தப்பட்டாரென்று கொதித்துக் கூறுகிறார் உமா. 2001ஆம் ஆண்டில்தான் ஜெயேந்திரருக்கும் சங்கரராமனுக்குமிடையில் பெரியளவில் முரண்பாடுகள் வெடிக்க ஆரம்பித்தன என்கின்றனர் சங்கரமடத்துச் சீடர்கள். 21-10-2001 ஆம் ஆண்டு - அதாவது, தனது தாயாரின் திதி நாளன்று மகாபெரியவரின் சமாதியை வணங்கச் சென்ற தனது தந்தையார் அவமானப்படுத்தப்பட்டுத் துரத்தப்பட்டாரென்று குமுறுகிறார் உமா. அப்போது சங்கரமடத்தில் மனேஜராக இருந்தவர் சுந்தரேச ஐயர். இவர் தற்போது மிரட்டி வெளியேற்றினாரென்றும் கூறுகிறார் உமா.

அப்போது தன் பாட்டியின் கருமாதிச் செலவுகளுக்குச் சங்கரமடம் உதவவில்லையென்றும் தந்தையின் நண்பர்களே உதவினார்களென்றும், தந்தை இறந்த பின்னர் தமக்குதவ மடத்திலிருந்து ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தாரென்றும் சொல்லும் உமா, திடுக்கிடும் தகவலைக் கூறினார். அதை அவரது வார்த்தைகளிலேயே தருகிறோம்.

"அறுபது வயது மதிக்கத்தக்க வயோதிபரொருவர் அப்பா இறந்து மூணாம் நாள் (செப்டெம்பர் ஆறாம் திகதி) எங்க வீட்டுக்கு அவசரமா வந்தாரு. வந்த வேகத்தில் "பெரியவா அனுப்பியிருக்கா"ண்ணு சொல்லிண்டு முன் ஹாலில் இருக்கும் மரப்பெட்டியின் ட்ராயர்களைத் திறக்க ஆரம்பித்தார். என்ன தேடறேள்? யாரு நீங்க? என்று நானும் அண்ணாவும் கேட்டோம். "என் பேரு கணபதி. மடத்துல கோசலையைக் கவனிச்சுக்கிறேன். பெரியவா, சங்கரராமன் எழுதின லெட்டர்களை எடுத்துண்டு வரச் சொன்னா" என்றார். மறுபடியும் எல்லா டிராயர்களையும் இழுத்துப் பார்த்தார். நாலைஞ்சு கடுதாசிகள் கிடைச்சுது. அதையெல்லாம் எடுத்து ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டார். அதுக்குள்ளை ஒரு போலிஸ் ஜீப் வாசலுக்கு வந்துடுத்து. இவா உடனே அவசரமா அந்த பிளாஸ்டிக் பையை எடுத்துப் பக்கத்திலிருந்த இன்னொரு ட்ராயரில் போட்டு மூடிவிட்டு வாசலுக்கு ஓடினார். அதற்குள் போலிஸ் உள்ளே வந்துட்டது. உள்ளே வந்த போலிஸ் சாயந்திரம் நாலரை மணிவரை எங்களை விசாரணை செஞ்சுது. போலிஸைக் கண்டதும் இந்தாள் 'நான் மடத்திலிருந்து வர்றேன். ஏதாவது உதவி தேவையா என்று பெரியவா கேட்டு அனுப்பினா' என்று சொன்னார். நாங்க ஒண்ணும் புரியாம பாத்திண்டே இருந்தோம். அப்புறம் போலிஸ் போறவரை அந்தத் தெரு முனையிலேயே

காஞ்சிபுரத்திலிருந்து
அருண் கண்ணன்

சைக்கிளோடு நின்னுட்டிருந்தாரு. இருந்த லெட்டர்கள் எல்லாத்தையும் அள்ளி எடுத்துண்டு போலிஸ் கிளம்பிட்டுது. அதில் இந்த ஆள் ஒதுக்கி வைச்சிருந்த பிளாஸ்டிக் பையும் போயிடுத்து. அப்புறமா இந்த ஆள் திரும்பி வந்து ட்ராயரை இழுத்துப் பாத்திட்டு ஒண்ணும் பேசாம கிளம்பிட்டாரு" என்று பொரிந்து தள்ளினார் உமா.

சங்கரராமன் உடலை அடக்கம் செய்வதற்கு முன்னர் ஜெயேந்திரர் ஆறாயிரம் ரூபா அனுப்பி வைத்தாரென்று கூறப்படுவதும் பொய்யென்றார் உமா. "கணபதியென்ற அந்த ஆளிடம்தான் பணத்தைக் கொடுத்தனுப்பியிருந்தார். அவர் கருமாதிக் காரியங்களுக்காகக் கொஞ்சப் பணத்தை வாத்தியார் மாது மூலம் செலவழிச்சுட்டுப் போயிட்டார். எங்களிடம் நயா பைசா கொடுத்ததாக நிரூபிக்கட்டும். எங்களுக்கு வேண்டாம் ஜெயேந்திரரின் பாவப் பணம். சொல்லப்போனால் முதல்வர் கொடுத்த நிதியிலிருந்து அப்பாவின் காரியங்களுக்காக எவ்வளவு செலவு செய்தார்களோ அவ்வளவையும் திருப்பிக் கொடுக்கத் தயாராக இருக்கோம். அப்பாவை அடக்கம் செய்த அன்னித் தேதியில் எங்கள் கையில் பணம் இல்லாததால்தான் மடத்து ஆள் செலவழிப்பதை ஒப்புக்கொண்டோம். இதுல வேடிக்கை, மடத்திலிருந்து கொடுத்தனுப்பிய பணத்தில் பாதியையும் அந்த ஆள் கணபதி சாப்பிட்டு விட்டார் போலிருக்கிறது. இதே ஆசாமி விஜயேந்திரர் ஆந்திராவிலிருந்து மடத்துக்கு வந்த அன்னிக்கு அவர் பின்னால ஓரமா நிக்கறதை ரி.வி.யிலை பார்த்தோம்" என்று குமுறுகிறார் உமா மைத்ரேயி.

(தொடரும்.....)

சங்கடத்தில் 'சயனைட் பிரேம்குமார்'

சங்கரராமன் கொலை வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றத் தேவையில்லையென்று தமிழக அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வேலைகளில் தற்போது ஈடுபட்டிருக்கிறார் முன்னாள் காஞ்சிபுரம் எஸ்.பி.யும் சங்கரமட வழக்கைக் கையாள்பவருமான பிரேம்குமார், அண்மையில் காஞ்சிபுரத்திலிருந்து சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கும் இவரிடம், இந்த வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டுமாவென்று தமிழக அரசு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு கோரியதையடுத்தே இந்தப் பணியில் அவர் இறங்கியுள்ளார். சங்கரராமன் கொலை வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரிக் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜெயேந்திரர் தரப்பு வக்கீல்கள் சென்னை உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். ஜெயேந்திரர் தரப்பு வக்கீலான நாரிமன் இது தொடர்பாக முக்கால் மணி நேரம் வாதம் புரிந்தார். பிரேம்குமார் அ.தி.மு.க. ஆதரவாளரென்றும் தனிப்பட்ட குரோதம் காரணமாகவே சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர் மாட்டப்பட்டிருக்கிறாரென்றும் நாரிமன் பல உதாரணங்களுடன் தன் வாதங்களை முன்வைத்தார். "எஸ்.பி.பிரேம்குமார் மீது தனிப்பட்ட சட்ட மீறல் குற்றச்சாட்டுக்கள் நிறையவே உள்ளன. அப்பாவிகளைக்கூட அடித்துப் பொய்யான குற்றங்களை ஒப்புக்கொள்ளச் செய்வார் பிரேம்குமார். இதனால் அவருக்குச் 'சயனைட் பிரேம்குமார்' என்றுகூடப் பெயருண்டு" என்று வாதிட்டார் நாரிமன். அவருக்கு எஸ்.பி.புரமோஷன் கொடுத்ததே செல்லாதென்று கோர்ட் சொல்லியிருக்கிறது என்றும் வாதிட்டார் நாரிமன். பிரேம்குமாரை மாற்ற வேண்டுமென்று ஏற்கனவே தமிழக பி.ஜே.பி., கவர்னரிடம் மனுக் கொடுத்திருப்பதும் 'ஆச்சார்ய சபா' என்ற அமைப்பு மத்திய உள்துறை அமைச்சரிடம் புகார் கொடுத்திருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.



நாரிமன்

ஜெயேந்திரர் செய்ததாகக் கூறப்படும் ஊழல்கள், சில்மிஷங்கள் பற்றி அரசின் அறநிலைத் துறைக்கு அறிவிப்பேனென்றும் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதுவேனென்றும் மிரட்டியிருந்தாராம். தனக்கு ஏதாவது நடக்கலாமென்றும் நண்பர்களிடம் தெரிவித்தாராம் சங்கரராமன். பொது மக்களுக்கு சகலதையும் விளக்குவதற்காக நோட்டீஸ் அடித்து சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். மகா பெரியவரின் சமாதியைத் தரிசிக்கச் சென்ற சங்கரராமனைக் கண்டபடி திட்டி வெளியே போகுமாறு மிரட்டினாராம் சுந்தரேச ஐயர். சுந்தரேசன் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டினாரென்றும் பாதுகாவலர்களைக் கொண்டு தந்தையை

உஜ்ஜயினீ நித்ய கல்யாணீ
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
உஜ்ஜய காரண சங்கர தேவீ
உமா ஸரஸ்வதீ ஸ்ரீ மாதா ஸா.

சுப்பிரமணிய பாரதியார்–

கொக்கின் மன மாற்றம்

து கிராமம் என்ற சிற்றூரின் அருகே தத்தியார் என்றொரு குளம் இருந்தது.

அந்தக் குளக்கரையில் உயரமான புளிய மரம் ஒன்று நின்று கொண்டிருந்தது.

அந்தப் புளிய மரத்தில் கொக்கு ஒன்று வசித்து வந்தது.

அந்தக் கொக்கானது, காலையிலும் மாலையிலும் குளக்கரையில் ஒதுங்குகின்ற மீன்களை எல்லாம் கொத்திச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

ஒருநாள் பெரிய மீன், ஒன்று கொக்கின் அலகில் மாட்டிக் கொண்டது.

அந்த மீன் கொக்கைப் பார்த்து பரிதாப மடைந்து, "கொக்கே! உன்னைப் பார்க்கையில் எனக்குப் பரிதாபம் ஏற்படுகிறது. நீ எத்தனை நாட்கள் தான் இந்தக் குளத்திலிருந்து எங்கள் இனத்தாரைப் பிடித்து உண்டு கொண்டிருப்பாய்? இந்தக் குளத்தில் தண்ணீர் வற்றி விட்டால் இதைப் போல் எங்கள் இனத்தாரை நீ பிடித்து சாப்பிடமுடியுமா?" என்று கேட்டது.

'சாகும் நிலையிலும் இந்த மீனானது தன்னிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கின்றதே!' என்று வியப்படைந்தது கொக்கு.

உடனே அந்த மீனைக் கொல்ல மன மில்லாத கொக்கு, அதனைத் தண்ணீரிலேயே விட்டுவிட்டு தான் வசித்து வந்த மரக்கிளையில் வந்து அமர்ந்து கொண்டது.

'அந்த மீன் தெரிவித்தபடி இந்தக் குளத்தில் தண்ணீர் வற்றிவிட்டால் நாம் எங்கே செல்வது? அதன்பின் நாம் எப்படி உயிர் வாழ முடியும்?' என்று கவலையடைந்தது கொக்கு.

இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபட நாம் என்ன செய்யலாம் என்று யோசனை செய்தது கொக்கு.

'இதனைப்பற்றி நாம் யாரிடமாவது விளக்கம் கேட்க வேண்டும். அபபோதுதான் இதற்கொரு நல்ல முடிவினை நாம் எடுத்துக் கொள்ள முடியும்!' என்று நினைத்தது.

அப்போது அந்த குளத்தில் காவி உடையணிந்து ஒரு மனிதர் குளிக்க வந்தார்.

மரக்கிளையில் அமர்ந்திருந்த கொக்கு அந்த மனிதரையே உற்றுப் பார்த்தது.

அவர் கண்கள் பிரகாசமாக பார்ப்பதற்கு ஒரு மகானைப் போன்று தெரிந்தார்.

'இவர் நிச்சயமாக ஒரு முனிவராகத்தான் இருக்க வேண்டும. நாம் இவரிடம் நமது எண்ணத்தில் இருப்பவற்றை தெரியப்படுத்து வோம். இவர் நிச்சயமாக இதற்கொரு வழியினைக் கூறுவார்' என்று எண்ணியது கொக்கு.

அந்த மனிதர் குளித்து முடிக்கின்ற வரை யிலும் பொறுமையுடன் காத்திருந்தது கொக்கு.

குளித்து முடித்து கரையேறி தியானத்தில் ஆழ்ந்தார் அவர்.

கொக்கு மீண்டும் பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தது.

அவர் தியானம் முடிந்து எழுந்து புறப்பட்டார்.

கொக்கு வேகமாகப் பறந்து வந்து அவர் முன்னே நின்றது.

"சுவாமி வணக்கம்! இதோ இந்த குளக் கரையில் இருக்கின்ற புளிய மரத்தில் நான் வசித்து வருகிறேன். தங்களைப் பார்த்ததும் முக்காலமும் உணர்ந்த முனிவர் போன்று தெரிகிறது. எனவே என் மனதுள் எழுந்த சந்தேகத்தை தங்களிடம் கேட்டுத் தெளிவு பெறலாம் என்று வந்தேன்" என்றது கொக்கு.

அந்த மனிதர் கொக்கை கருணையோடு பார்த்தார்.

"கொக்கே! நீ எண்ணியது உண்மைதான். நான் ஒரு முனிவர். உன் எண்ணத்தைத் தெளிவுப் படுத்த என்னால் முடியும்! நீ எதுவாக இருந்தாலும் என்னிடம் தாராளமாகக் கேட்கலாம்" என்றார் அவர்.

"சுவாமி! நான் இந்தக் குளத்தில் காலையும் மாலையும் கரை ஒதுங்குகின்ற மீன்கள் பிடித்துச் சாப்பிட்டு வாழ்ந்து வருகிறேன். சற்று நேரத்திற்கு முன்னர் நான் ஒரு பெரிய மீனைப் பிடித்தேன். அந்த மீன் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டது. அந்தக் கேள்வியில் நான் கதி கலங்கி விட்டேன்!" என்றது கொக்கு.

"அந்த மீன் உன்னிடம் அப்படி என்ன கேள்வியைக் கேட்டது?" என்று கேட்டார் முனிவர்.

"முனிவரே! மீன் என்னைப் பார்த்ததும் 'கொக்கே! நீ குளத்தில் தண்ணீர் இருக்கும் வரையிலும் மீன்களைப் பிடித்து சாப்பிடுவாய்! குளத்தில் தண்ணீர் வற்றி விட்டால் எதனைச் சாப்பிடுவாய்?' என்று கேட்டது. நானும் பதில் சொல்ல முடியாமல் அந்த மீனை தண்ணீரிலே விட்டு விட்டு குழப்பத்துடன் மரக்கிளையில் அமர்ந்து கொண்டேன். இப்போது தங்களைப் பார்த்ததும் ஓடோடி வருகிறேன்" என்றது கொக்கு.

முனிவர் ஒரு நிமிடம் கண்களை மூடியபடி யோசனை செய்தார். பின்னர் கொக்கைப் பார்த்தார்.

"கொக்கே! கோடை காலத்தில் தண்ணீர் வற்றி விட்டால் இப்போது கிடைக்கும் மீன்களைப் போன்று சுவையான மீன்கள் உனக்குக் கிடைக்காது. அதனால் நான் சொல்லுகிற யோசனையைக் கேட்டு நடந்து கொண்டால் உனக்கு கோடை காலம் மட்டு மல்ல, குளிர் காலத்திலும் உணவுப் பற்றாக் குறையே ஏற்படாது" என்றார் முனிவர்.

"அப்படியா! கேட்பதற்கு வியப்பாக இருக்கின்றது! உங்கள் யோசனையைக் கேட்க ஆவலோடு இருக்கிறேன்" என்றது கொக்கு.

உடனே முனிவர், "கொக்கே! இந்த உலகில் பலரும் எப்படியோ வாழலாம் என்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் வாழும் வாழ்க்கையில் உணவானது முக்கிய பங்கை வகிக்கின்றது. இவர்கள் தங்கள் உணவைப் பலவாறாகத் தேர்ந்து எடுக்கின்றனர். உணவில் சைவம், அசைவம் இரண்டும் இருக்கின்றன. சைவ உணவை சாப்பிடுகின்றவன் வாழ்க்கையில் தான் எண்ணியவற்றைச் சாதிக்கின்றான். அவனது வாழ்க்கை பல்வேறு காரணங்களால் சிறப்படைகிறது.

அசைவ உணவைச் சாப்பிடுகிறவன் உடல் வியாதிகளையும், பாவத்தையும் சம்பாதிக்கிறான். உண்ணும் உணவினால் உலக உயிரினங்களின் குணமும் மாறுபடு கிறது!" என்றார் முனிவர்.

"முனிவரே! உண்ணும், உணவினால் உலக உயிரினங்களின் குணம் எப்படி மாறுபடுகிறது?" என்று கேட்டது கொக்கு.

"கொக்கே! இந்த உலகில் நிலையென வாழ்க்கை ஒன்று இருக்கிறது. தீபத்தை எரிக்க உதவும் விளக்குத்திரியைப் போன்று தான் எரிந்து மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் தியாக வாழ்க்கையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்! சைவ உணவினால் மட்டுமே மனதில் நல்ல சிந்தனை வளர்ந்து தியாக உணர்ச்சியானது மேலோங்குகிறது. எனவே வாழ்க்கையில் ஒருவர் உண்ணும் உணவு முக்கிய பங்கினை வகிக்கின்றது. நீ அப்பாவி மீன்களைக் கொத்திக் கான்று சாப்பிடுவதால் ஒரு நாளைக்கு எத்தனையோ உயிர்களைக் கொல்கிறாய்! ஒரு உயிர் எப்போதுமே இன்னொரு உயிரை வாழ வைக்க வேண்டும்! இன்னொரு உயிரின் மரணத்திற்குக் காரணமாக இருக்கக்கூடாது" என்றார் முனிவர்.

முனிவரின் பேச்சைக் கேட்டு கொக்கு தெளிவடைந்தது.

உடனே அது முனிவரிடம் "ஐயா! நீங்கள் இதுவரையிலும் கூறிய அறிவுரையில் இருந்து எனக்குள் ஒரு தீர்மானத்தை நானே வகுத்துக் கொண்டேன். அதன்படி நான் நடந்து கொண்டால், எந்த நேரமும், மகிழ்ச்சியோடு வாழலாம் போல் தெரிகிறது!" என்றது.

"கொக்கே! நீ வகுத்துக்கொண்ட தீர்மானம் என்னவோ!" என்று கேட்டார் முனிவர்.

"முனிவரே! இனி நான் மீன், நண்டு போன்ற அசைவ உணவுகளைச் சாப்பிட மாட்டேன். சைவ உணவையே சாப்பிட்டு உயிர் வாழ்வேன். ஒருவேளை நான் அந்த பெரிய மீனைக் கொல்லாமல் விட்ட புண்ணியத்திற்காகத்தான் உங்கள் தரிசனமும், அறிவுரையும் எனக்குக் கிடைத்திருக்கலாம் போன்று தெரிகிறது!" என்று உணர்ச்சிப் பொங்கக் கூறியது கொக்கு.

"கொக்கே! நானும் இதைத்தான் கடைசியில் உன்னிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். நீயே அதனைப் புரிந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சியினை அளிக் கிறது" என்றார்.

"முனிவரே! தங்கள் அறிவுரையை நான் என்றுமே மறக்கமாட்டேன். அதோடு உண்ணும் உணவின் அவசியத்தையும் சைவ உணவின் பெருமைகளையும் நான் என் போன்ற பறவை இனங்களுக்கு எடுத்துரைப்பேன்" என்றது கொக்கு.

"கொக்கே தன்னை வருத்திக்கொண்டு அடுத்தவர்கள் பயன்படும்படியாக வாழ்வது தான் உலக உயிரினங்களின் உன்னத வாழ்க்கையாகும். நானும் எல்லோர்க்கும் நல்ல செய்தியினைச் சொல்கிறேன்! நீயும் உன் போன்ற பறவைகளுக்கெல்லாம் நல்ல செய்தியினைத் தெரியப்படுத்து" என்றபடி கொக்கிடம் இருந்து விடைபெற்றார் முனிவர்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.05.2005.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: 595
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 593

பரிசுக்குரியவர்:
சா.ஸ்ரீஹரி, ஸ்ரீதேவி கோயில்,
கொம்மாதுறை, செங்கலடி.

பாராட்டுக்குரியவர்கள்:

பி. நவீனன், பீரித்தவல வீதி, மாத்தளை.	ர. வினோ, T.V.K. மில் வீதி, செங்கலடி.
உ. உஷாந்தினி, கந்தப் போடியார் வீதி, ஏறாவூர்-05, செங்கலடி.	ஆர். நிரஞ்சனா, தரம் 10, T.V.K. மில் வீதி, செங்கலடி
செல்வி ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B கந்தவத்த, மல்வானை	என். ஜினா, 191, புவகொடமுள்ள, பதுளை.
எம்.ஐ. மொஹமட் அஸ்லம், 116, ஓடாவியார், எறாவூர்-2C.	யோகராசா சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
பிரியங்கா பெனடிக்ட், 66 புதிய வீதி, 1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.	ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை.

பாப்பா முரசு சிறுகதை

ஆத்திசூடி

அனந்தல் ஆடேல்

நீ அறிவை மயக்கி துன்பத்தைத் தருகின்ற மகவை அனுபவிக்க முயலாதே (அனந்தல் - மயக்கம்)

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

அதிசய உலகம்

ஈர்ப்பு ஆற்றல் வீதிகளைக் கண்டு பிடித்த மாபெரும் விஞ்ஞானி சர் ஐசாக் நியூட்டன்.

சில பங்களாக்களில் பூனை, நாய் போன்ற விலங்குகள் சென்றுவர, கதவில் ஒரு சின்னக் கதவு இருக்கும். இந்தச் சின்னக் கதவைக் கண்டு பிடித்ததும் நியூட்டன் தான்.

உலகிலேயே அதிக உயரமான கடவுள் சிலை, இந்தோனேஷியாவில் உள்ள பாலித் தீவில் உருவாகிக் கொண்டிருக்கிறது. நியூயோர்க்கின் சுதந்திர தேவி சிலை, இத்தாலியின் பைசா கோபுரம் ஆகியவற்றைவிடச் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை இதுவே மிகுதியாகக கவரும் என்று சொல்கிறார்கள். கருட வாகனத்தில் விஷ்ணு அமர்ந்திருப்பது போல் இந்தச் சிலை உருவாக்கப்படுகிறது. சிலைக்குப் பெயரே 'கருட விஷ்ணு' இந்தோனேசியாவின் தேசிய சின்னம் 'கருடன்' என்பது குறிப்பிடத் தக்கது.

உங்கள் பொது அறிவு எப்படி?

1. இலங்கையில் கிறிஸ்தவத்தைப் புகுத்தியவர்கள் - **போர்த்துக்கீசர்.**
2. போர்த்துக்கீசர் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு - **1505**
3. இலங்கையில் புரட்டஸ்தாந்து மதத்தைப் புகுத்தியவர்கள் - **ஒல்லாந்தர்.**
4. இன்று நம்நாட்டின் பாவனையில் சில போர்த்துக்கேயச் சொற்கள் - **மேசை, கோப்பை, பீரிஸ், சப்பாத்து, ஆயா.**
5. ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சி புரிந்தமைக்குச் சான்றாக இன்றும் இருக்கும் சின்னங்கள்? **உரோம டச்சுச் சட்டம், அவர்கள் கட்டிய கோட்டைகள், அவர்களால் எழுதப்பட்ட தோம்புகள், லைடன், நெடுந்தீவு (டெல்பி), ஊர்காவற்றுறை (கயிற்ஸ்) ஆகிய இடங்கள்.**
6. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி எப்போது ஆரம்பமானது? - **15.02.1706**
7. முதலில் நியமிக்கப்பட்ட ஆங்கிலேய ஆளுனர் யார்? - **பிரெடறிக் நோத் 1793**
8. இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக எவ்வாண்டில் வந்தது? **1803 இல்**

திகில் பெட்டி

வானிலிருந்து வலைக்கு



இரும்பும் மலரும்

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்குத் தண்டனை வழங்கும் பொலிஸாருக்கு நடந்த சோகமே இது. பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போர் விமானமொன்று இயந்திரக் கோளாறினால் பொலிஸ் கார் ஒன்றின்மேலேயே தரையிறங்கியது. போக்குவரத்து விதிகளை மீறும் விமானங்களுக்குத் தீர்ப்பு வழங்க பொலிஸ் புத்தகங்களில் சட்ட திட்டங்கள் எதுவும் இல்லாததால் வீழி பிதுங்கி இருக்கிறார்கள் பெஸ்ஸர்.

அளவுக்கு மீறினால்

இரட்டையர்கள் என்றால் அனைவருக்கும் அவர்கள் இருவரும் ஒரே உருவ அமைப்பு உடையவர்கள் என்றே எண்ணத்தோன்றும். ஆனால் இங்குள்ள இரட்டையர்கள் பரும ஒற்றுமை உடையவர்கள். அதாவது இவர்கள் இருவரும் பருமனில் உலக சாதனை படைத்துள்ளவர்கள். பில்லி லியோன், பெனி லைலோண்ட் என்ற இருவரும் 1946ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார்கள். இவர்கள் தங்கள் ஆறு வயதுவரை சாதாரண நிறையுடையவர்களாகவே காணப்பட்டார்கள். ஆயினும் ஆறு வயதிற்குப் பின் இருவரது பருமனும் அதிகரித்து 337 கி.கி. எட்டியது. இவர்கள் ஒவ்வொருவருடைய தோள் பட்டையின் அகலம் 2.13மீ. ஆகும். இவர்களில் பில்லி 1979ஆம் ஆண்டும், லைலோண்ட் 2001ஆம் ஆண்டும் மாரடைப்பு மூலம் கால மானார்கள்.

ரயில் தண்டவாளங்களுக்கு இவர் மலர் தூவுவது பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருந்தாலும், அதில் ஒரு சோகமும் இழையோடுகிறது. ஆம் இவர் இவ்வாறு செய்வதற்குக் காரணம், கடந்த வருடம் ஸ்பெயின் மெட்ரிட் நகரில் உள்ள இவ் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த புகையிரதத்தில் தீவிரவாதிகளால் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இவருடைய உறவினரும் இறந்துள்ளனர். அதனால் ரயில் தண்டவாளத்திற்கு பூ வீசி அச்சோகச் சம்பவத்தை நினைவுகூருகிறார். இவ் அனர்த்தத்தில் மொத்தமாக 191 பேர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயையும் பூனையையும் எதிரிகளாகவே நாம் இனங்கண்டுள்ளோம். ஆனால் சில நேரங்களில் அச் சாதாரண நிலைமை மாறி அவைக்குள்ளும் மனிதம் தலைதூக்குகிறது. சீனாவின் குவாங்கோ நகரில் வாழும் இந் நாயார் பூனைக்குப் பாலூட்டிப் போசிப்பது மாத்திரமின்றி, இரவில் உறங்குவதும் பூனையாரைத் தனது அரவணைப்பில் வைத்துக்கொண்டே.



அசாதாரண அரவணைப்பு

நாமும் சளைத்தவர்களல்லர்!

அண்மையில் நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வுக்கு வருகை தந்த பிரபல ஹொலிவூட் நடிகைகளான கேட் வின்ஸ்லே, பெனிலபீ:குத் அணிந்து வந்த ஆடைகளைப் போல் தமக்கும் வேண்டும் என்று எஜமானர்களைக் கேட்டார்களோ தெரியாது இந்த நாய் அழகிகள்.

ஆம், இச் செல்ல நாய்களுக்கு ஹொலிவூட் அழகிகளின் ஆடைகளை வடிவமைத்துக் கொடுத்த நியூயோர்க் நகர பிரபல ஆடை வடிவமைப்பாளரான 'ஆடா நீவேஸ்' தனது சின்னச் சின்ன ஆசைகளில் ஒன்றை நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.



மிகப் பெரிய ஆகாய ஓடம்

தற்போது உலகில் பெரிய பயணிகள் விமானம் A380 என்று எல்லோருக்கும் தெரியும். ஆயினும் இதற்கெல்லாம் முன் உலகில் மிகப் பெரிய ஆகாய விமானம் 1938ஆம் ஆண்டு ஜெர்மனியர்களால் உருவாக்கப்பட்டுவிட்டது. இதன் அகலம் அண்ணளவாக 245 மீ. இது திரவ ஐதரசன் வாயுவைப் பாவித்தே இயங்க வைக்கப்பட்டது. இதன் எரிபொருட் தாங்கியின் கொள்ளளவு 200,000m^3 ஆயினும் இவ் ஆகாய விமானமானது தனது இரண்டாவது பயணத்தின் போது ஏற்பட்ட விபத்தில் முற்றிலுமாக தீப்பற்றி எரிந்தது. என்பது கவலைக்குரிய விடயம்தான்.

ரஜினி - P.வாசு - வடிவேலு
சந்திரமுகி

தமிழ் நாட்டு ஆண்கள் அழகானவர்கள்

-நயன்தாரா

'சந்திரமுகி' சந்தோஷத்தில் டென்னிஸ் வீராங்கனை சயானியா மிர்ஸா ஸ்டைலில் மூக்கு வளையமும், டைட் ஜீன்சும், கிக்கான டி-சர்ட்டுமாய் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் நயன்தாரா.

"புதுமுகமா வந்த எனக்கு மிகப்பெரிய ஆதரவு கொடுத்த பத்திரிகையாளர்களாகிய உங்களுக்கு ஒரு நன்றி சொல்லத்தான் இந்தச் சந்திப்பு" என்றார்.

அது என்ன நயன்தாரா?

"அது ஒரு வங்காள மொழிப் பெயர். நயன் என்றால் கண்கள். நயனம் என்றால் பாவனை. தாரா என்றால் நட்சத்திரம். இதுதான் அர்த்தம்."

பெயரிலே நட்சத்திரம் இருப்பதால்தான் எடுத்த எடுப்பிலேயே பெரிய நட்சத்திரங்களுடன் எல்லாம் நடித்து கலக்குகிறீர்களோ? நாம் கேட்டதும்....கன்னக்குழி விழ சிரித்தார் நயன்தாரா.

இளம் நடிகர்கள் பலர் இருந்தும் சரத், ரஜினி எனப் பெரிய நடிகர்களுடன் நடிக்கிறீர்கள். சீனியர் நடிகர்களுடன் நடிப்பது பற்றி இளம் நடிகையான நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

"இதில் நினைப்பதற்கு என்ன இருக்கிறது? எனக்கு வாய்ப்புகள் அப்படி அமைந்தது. தொடர்ந்து எஸ்.ஜே.சூர்யாவுடன் 'கள்வனின் காதலி', சூர்யாவுடன் 'கஜினி', சிம்புவுடன் 'வல்லவன்' என இளம் ஹீரோக்களுடனும் நடித்துக்கொண்டுதான் இருக்கிறேன்."

'கள்வனின் காதலி' புகைப்படங்களைப் பார்த்தீர்களா?

"பெரிய பெரிய ஹோடிங்லையே பார்த்தேன். நல்லாத்தானே இருக்கிறது"

ஐயா, சந்திரமுகி என ஹோம்லியாக நடித்துவிட்டு, 'கள்வனின் காதலி'யில் இவ்வளவு கிளாமராக நடிக்கிறீர்களே....? சம்பளம் அதிகம் கொடுத்தால் எப்படி வேண்டுமானாலும் நடிப்பீர்களா?

"சம்பளம் என்று சொல்ல முடியாது. கதைக்கு ஏற்ப மாடர்னாகப் பண்ணியிருக்கிறேன்."

எஸ்.ஜே.சூர்யா படம் என்றால் முத்தக் காட்சிகள் இருக்குமே?

"அப்படி ஒரு காட்சி இருப்பதாக இதுவரை அவர்கள் சொல்லவில்லை."

தமிழ் சினிமாவுக்கும் கேரள சினிமாவுக்கும் எந்தளவு வித்தியாசம்?

"ஒட்டுமொத்தமாக வித்தியாசம் இருக்கிறது."

தருண் - கஜாலா
இவன் யாரோ

ஐயா என வந்தீர்கள். சந்திரமுகி ஆக்கிவிட்டோம். தமிழ்நாட்டு ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

"மிக அழகானவர்கள்."

"அப்படி என்றால்.....தமிழ்நாட்டு வாலிபரைக் கல்யாணம் செய்துகொள்வீர்களா?"

"ஏன் கூடாது....?!" கேட்டு விட்டு வெட்கமாய் சிரிக்கிறார் நயன்தாரா.

சூர்யாவின் சூட்சுமங்கள்

தனது பி.எ.ப்.ப். படத்திற்கு எழுந்த எதிர்ப்பைப் பார்த்த எஸ்.ஜே.சூர்யா, நியூ படக் கதையாகிவிடக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கையோடு தனது படத்திற்கு 'அ...ஆ...'என்று தமிழ்ப் பெயராக மாற்றியவர். தன்னுடன் கதாநாயகியாக நடிக்கும் நிலாவிற்கும் தமிழ் சொல்லித் தர ஆசைப்பட்டு, டியூசன் மாஸ்டர் ஒருவரை அரேன்ஞ் பண்ணினார். வந்த மாஸ்டருக்கோ தமிழ்தான் தெரிந்ததே தவிர...ஆங்கிலம் தெரியவில்லை. அதனால் அவரைத் துரத்திவிட்டு, ஹிந்தியும் தமிழும் நன்றாகத் தெரிந்த ஒருவரை வைத்து தமிழ் கற்றுத் தருகிறார். அதுமட்டுமல்லாமல், நிலாவை எப்படியாவது தன்னுள் சிறைப்படுத்திவிடவும் முயற்சி செய்கிறார்.

எங்கு போனாலும் இருவரும் சேர்ந்தே சென்று வருவதையும், 'அறிந்தும் அறியா மலும்' பட பாடல் கேசட் வெளியீட்டு விழாவுக்கும் இருவரும் இணைந்தே வந்ததையும்..... நாம் துருவியபோது, சூர்யாவின் அசிஸ்டெண்ட் ஒருவர் அத்தகவலை வெளியிட்டார். அதாவது தனது அசிஸ்டெண்டுகளிடம் தன்னைப் பற்றி நிலாவிடம் புகழ்ந்து கூறுமாறு சொல்லி வைத்திருக்கிறாராம். 'கோலிவுட்டில் மிகப் பெரிய டைரக்டர் சூர்யா பெரிய நடிகர் இவர்' என்று புல்டப் செய்யச் சொல்லியிருக்கிறாராம் சூர்யா. இவர்களும் அப்படியே நிலாவிடம் சூர்யாவைப் பற்றிப் புல்டப் பண்ண.....அம்மணியோ சூர்யாவை கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தோடு, சூர்யாவின் ஐடியா தெரியாமல் அவருடன் சுற்றிக்கொண்டிருக்கிறாராம்.

பல நாள் திருடர் ஒரு நாள் அகப்படாமலா போய்விடுவார் என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள்!

ரவி - ரேணுகா மேனன்

பீபாஷாவின் பீடிவாதம்

மும்பையிலிருந்து பிபாஷாபாசு, 'சச்சினு'க்காக அழைத்து வந்ததிலிருந்தே அம்மணி ஏக செலவு வைத்துவிட்டார். ஸ்டார் ஹோட்டல் பார்களில் அவர் குடித்த பில்லே பெரிசாம். கால்ஷீட் வாங்கிய நாட்களை விடக் கூடுதலாக அவரை வைத்துப் படம் பண்ண வேண்டியிருந்தது. இதனால் உஷாரான பிபாஷாபாசு, கொடுத்த 80 இலட்ச ரூபாயைவிட மேலும் சில லகரங்கள் வேண்டும் என வம்படிக்க...தயாரிப்பாளர் தாணு மறுத்திருக்கிறார். இதனால் பஞ்சாயத்து. பிபாஷாவால் பிரச்சினை வேண்டாம் என எண்ணிய விஜய், தனது சம்பளத்திலிருந்து சில லகரங்களைப் பிபாஷாவுக்காக விட்டுக்கொடுத்திருக்கிறார்.

அதன்பிறகு கிளுகிளுப்பாய் போனஸ் கவர்ச்சியோடு நடித்திருக்கிறார். இருந்தும் என்ன பயன்?

சென்ஸாரில் பிபாஷாவின் கிளுகிளு தரிசனம் கட்டாகிவிட்டது. அதோடு கோர்ட் கேஸ்களில் சிக்கி ஒரு பாடலும் வேட்டாகிவிட்டது. கோலிவுட்டுல இருக்கிறதை விட்டுட்டு பாலிவுட்டுல பறக்கிறதுக்கு ஆசைப்பட்டாங்க. ரிசல்ட் இப்படி ஆகிப்போச்சு!



இதய திருடன் படப்பூஜையின் போது

பிடிபடுவாரா கீதா?

அறிந்தும் அறியாமலும் படத்தை தயாரித்து வரும் 'புன்னகைப் பூ' கீதா, மலேசியாவைச் சேர்ந்தவர். அங்கே இருக்கிற தமிழ் வானொலியில் தொகுப்பாளினியாகத் தன் குரலினால் வசீகரித்துக் கொண்டிருப்பவர். குரல் மட்டுமல்ல....ஆளும் அழகாக இருக்கிறார். பக்கா குடும்பத்தனமாக கொழுகொழுன்னு இருக்கும் தயாரிப்பாளர் கீதாவைச் சுற்றிச் சுற்றி வருகிறார் பார்த்திபன். அய்யய்யோ.....தப்பா எதுவும் நினைக்காதீங்க.... கீதாவை தனது படத்தில் கதாநாயகியாக நடிக்க வைக்கத்தான் பார்த்திபன் சுற்றிச் சுற்றி வர்றார். பார்த்திபன் சுற்றலுக்கு கீதா வளைந்து கொடுப்பாரா?

பொறுத்திருந்து பார்க்கலாம்.

பீபாஷாபாசு

சினிவிசி

நடிகைகளுக்கு மட்டும் எப்போதும் ஏதாவது அகலமாக இருக்கும். அதையும் அவர்கள் விட்டுவைப்பதில்லை. அந்த லிஸ்ட்டில் லேட்டஸ்டாக சேர்ந்திருப்பவர் சோனியா அகர்வால். தனது தாடைப் பகுதி அகண்டு சில சமயங்களில் முரட்டுத்தனமாகத் தெரிவதாக தனக்கு 'வேண்டப்பட்டவர்' அடிக்கடி சொல்ல...இப்போது அதை சர்ஜரி செய்யப் போகிறாராம்.

மலையாளத்தில் மம்முட்டி நடித்து மெஹா ஹிட்டான படம் 'தொம்மனும் மக்களும்'! திருடுவதையே தொழிலாகக் கொண்ட ஒரு குடும்பத்தின் கதை! அப்பா இரண்டு மகன்களைப் பற்றிய கதை. மலையாளத்தில் அப்பாவாகவும் ஒரு மகனாகவும் மம்முட்டி நடித்திருந்தார். இப்போது அந்தப் படத்தை தமிழில் தயாரிக்கிறார் ராக்லைன் வெங்கடேஷ். ஹீரோ விக்ரம். இதில் அப்பாவாக மணிவண்ணன், மூத்த மகனாக விக்ரமும், இன்னொரு மகனாக மலையாளப் புதுமுகம். படத்திற்கு கதாநாயகியாக த்ரிஷாவையே போடச் சொல்லியிருக்கிறார் விக்ரம். தெலுங்கில் த்ரிஷா பிஸியாக இருப்பதால் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

ரேணுகா மேனன்

ரஜினி தன் பெயரை ரஜ்னி என நியூமராலஜி பிரகாரம் மாற்றியிருக்கிறார்.

மூகப்பில் நயன்தாரா

பி.வாசு கூடறிய ரஜினியின் இரகசியம்

பி.வாசுவுக்கு இப்போது 50 வயது. அவரின் 50ஆவது படம் 'சந்திரமுகி'. இந்த ஃபிப்டி ஃபிப்டி சந்தோஷத்தில் இருந்த வாசுவைச் சந்தித்தோம்.

சந்திரமுகி எப்படி?

"ஒரு படத்தைப் பொறுத்தளவு முதலில் அதைத் தயாரித்தவர் சந்தோஷப்பட வேண்டும். இரண்டாவதாக வாங்கியவர் சந்தோஷப்பட வேண்டும். மூன்றாவதாக நடித்தவர் சந்தோஷப்பட வேண்டும். அந்தச் சந்தோஷம் இருந்தால் டைரக்டருக்கும் நல்ல படம் பண்ணிய திருப்தி இருக்கும். சந்திரமுகியைப் பொறுத்தவரை மூன்று தரப்புமே ரொம்ப சந்தோஷத்தில் இருக்கிறது. அதனால் எனக்கு ரொம்ப ரொம்பப் பரம திருப்தி. நான் எதிர்பார்த்ததைவிட பல மடங்கு என்னைப் பாராட்டினார் ரஜினி."

ஒரு தோல்விக்குப் பிறகு ரஜினி வருவதால் இந்தப் படத்திற்கு மிகுந்த ரிஸ்க் எடுத்தீர்களா?

"எல்லா படத்தையும் இதுதான் என் முதல் படம் என நினைத்து உழைப்பேன். அப்படித்தான் சந்திரமுகிக்கும் உழைத்திருக்கிறேன். வழக்கமாக எனது படங்களில் ஆக்ஷனும் அம்மா, தங்கை சென்டிமெண்டும் தூக்கலாக இருக்கும். ஆனால் இதில் அப்படி இல்லை. இருந்தாலும் அந்த அம்சங்களும் இருப்பதுபோல் பார்த்து இயக்கினோம். காமெடிக்கும் முக்கியத்துவம் தந்தோம்."

ரஜினியை வைத்துப் படங்களை இயக்குகிறீர்கள். கமலை வைத்துப் படம் பண்ணவில்லையே?

"நான் முதன் முதலில் நெருங்கிப் பழகிய சினிமாக்காரர் கமல்தான். எங்களது குருநாதர் ஸ்ரீதர் இயக்கத்தில் 'இளமை ஊஞ்சலாடுகிறது' படம் பண்ணியதிலிருந்து அந்த நட்பு தொடர்கிறது. சிவாஜி பிலிம்சுக்காக நான் ஒரு படம் கமலை வைத்து இயக்கப் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் அது செட்டாகவில்லை. அதற்குப் பதிலாகத்தான் கமல் "கலைஞன்" படம் பண்ணினார். அதேபோல் ஏ.வி.எம். பேனரில் கமலை வைத்துப் பண்ணுவதற்கும் ஏற்பாடானது. அதுவும் அமையவில்லை. அதன்பிறகுதான் ஏ.வி.எம்.முக்கு நான் 'சேதுபதி ஐ.பி.எஸ்.' பண்ணினேன்."

நடிக்க வந்துவிட்டீர்கள். இனி தொடர்ந்து எதில் கவனம் செலுத்துவீர்கள்?

"நடிப்பு திடீர்னு வந்தது. நண்பர்கள் அழைத்தால் பண்ணுவேன். எனது நோக்கம் இயக்கம்தான்."

அடுத்த படம்?

"ஏழெட்டு மாத இடைவெளிக்குப் பிறகு ஒரு நல்ல கதையைத் தயார் செய்துகொண்டு இயக்கவிருக்கிறேன்" என்ற பி.வாசு, இன்னொரு இரகசியத்தையும் சொன்னார். அது.....

"இனிமேல் வருஷத்திற்கு ஒரு படம் பண்ணலாம்னு இருக்கிறேன்" என ரஜினி வாசுவிடம் பலமுறை சொன்னாராம். அதுதான் அந்த இரகசியம்!

சிவகுமார் வீட்டிலிருந்து மூன்றாவது ஹீரோ

டீம் ஒர்க் புரொடெக்ஷன் ஹவுஸ் பேனரில் இயக்குநர் அமீர் தயாரிப்பு இயக்கத்தில் வெளிவந்து தற்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் ராம். இதில் கதாநாயகனாக நடித்த ஜீவா, முன்னணி நடிகர்களுக்கு இணையாகப் பேசப்பட்டார்.

ராம் படத்தைத் தொடர்ந்து அமீர் மூன்றாவதாக இயக்கவுள்ள படம்....'பருத்தி வீரன்'. இந்தப் படத்தை ஸ்டுடியோ கிரீன் பேனரில் கே.இ.ஞானவேல் தயாரிக்கிறார்.

தயாரிப்பாளருக்கு இது முதல் படம்.

சினிமா வட்டாரத்தில் மார்க்கண்டேயன் என்று அன்பாக அழைக்கப்படும் நடிகர் சிவகுமாரின் இரண்டாவது வாரிசு கார்த்தி இதில் நாயகனாக நடிக்கிறார். கார்த்தியின் அண்ணன் சூர்யா ஏற்கெனவே முன்னணி நடிகராக வலம்வந்து கொண்டிருக்கிறார். நடிப்பு வேண்டாம் என்று இயக்குநர் மணிரத்தினத்திடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவரைக் கூப்பிட்டு 'பருத்தி வீரனில்' கதாநாயகனாக அறிமுகம் செய்கிறார் அமீர்.

பிரபல நட்சத்திரங்கள் நடிப்பதாக சொல்லப்பட்டதே! ஏன் மறுபடியும் ஒரு புதுமுகத்துடன் களம் இறங்கியிருக்கிறீர்கள்? என்று அமீரிடம் கேட்டால் இந்தக் கதைக்கு ரஃப் அண்ட் டஃப் ஆக ஒரு இளைஞன் தேவைப்பட்டார். சூர்யா வீட்டிற்குப் போகும்போதெல்லாம் கார்த்தியைப் பார்த்திருக்கிறேன். சூர்யா மாதிரியே அபாரமான திறமையுள்ள இளைஞன். நான் தேடிய இளைஞன் கார்த்திதான் என்று என் உள்மனசு சொல்ல....சிவகுமார், சூர்யா இருவரிடமும் பேசி சம்மதிக்க வைத்தேன். படம் பார்த்தால்தான் நான் சொல்வது புரியும் என்கிறார் இயக்குநர்.

கார்த்தியின் ஜோடியாக புதுமுக நடிகை ஒருவரை அறிமுகப்படுத்துகிற வேலையில் இருக்கிறார் அமீர்.

வழக்கம்போல் செவத்த தோலைத்தான் தேடுகிறீர்களா...அல்லது கருப்புத் தோலா?

கதைக்குத் தேவை கருப்புத் தோல்தான். தமிழ் பேசத் தெரிஞ்ச ஒரு பொண்ணை நடிக்க வைக்கிறன்னு இருக்கிறேன். சத்தியமா மும்பை பக்கம் போகமாட்டேன்.

படத்தை தயாரிப்பது சிவகுமாரின் உறவினர் ஞானவேல். ஒருவேளை இது சிவகுமாரின் சொந்தப் படமோ?

சிவகுமார் சாருக்கும் இந்தப் படத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது முழுக்க ஞானவேல் தயாரிக்கிற படம்தான் என்றார் அமீர்!

அருகேயிருந்த கார்த்தியிடம் திடீர்னு டிராக் மாறிட்டீங்களே என்றோம்.

கிட்டத்தட்ட ஒரு வருஷமாவே எனக்குள்ள நடிப்பு ஆசை இருக்கத்தான் செய்தது. அதுக்கான நல்ல வாய்ப்பு அமையணும்னு காத்திருந்தேன். அமீர் சார் அப்படியொரு வாய்ப்பை தந்திருக்கிறார். அமீர் சார் என்ன சொல்லப் போகிறாரோ அதைத்தான் செய்யப் போகிறேன். இன்னும் நான் கதையைக்கூட கேட்டதில்லை. அண்ணன் சூர்யாதான் கதையைக் கேட்டு ரொம்ப நல்ல படமா அமையும் என்று என்னிடம் சொன்னார் என வெளிப்படையாக பேசினார் கார்த்தி.

இயற்கையின் கீதம்

எனக்கும்
விடுதலை வேண்டும்
என்றழுது
கொண்டிருக்கும்
விடிவெள்ளி!

புதிய விடியலில்
முகச்சவரம் செய்ய
பனித்தூறலில்
நனைந்திருக்கும்
புல்வெளி!

சூரியக் குளியலுக்கு
நிர்வாணமாகக்
காத்திருக்கும்
மலர்கள்!

வளிமண்டலத்தின்
வியர்வை
கலைக்கும்
தென்றல்!

வெளிச்சத்தில்
ஒளித்தொகுப்புக்காக
விழித்தெழுந்த
மரங்கள்!

சுதந்திரமாகக்
கவிதை பாடி வரும்
ஆறு!

கானலுக்காக
ஒளிந்துகொள்ளும்
மண்ணீர்!

எல்லாம்
என்னிருப்பிடத்திலிருந்து
வெளியேறிவிட்டதில்
வெறுமையே
மிச்சம்!

–எல்.வஸீம் அக்ரம்,
கஹடகஸ்திகிலிய.

கடலோரக் கவிதைகள்

கால் வயிற்றுக்
கஞ்சி குடிச்சாலும்
முற்றத்தில் கூடியிருந்து
பழைய நினைவுகளை
மீட்டையிலே!
நிறைந்து போகும்
மீதி வயிறு - அந்த
இனிய பொழுதுகள்
இழந்துவிட்ட
இளமையாய்!

காலை சேவல்
கூவையிலே
கண் விழித்து
முகம் கழுவி
கோப்பியால
தொண்டை நனச்சி
மண்வெட்டி
தோளிட்டு
வயல் நோக்கிப்
விரிந்து
மடியும்
ஓயாத அலையுடன்
துள்ளிக் குதித்தோடும்
மீன் கூட்டம்.....
கரையோடு
உயிரை விடும்
எண்ணிட முடியாத
நுரைக் குமிழிகள்....
ஆங்காங்கே
கிழிந்து
சிதறிக் கிடக்கும்
சிப்பிகள்...
மண்ணோடைக்குள்
ஓடி ஒளிந்து
விளையாடும் நண்டினம்....
காட்சி
இரசிக்க வருபவர்களை
வரவேற்கும் சுகமான
தென்றல் காற்று.....
தொந்தரவின்றி
தன்னந்தனியாய் உட்கார்ந்து
உள்ளங்களை
பரீட்சிக்கும் காதல்
ஜோடிகள்.....

சுஜாஹர் முகைதீன்,
நிந்தாவூர் 18.

போகையிலே
எழுகின்ற
உற்சாகம் வானவில்லாகி!

மாட்டு வண்டி
சத்தங்களும்
குருவிகளின்
ரீங்காரமும்
குயிலோசைதானுமந்த
இசையான
அந்நாளில்
எத்தனை
பாட்டெழும்!
அவைகளின்று
அமாவாசை
இரவுகளாய்!

–மபீஸா, புத்தளம்.

சபிக்கப்பட்ட சங்கீதங்கள்

என் நிதர்சனங்கள்
மீதெல்லாம்....
நிர்ப்பந்தங்களாய்.....
அத்துமீறிய
குடியேற்றங்களை....
அமைத்துப்
போனவனே...!

உன் நினைவுகள் தரும்
நெரிசலோடு
நகரும் நாழிகைகள்
வாழ்க்கைக் கவிதையின்
வசந்தங்கள் மீதிருந்த.....
நயன நம்பிக்கைகளை....
நசித்துப் போகின்றன.

கல்லறை
வாசகங்களாய்.....என்
காலப் பேனா எழுதும்...
கவிதைகளிலும்....
கலங்கரை
விளக்கமாய்....
நீ மட்டுமே....
காட்சி தருவதை.....
அறியாயோ அன்னமே!

வார்த்தை சரம் கோர்ப்பில்
வானவில் வர்ணம் காட்டி
மன வான அண்டத்தில்
மௌனமே பாஷையாகிப்
போனதால்
என் தேடலின் தேவபாணி
சபையில் ஏறாத
சங்கீதமாய்.....
இன்னும் உன்
சகவாசம் நாடும்.....
சக்ரவாகமாய் மட்டும்
சபிக்கப்பட்டிருக்கிறது.

வினோதமே! உன்
விழி பட்ட மின்னல்களை....
ஞாபக போர்வைகளுக்குள்
பக்குவமாய்...பத்திரப்படுத்தி
இருக்கிறேன்.
ஊமைக் காயங்களாய்
உள்ளிருந்து உயிர் கொல்ல
- அல்ல
வாழ்வின் நீளம் வரை....
வசந்தம் வீசவே....

–சிவனு மனோஹரன்,
ஹட்டன்.

நீ இல்லாத வாழ்க்கை

சீதைக்கப்படும்
ஒருவனொன்றை நோக்கி
உயிர்
முற்றி நகர்கிறது!

உன்
மௌனங்களை வாசித்தும்,
நேரில் காணும்
நிமிசங்களை யாசித்தும்
கிடந்த - நம்
கூப்பீடு தூரத்து
குரல்வளை
நசுக்கப்பட்டு
எத்தனை நாட்களாச்சு....?

இன்னும் முடிவின்றி
வருசங்களாய் நீடித்துப்போன
எனது நோன்பை
திறந்து கொள்ள
உனது வரவுக்காய்
காத்துக் கிடந்த
இந்த வாழ்வில்
இனி...நம்பிக்கை
இழந்து போகும்.

என்
பருவகாலத்து
பள்ளியறை
வெற்றிடங்களாலேயே
வெறிச்சோடிப் போயிற்று
நிர்வகிக்க
நீயின்றி...!

–ரோஷான் ஏ.ஜிப்ரி, கட்டார்.

ஆச்சு இன்று!.....

கர்த்தாலும்
கடையடைப்பும்
காசற்ற பொருளாச்சு.
பஸ் எரிப்பும்
பகிஷ்கரிப்பும்
பழக்க தோசமாச்சு.

வேலையில்லாப்
பிரச்சினையோ
வேலி கடந்து
போனபின்பும்
பட்டதாரிப் பட்டாளமோ
வருடா வருடம்
வங்கமாச்சு.

இடைக்கால
நிருவாகமும்
சமாதானப் பேச்சுக்களும்
முச்சந்தி நாய்களாச்சு.
அவஸ்தை
கோலமத்தனையும்
சனாதிபதிக்கே
உரித்தாச்சு.

துப்பாக்கிச் சூடுகளும்
துப்பறியாக்
கொள்ளைகளும்
இனந்தெரியாத நபராச்சு.
நாள் தோறும்
மரணங்கள்
அவரவர் விதியென்று
விட்டுமாச்சு.

திருட்டுப் பணப்
பரிமாற்றமோ
திருமணப் பந்தியாச்சு.
இலஞ்ச ஊழல்களும்
இனிப்புப் பண்டமாச்சு.

பாட்டாளி வர்க்கமோ
பரதேசிச் சனமாச்சு
ஏகபோகக்
கும்பலெல்லாம்
எங்கள்
பிரதிநிதிகளாச்சு.

–சி.அருண், கிரான்.

கனாக் காலம்

நாகரீகம்
தலைவிரித்தாடும்
நன்றி கெட்ட
சமூகத்துக்குள்
தானும்

நுழைந்து
கொள்ள
முயலுகின்ற
ஆன்மாக்கள்
இது...
மானுடம்
அருகிவிட்ட
மாசுபடிந்த
தரணியிலே
அவதாரம்
கொள்ளத்
துடிக்குது
இரு
உயிர்கள்...!

அன்னையின்
வலிகளுக்கு
விடுதலை கொடுத்து
அவள் தொடர்புக்கு
முழுக்குப் போட்டு
சுயமாக உலாவர
சீக்கிரமே வெளியேறிட
தவிக்குது
அந்த ஜீவன்கள்.....
பாரினில் தாமும்
பல்வேறு துயரங்களை
பங்குகொள்ள(வே)
பிறக்கிறோம்
என்பதை
அறியாமலேயே....!

–நஸீஹா சம்சாத்,
ஏத்தாலை.

கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"கவிதையும் அரசியலும் வெவ்வேறில்லை என்பது நாம் அறிந்ததுதான். கவிதை பிளவுண்ட மனதின் வெளிப்பாடு; பிளவுண்ட மனமோ அரசியலின் விளைவு....

கலை ஆறுதல் அளிக்கக்கூடியது மட்டுமல்ல; ஆறுதல் குலைக்கக் கூடியதும்தான். கலைஞனை நாம் வாழும் சூழலில் அதிகாரத்திற்கு எதிரானவனாகப் புரிந்துகொண்டால், அவன் தான் பயணிக்கும் கலை ஊடகத்தின் வழியாக அதிகார மதிப்பீடுகளை சிதைப்பவனாகவும் கலக மதிப்பீடுகளை மாற்றாகக் கட்டுபவனாகவும் திகழ்கிறான்.

அதிகாரத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் – முழக்கங்கள், அறிக்கைகள், சொற்பொழிவுகள் இவற்றிலிருந்து கவிதை எவ்வாறு வேறுபடுகிறது? மேற்சொன்னவை அறிவுறுத்தவும், வழிநடத்தவும் தூண்டுகின்றன; ஆனால் சிதைவுண்ட மனதின் கொந்தளிப்பைக் கவிதை மொழியில் கொண்டுவர முனைகிறது. உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் அறிவையும், அறிவை மீறத்துடிக்கும் உணர்ச்சியையும் கவிதை தனக்கேயான அழகியல் வழி பதிவு செய்கிறது. எங்கோ ஆழ்மனதின் மாய அறைகளில் புதைந்து கிடக்கும் ஆசையை, காமத்தை, குரோதத்தை, வக்கிரத்தை, காதலை மின்னல் கீற்றாய் கவிதை தன் ஊடாகக் கடத்த முயற்சிக்கிறது...

என்று குறிப்பிடும் கவிஞர் கிகிகாலனின் நான்கு கவிதைகள்."



"பிரியங்கா அப்படியே பாட்டி ஜாடை"
துணி மழித்து உட்கார்ந்தபடி
பேசிக் கொண்டார்கள்.

வீட்டுக்கொரு தொலைக்காட்சிப் பெட்டி
லட்சியமான போது
மருங்கூருக்குள் வந்துவிட்டது உலகம்
உலகத்துக்குத்தான் கவலையில்லை
மருங்கூர் பற்றி.....

சில சிரமங்களிலிருக்கலாம்
மந்தையிலிருந்து பிரிந்து
வெகுதூரம் சென்றுவிட்ட
ஆடுகளுக்கு.
தானே தேட வேண்டும்
பசிய புல் தரைகளை
நீர்நிலைகளையும் அப்படியே

முட்களதிகம் புதிய பாதைகளில்
சுவடுகளற்ற பூமியில்
சூரியனே திசை காட்டும் கருவி.

எதிரிகளிடமிருந்து
காப்பாற்ற மாட்டார்கள் யாரும்.

தன் கொம்பே தனக்குதவி
கலகம் செய்பவைகளுக்கு
ஒத்துழைப்பதில்லை
தற்காலிகப் பாதுகாப்பு விரும்புபவை.

இருந்தாலென்ன -
பட்டிகளில் அடைபட வேண்டாம்
பிரம்பின் எல்லைக்குள்
மேய வேண்டிய அவசியமில்லை.

மனிதர்களை விடவும்
குட்டிகளுக்கு மிக நல்லது ஆட்டுப்பால்.

முக்கியமாய்
மேய்ப்பனால் விற்கப்படுவதோ
இறைச்சிக்காய்
கொல்லப்படுவதோ நடக்காது.

வந்தவன்
போனவனைக்
குறை சொன்னான்.

இப்படியேதான்
போனவன்
வரும்போதெல்லாம்
வந்தவனைச் சொல்வான்.

வந்தவனும் போனவனும்
என்னைப் பேசுவதாய்
வழியில் பார்த்தவன்
சொன்னான்.

நான், வந்தவன், போனவன்,
வழியில் பார்த்தவன்
எப்போது கூடினாலும்
வராத ஒருவனைப் பேசுவோம்.

குறையில்லாத இருவர்
சந்தித்துக் கொள்ள
முடியாதவரை.....
முடிவதில்லை
இருப்பவரின் குறையை
இருக்குமிடத்தில் பேசுவது.

டயானா மரணமும்
கிளிண்டனின் காதல் லீலைகளும்
பஞ்சாயத்துத் தொலைக்காட்சியில்
பார்த்தபின் விவாதமாயிற்று
டீக்கடை பெஞ்சுகளில்.

முதிர்ந்த கரும்பு காய்ந்து கருக
ஆலை திறக்குமா?
நிலுவை கிடைக்குமா?
இருள் சூழ் மர்மமாயிற்று.

கழிப்பறைக்கு வழியற்று
ஒழுங்கைகளில் புதர்தேடும் பெண்கள்
புகைப்படமாய்
சட்டங்களுக்குள் இருக்கும் நான்
சிதைவடைந்து வருகிறேன்
கிட்டத்தட்ட அழியும் நிலைக்கு.

ஒன்று மட்டும் புலனாகிறது -
சட்டங்களுக்குள் அடைபட்டிருக்கும்
ஒன்றால்
மற்றதைக் கூட அல்ல,
தன்னையே காப்பாற்றிக்கொள்ள
இயலாது.

பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : சாதிக்
வயது : 25
முகவரி : P.O.Box No. 8769,
Doha, Qatar.
பொழுதுபோக்கு:
வழமையானவை.



பெயர் : ஆர். எம். ஆசாத்.
வயது : 20
முகவரி : 266, சென்ரல் வீதி,
திருகோணமலை.
பொழுதுபோக்கு :
வழமையானவை.



பெயர் : எஸ்.ஏ. முஸம்பில்.
வயது : 21
முகவரி : 95. என்.சி. வீதி,
திருகோணமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை.
ரி.வி.



பெயர் : எஸ்.எம். தஸ்மீர்.
வயது : --
முகவரி : 482, மேர்ஸா வீதி,
சாய்ந்தமருது -03.
பொழுதுபோக்கு : பத்திரிகை,

சுடிதார் சுடிதார்தான்

வசதியான உடை எது? என வாக்கெடுப்பு நடத்தினால் இப்போதைய டிரெண்டின்படி பெண்களின் நூறு சதவீத வாக்கு சுடிதாருக்குத்தான் போகும். நடந்தால், ஓடினால் தடுக்காத, உடலின் எந்தப் பாகத்தையும் வெளியில் காட்டாத வசதியான உடை சுடிதார். மார்க்கெட்டில் புதிதாக அறிமுகமாகியுள்ள சுடிதார் ரகங்கள் இவை.



கிடைக்கும் சுடிதார் செட்டுகளே இளம் பெண்களது விருப்பம். பட்டர் சாட்டின் சுடிதார்கள் விழாக்களுக்கு அணிந்து செல்ல ஏற்றவை.

ஹேண்ட் பிரிண்டட் சுடிதார்களுக்கு எப்போதுமே மவுசு உண்டு. இப்போது இவை புது வித டிசைன்களுடன் ஜரிகை

வேலைப்பாடு செய்யப்பட்ட துப்பட்டாவுடன் கிடைக்கின்றன. தினசரி உபயோகத்திற்கும் அணியலாம். விசேஷங்களுக்கும் அணியும் வகையில் ஆடம்பரமாகவும் கிடைக்கின்றன. இன்றைய நவநாகரீக உலகில் சுடிதார் மிகுந்த வரவேற்பைப் பெற்று விளங்குகிறது.

சுடிதார் ஆடம்பரமாகவும் மேலே அணியும் துப்பட்டாக்களை எளிமையாகவும் அணிந்தது பழைய .'.பேஷன் இப்போதைய .'.பேஷன் சுடிதார் எளிமையான பிரிண்ட் அல்லது எம்பிராய்டரிங்குடனும் துப்பட்டா கண்ணைக் கவரும் அழகிய ஆடம்பர டிசைன்களுடனும் அணிவதே. காட்டன் மெட்டல் ஷி.'.பான், மார்பிள் ஷி.'.பான் எனப் பலவித மெட்டீரியல்களிலும் இவை கிடைக்கும்.

அகோபா எனப்படும் துணிகள் சில வருடங்களுக்கு முன்பு வெகு பிரபலம். ஜாக்கெட் தைக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த அக்கோபா துணி மீண்டும் இப்போது .'.பேஷனாகி இருக்கிறது. அக்கோபா துணியில் லைனிங்குடன் தைக்கப்படும் சுடிதார்கள் இன்றைய கல்லூரி மாணவிகளது லேட்டஸ்ட் சாய்ஸ். எல்லாவித வெளிர் நிறங்களிலும் கிடைக்கிறது.

உடலை ஒல்லியாகக் காட்டிக்கொள்ள நினைப்பவர்களுக்கு பட்டர் சாட்டின் மற்றும் கிரேப் துணிகள் வரப்பிரசாதம். இவை உடலோடு ஒட்டிக்கொள்ளக் கூடியவை. உடலை உறுத்தாதவை. இவை இரண்டிலும் குட்டைக் கை வைத்து துப்பட்டாவுடன்

சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது –ஷோபா–

ஜஸ் கிரீம்

8 - 10 பேருக்கு

தேவையான பொருட்கள்:

பால் மா - 120 கிராம்
சீனி - 220 கிராம்
தண்ணீர் - 1 லீற்றர்
மாஜரீன் - 100 கிராம்
கிரமடால் - 3.5 கிறாம் (2 சிட்டிகை)
லிக்குவிட் குளுக்கோஸ் - 6.5 கிராம் (1 தே.க.)
கலறிங் - அளவிற்கு

செய்முறை:

பால் மாவுடன் தண்ணீர் சேர்த்துக் கரைத்துக் கொள்க.

சீனி, கிரமடால் என்பவற்றைக் கலந்து வைத்துக் கொள்க.

பாலைப் பாத்திரத்திலிட்டு கிரமடால் கலவை, மாஜரீன் என்பவற்றையிட்டு அடுப்பில் வைத்து 80 - 90°C வெப்பநிலையை அடையும்வரை வெப்பமாக்கி இறக்கி ஆறவைத்து, 60°C வெப்பநிலையை அடையும்போது லிக்குவிட் குளுக்கோஸ், கலரிங் சேர்த்துக் கலக்கிக் கொள்க.

கலவை ஆறியதும் பீற்றரால் நன்றாக அடித்துக் கொள்க.

ஜஸ்கிரீம் உறைய வைக்கும் அச்சுத தயார் செய்தல்.

1 லீற்றர் தண்ணீரில் உப்பைப் பொதுமான அளவு இட்டு உப்பு கரையாத நிலையடையும்போது உப்பிடுவதை நிறுத்தி, இக்கலவையைப் பெரிய பாத்திரமொன்றில் ஊற்றி, ஜஸ்கிரீம் ஊற்றி வைக்கப்போகும் கிண்ணத்தினுள் தண்ணீர் விட்டு, பெரிய கிண்ணத்தின் நடுவே வைத்து அதி குளிரூட்டியில் ஐஸ்கட்டியாகும்வரை உறைய வைத்து எடுத்து, நடுவே வைத்த கிண்ணத்தையெடுத்து நீரை ஊற்றிய பின் அக்கிண்ணத்தினுள் ஐஸ்கிரீம் கலவையை விட்டு அசசினுள் அக்கிண்ணத்தை அமிழ்த்தி வைத்த பின்பே மீண்டும் அதி குளிரூட்டியில் பாத்திரத் தொகுதியை மூடி வைத்து 2 மணி நேரத்திற்கு ஒரு தடவையெடுத்து பீற்றரால் அடித்து வைத்து இறுகியதும் எடுத்துப் பரிமாறலாம்.

மேடில் ஸ்பெஷல்

மனச்சோர்வு

மனச்சோர்வு என்ற உணர்ச்சியை நாம் நமது வாழ்வில் ஏதாவது ஒரு சமயத்தில் உணர்ந்து இருப்போம். மனச்சோர்வு வரும்போது வருத்தம், சந்தோஷமின்மை, தோல்வி மனப்பான்மை அனைத்து உணர்ச்சிகளும் சேர்ந்து வரும்.

இந்த மனச்சோர்வு நமக்கு கஷ்டங்கள் வரும்போது (உதாரணத்திற்கு) ஒரு நெருங்கிய உறவினரோ அல்லது நண்பரோ இறக்கும் போது வரும்.

மனச்சோர்வு கஷ்டங்கள் வந்த பின் வரலாம். அல்லது உடலிலுள்ள மாற்றங்களாலும் வரலாம். பலர் கஷ்டங்கள் (ஏதாவது தொலைந்தாலோ, பிரிவாலோ, தொல்வியாலோ) மனச்சோர்வை உணர்வார்கள். அவர்கள் அப்போது தான் மனம் சோர்ந்து உள்ளேன் என்று கூறுவார்கள். இந்த மனச்சோர்வு அந்த நேரத்தில் வருவது இயல்பான ஒன்று. இது சிறிது நாட்கள் இருக்கும். இதை மனவியல்படி மனச்சோர்வு என்று



சொல்வது கிடையாது. இது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஏற்படக்கூடிய உணர்ச்சி. வருத்தம் ஒரு பொதுவான உணர்ச்சி. ஆனால் வருத்தத்திற்கும், மனச்சோர்வுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும்.

1) சூழ்நிலையினால் மனச்சோர்வு

இந்த மனச்சோர்வு சில கஷ்டமான சமயங்களில் வரும். நாம் நெருங்கிப் பழகியவர்கள் நம்மை விட்டுப்பிரியும் போதோ, வேலை திடீர் என்று போகும்போதோ இந்த மனச்சோர்வு வரும். இம்மாற்றத்தினால் ஏற்படும் மனச்சோர்வு அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் வருத்தத்தைவிட மிகவும் வேதனை தருவது. இதனால் தூக்கமின்மை, பசியின்மை, உற்சாகமின்மை போன்ற மாற்றங்கள் ஏற்படலாம். இது எவ்வளவு நாள் இருக்கும் என்பது நபருக்கு நபர் வித்தியாசப்படுகிறது. இந்தக் கஷ்டம் எந்தக் காரணத்தினால் வந்ததோ அது நீங்கிவிட்டாலோ அல்லது கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேறு வழி தேடிக் கொண்டாலோ சரியாகி விடும். மனச்சோர்வு உள்ளவர்கள் மருத்துவரை நாடுவது அவசியம் ஆகும்.

2) உடல் மாற்றத்தினால் ஏற்படும் மனச்சோர்வு

இது கொஞ்சம் கவலைக்கிடமான, மனச்சோர்வு. இது ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் வருவது என்று சொல்லமுடியாது ஆனால் சிலசமயம் வருத்தம் தரக் கூடிய நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் ஏற்பட்டால் இது வரலாம்.

இது மூளையில் ஏற்படும் சில இரசாயன மாற்றங்களினால் வருவது. ஆனால் இது வருவதற்கான முழுமையான காரணம் தெரியவில்லை. உடல் மாற்றத்தினால் மனச்சோர்வு வாழ்க்கையில் நல்ல



நிலையில் உள்ளவர்களுக்கும், வேலையில் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கும், குடும்பத்தில் சந்தோஷமாக இருப்பவர்களுக்கும், சுமுகமாய்ப் பழகுபவர்களுக்கும் வரலாம்.

அவர்கள் மனச்சோர்வு அடைவதால் வாழ்க்கையில் சந்தோஷத்தை இழக்கிறார்கள். தூக்கமின்மையால் அவதிப்படுகிறார்கள். அதுவும் விடியற் காலை தூக்கமின்மையால் அவதிப்படுகிறார்கள். பசியின்மை, எடை குறைந்து போவது, எதிலும் ஈடுபாடில்லாமல் இருப்பது. சக்தியற்றவராயும், குற்ற உணர்வு மிக்கவராயும் இருப்பது ஆகியவையும் இதன் எதிரொலிதான். இந்த மனச்சோர்வினால் ஏற்படும் மாற்றங்களால் சிலர் வாழ்க்கை வாழ்வதில் அர்த்தமில்லை என்று தற்கொலை செய்துகொள்ளத் துணிவார்கள் (முயற்சிப்பார்கள்).

இதைவிட கவலைக்கிடமான மனச்சோர்வு மனவியல் நோயால் ஏற்படும் மனச்சோர்வு. இந்த மனச்சோர்வுவில் நிஜ உலக ஈடுபாட்டிலிருந்து அவர்கள் பிரிந்து சென்று குழப்பத்தில் வாழ்வார்கள். அவர்கள் சாப்பிடுவதையும் குடிப்பதையும் நிறுத்தி விடுவார்கள் யாரோ அவர்களிடம் பேசுவதாக சொல் வார்கள். அக்குரல்கள் இவர்கள் கெட்டவரகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று கூறியதாக சொல் வார்கள். இன்னும் சிலர் தவறான எண்ணத்தை வளர்த்துக் கொள்வார்கள். அதாவது அவர்கள் தவறான காரியங்கள் முன்பு செய்ததால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று நினைப்பார்கள்.

எவர் ஒருவர் நிஜ உலக ஈடுபாட்டிலிருந்து பிரிந்து குழப்பத்தில் வாழ்கிறாரோ அவர் மனநோய் காப்பகத்தில் உடனே சேர்க்கப்பட வேண்டியவர். ஒன்று கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டியது. பல

வகையான மனச்சோர்வு உண்டு. இந்த மனச்சோர்வு எதனால் உண்டானதென்று பிரித்துச் சொல்ல முடியாது. காரணம் ஒன்றுக்கொன்று அதிக ஒற்றுமை இருப்பதால்.

3) மன எழுச்சியும் - மனச்சோர்வு நோயும்

இதுவும் உடல் மாற்றத்தினால் ஏற்படும் மனச்சோர்வு, மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்களினால் இந்த மனத்தளர்வு ஏற்படுகிறது. இந்த மனச்சோர்வினால் சில நாட்கள் நோயாளிகள் சந்தோஷமாக இருப்பார்கள். அதிக சுறுசுறுப்பாக இருப்பார்கள். அவசர அவசரமாகப் பேசுவார்கள். நிறைய செலவு செய்வார்கள். இன்னும் நோய் முற்றிய நிலைகளில் நோயாளிகள், தங்கள் நிஜ நிலையைவிட மிக உயர்ந்த நிலையில் உள்ளதாக நினைப்பார்கள்.

மனச்சோர்வின் காரணங்கள்

காரணங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை அவை

பாரம்பரியம்

இப்போது இந்த நோய் குடும்பத்தில், பாரம்பரியத்தில் உள்ளவர்களுக்கு வழிவழியாகவருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தந்தைக்கும், தாய்க்கும் மனச்சோர்வு இருந்தால் குழந்தைகளுக்கும் வர வாய்ப்பு உள்ளது. இது இருதய கோளாறும், இரத்த கொதிப்பும் போல வழி வழியாக வரும் தன்மை கொண்டதாக கருதப்படுகிறது.

உடல்நிலை மாற்றம்

உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களினாலும் மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்களினாலும் இது ஏற்படலாம்.

மனப் போராட்டம் தரும் மாற்றங்கள்

வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள், வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள், பெண்களுக்கு வீட்டு விலக்கு நின்று போகும்போதும் குழந்தை பிறக்கும்போதும், ஆண்களுக்கு வேலையிலிருந்து ஓய்வு பெறும் போதும் இது ஏற்படும்.

தனித்தன்மை ஆளுமை

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அதில் ஒரு வகையானவர்கள் இவர்கள். இவர்களுக்கு என்று செயல்முறைகளும், வாழ்க்கைப் பாதையும் வைத்துக் கொள்வார்கள். மற்றவர்களும் அதைப் பின்பற்ற வேண்டும் என்று நினைப்பார்கள். மற்றவர்கள் பின்பற்றவில்லையென்றாலே இவர்களால் மற்றவர்களிடம் சுமுகமாகப் பழக முடியாத காரணத்தில் இந்த மனச்சோர்வு ஏற்படுகிறது. சிலர் மாற்றவர்களை சார்ந்து இருப்ப வர்கள். அவர்களிடமிருந்து ஏதோ காரணத்தினால் பிரிந்தால் இந்த மனச்சோர்வு அடைகிறார்கள். இன்னும் சிலர் தொடர்ந்து தோல்வியைத் தழுவுவதாலும், வாழ்க்கை கஷ்டமானது என்ற எண்ணம் வலுவடைந்து மனச் சோர்வு அடைகிறார்கள். நோய் தீர்க்கும் உதவிக்கரங்கள் இங்கு கிடைக்கும்.

மனச் சோர்வு அடைந்தவர்கள், அவர்கள் குடும்ப மருத்துவரை அணுகுவது முறை அல்லது மனவியல் மருத்துவரை உடனே அணுக வேண்டும்.

சில சமயங்களில் மற்ற உடல் நோய்களினால் மனச்சோர்வு வெளிப்படாமல் இருக்கலாம். அதேசமயம் உடல் நோயினாலும் மனச்சோர்வு வர வாய்ப்பு உண்டு. அதனால் உடலையும் நன்றாக மருத்துவரிடம் பரிசோதனை செய்ய வேண்டும்.

குடும்பத்தாரும், நண்பர்களும் இவர்களைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். மனச்சோர்வுடையவர்களுக்கு உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

மருத்துவச் சிகிச்சை

இதற்கான மருத்துவ சிகிச்சை நல்ல முறையில் நமது நாட்டில் கிடைக்கிறது. மருத்துவ சிகிச்சை மனச்சோர்வின் காரணத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.

இழப்பினாலோ, கஷ்டங்களினாலோ, மனச் சோர்வு ஏற்பட்டால் மருத்துவரின் அறிவுரைகளும்,

உபதேசங்களும் நல்ல பயன் அளிக்கும். அது மனச்சோர்வு உடையவர்களின் கஷ்டங்களையும், வாழ்க்கை முறைகளையும், மன உளைச்சலையும் உணர்ந்து சொல்லப்படுவதாலும், அவர்களுக்கு நல்ல உறுதுணையாக மருத்துவர்கள் இருந்து அவர்களின் கஷ்டங்களை அனுதாபத்தோடு உணர்ந்து உதவுகிறார்கள்.

உடலின் மாற்றங்களினால் ஏற்படும் மனச்சோர்வுக்கு மருத்துவ ஆலோசனையும், மருந்துகளும் தேவைப்படுகின்றன. மனச்சோர்வை போக்கக் கூடிய மருந்துகள், நோயினால் அவதிப்படுபவர்களின் மனச் சோர்வையும் போக்குகிறது. அதேசமயம் மறுபடியும் வராமல் பார்த்துக்கொள்கிறது.

இன்னும் மோசமான மனச்சோர்வு உடையவர்களுக்கு மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் செய்ய வேண்டும். இவர்களுக்கு முதலில் மருந்துகள் கொடுக்கவேண்டும் அப்படியும் இவர்கள் உணவு உண்ணாமலும், தண்ணீர் குடிக்காமலும், தற்கொலை செய்யும் எண்ணங்களுடனும் இருந்தால், இவர்களுக்கு மின்சார சிகிச்சை என்ற முறைப்படி வைத்தியம் செய்தால் நல்ல விளைவை ஏற்படுத்தும்.

இந்த மின்சாரம் பாய்ச்சும் முறைக்கு ஏனோ அனைவரும் பயப்படுகிறார்கள். இந்த சிகிச்சை முறை வலி தராது. எந்தவித சிக்கலையும் ஏற்படுத்தாது. இந்த மோசமான மனச்சோர்வு உடையவர்களை நல்ல நிலைக்கு கொண்டுவர உதவுகிறது. சில மனச் சோர்வு மோசமான மருந்துகளை விட இது எளிதான முறையும் விரைவில் நோயைக் குணப்படுத்தக்கூடியதும் ஆகும்.

அனைவரும் மனச்சோர்வை வாழ்க்கையில் ஒருமுறையேனும் அனுபவித்து இருப்பார்கள். ஆரம்ப நிலைகளில் மனச்சோர்வில் இருந்து சிலர் அவர்களே விடுபட்டு விடுவார்கள். அதிலிருந்து விடுபட இயலாதவர்கள் உடனே மனநல மருத்துவரை அணுகவேண்டும்.

ஒரு தாய் மகள் 30

"நான் என்ன செய்ய வேண்டுமென்று எதிர் பார்க்கிறீர்கள்?" என்றாள். உள்ளத்தைப் போலவே அவள் குரலும் சிதைந்து போயிற்று.

"ஒன்றும் எதிர்பார்க்கவில்லை பேஜ். ஆலிஸன்தான் இப்போது முக்கியம். அவள் பிழைத்து எழுந்து வரட்டும் முதலில். மற்ற தெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். எல்லாப் பிரச்சினைகளையும் ஒரே சமயத்தில் தீர்க்க முடியாது."

யதார்த்தக் கண்ணோட்டத்துடன்தான் அவன் பேசினான். ஆனால் பகுத்தறிந்து பொறுமையுடன் கேட்கக்கூடிய மனநிலையில் அவள் இல்லை. "அப்புறம்? அதற்குப் பிறகு? ஆலிஸன் வீட்டுக்கு வந்தவுடன் அல்லது அவளைப் புதைத்தவுடன் நீங்கள் அந்தப் பெண்ணிடம் போய் விடுவீர்கள்! இல்லையா?" என்றாள். கசப்பு ஒரு பக்கமும் பயம் ஒரு பக்கமும் அவள் உள்ளத்தை வதைத்தன.

பித்துப் பிடித்தவள் போல அவள் சித்திரவதைப்படுவது அவனுக்குத் தெரிந்தது. ஆயினும் அவளைச் சமாதானப்படுத்தவோ ஆறுதல் கூறவோ அவன் முன்வரவில்லை. முன்வர முடியவில்லை. ஏனெனில் அவனே சித்திரவதையை அனுபவித்துக்கொண்டிருந்தான்.

பேஜை விவாகரத்து செய்வதற்கு அவன் தயாராயில்லை. ஸ்டிபானியும் அவனை வற்புறுத்தவில்லை. காலம் கனியும் வரையில் காத்திருக்க அவள் சித்தமாக இருந்தாள். பிராட்தான் அவள் மீதுள்ள மோகம் காரணமாக ஏதாவது வழி கண்டாக வேண்டும் என்று துடித்தான். குற்ற உணர்வுடன் ஒரு பொய் வாழ்க்கை வாழ அவனுக்குப் பிடிக்கவில்லை.

"அதற்கப்புறம்? அதற்கப்புறம் என்ன என்றுதான் கேட்கிறேன்."

"தெரியவில்லை பேஜ். நிஜமாகத் தெரியவில்லை."

"தெரிந்ததும் சொல்லுங்கள்" என்று விருட்டென எழுந்து கொண்டாள். ஒரு நிமிடம் அவனை வெறித்துப் பார்த்துவிட்டு, வெளியேறிச் சமையலறைக்குச் சென்றாள். ஆண்டிக்காகப் பிஸ்ஸா தயாரித்து, அவனைக் கூப்பிட்டுச் சாப்பிடச் சொன்னாள்.

"ஏம்மா என்னவோ போல் இருக்கிறே?" என்றான் குழந்தை.

"ஒன்றுமில்லை. ஆலி ரொம்ப மோசமாய் இருக்கிறாள் இல்லையா? அந்தக் கவலை" சிறிது நேரம் அவன் படுக்கையில் படுத்திருந்தாள். பிறகு தன் படுக்கை அறைக்குச் சென்று பொத்தென்று விழுந்தாள். தூங்க முயன்றாள். முடியவில்லை. தலை சுழன்றுகொண்டே இருந்தது. எவ்வளவு பயங் கரங்கள்! எவ்வளவு வேதனைகள்! எவ்வளவு கேள்விகள்! ஆலிஸனைப் பற்றி, பிராடைப் பற்றி, தங்கள் இல்லற வாழ்க்கையைப் பற்றி, சாவைப் பற்றி...

கதவு திறக்கும் ஓசை கேட்டது. பிராட் உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு கிளாஸ் இருந்தது.

"எதுவும் சாப்பிடாமல் படுத்துவிட்டாய் போலிருக்கிறதே? ஏதாவது கொண்டு வந்து தரட்டுமா?" என்றான் அவன்.

"எனக்குப் பசியில்லை" என்றாள் அவள் வெறுப்புடன். "நான் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். ஆலி எப்படி இருக்கிறாள் என்று பார்க்க வேண்டும்."

"இப்போது அவளைப் பார்க்க அனுமதிக்கமாட்டார்கள்."

"பரவாயில்லை."

சென்ற வாரம்

ஸ்டிபானி ஒரு களியாட்ட விடுதியின் நடனக்காரி என்று தெரிய வருகிறது. ஆகவே ஆலிஸன் எதுவித பதற்றமும் அடையாமல் அவனின் போக்குக்கே விட்டு விட தீர்மானித்தவளாக ஆஸ்பத்திரிக்குப் புறப்படுகிறாள்

பிராடுக்குச் சட்டென நினைவு வந்தது. "ஆண்டி காலையில் ஸ்கூலுக்குப் போக வேண்டுமே? அதற்குள் நீ வந்து விடுவாயா?"

இயலாதென்று அவள் தலையசைத்தாள். "அவனை நீங்கள் தயார் பண்ணி ஸ்கூலில் கொண்டுபோய் விட்டுவிட்டு வாருங்கள். அதற்கு நான் தேவையில்லையே?" என்றாள். பார்க்கப் போனால் அது ஒன்றுக்குத்தான் நாம் இங்கே தேவைப்படுகிறோம் என்று எண்ணிக்கொண்டாள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதுதான் நமக்கு வேலை என்று ஆகிவிட்டது!

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

"சரி, நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றான் பிராட். அவன் குரலில் வருத்தம் தொனித்தது. "ஆண்டியை நான் பார்த்துக் கொள்வேன்..... ஆனால் மற்ற விஷயங்கள்... நீ இல்லாமல் எப்படி....."

"மற்ற விஷயங்களா? அப்படியொன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே?" அவனுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாத மாதிரி அவள் பேசினாள்.

"பேஜ்.... நான்.... நான்.... ஐ லவ் யூ பேஜ்" என்றான் அவன் திடீரென்று.

"அடடே! அப்படியா பிராட்?" என்றாள் அவள். அவளுடைய வேதனை எத்தனை ஆழமானது என்பது அவள் குரலில் தெரிந்தது. "என் மீது உங்களுக்குக் காதல் என்றா சொல்கிறீர்கள்? என்னை நேசிப் பதாகவா சொல்கிறீர்கள்? ஹும்! நான் ரொம்பக் காலமாக அப்படி நினைத்துத்தான் என்னை நானே ஏமாற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். ஏன், நீங்கள் கூட ஒருவேளை அப்படி நினைத்து உங்களை ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறீர்களோ என்னவோ. ஆனால் நம் இரண்டு பேருக்கும் இப்போது உண்மை நிலைமை புரிந்துவிட்டது. இதுவும் நல்லதுக்குத்தான்."

அப்படிச் சொன்னாளே தவிர, உண்மை நிலை என்னவென்று புரிந்ததில் அவள் உள்ளத்தில் காயம்தான் ஏற்பட்டிருந்தது. மனத்தில் ரணம்தான் உண்டாகியிருந்தது.

"ஸாரி பேஜ்" என்றான் பிராட் மெதுவாக. ஆனால் அவளை நெருங்கி வர வில்லை. தனக்கும் அவளுக்குமிடையே மலையளவு பிளவு ஏற்பட்டுவிட்டதை அவன் உணர்ந்தான்.

"ஸாரி.... ஸாரிதான்.... எனக்கும் வருத்தம்தான்" என்று சொல்லிவிட்டு எழுந்து கொண்டவள், அவனை ஒருமுறை நேருக்கு நேராகப் பார்த்தாள். மேற்கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் குளியலறைக்குச் சென்றாள். கதவைச் சாத்திக்கொண்டு தண்ணீர்த் தொட்டியில் அமர்ந்து, குழாயைத் திருகினாள். தண்ணீர் கொட்டியது. முகத்தில் கண்ணீரும் கொட்டியது. நேற்று அழுதது மகளுக்காக. இன்று கணவனுக்காக. இரண்டு பேருக்காகவும் பேஜ் அழுதாள்.

ஆஸ்பத்திரியில், வெயிட்டிங் அறையில் இருந்த நாற்காலியில் சுருண்டு மடங்கி உட்கார்ந்தபடியே ஞாயிற்றுக்கிழமை இரவையும் கழித்தாள் பேஜ். அசௌகரியமான நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறோம் என்பது அவளுக்கு உறைக்கவேயில்லை. ஆலிஸனைப் பற்றிய கவலை வாட்டியெடுத்தது. துளியும் கண் மூடவில்லை. ஆஸ்பத்திரியின் சப்தங்கள், நெடிகள், எந்த நிமிடம் ஆலிஸன் கைநழுவிப் போய் விடுவாளோ என்ற திகில் - எல்லாமாகச் சேர்ந்து அவளைத் தூங்கவொட்டாமல் பண்ணின.

காலை ஆறு மணி அடித்தது. அவள் துன்பத்துக்குச் சற்று விடிவு கிடைத்தது. ஆலிஸனை வந்து பார்க்கலாம் என்று தெரிவித்தார்கள்.

ஓர் அழகிய இளம் நர்ஸ் அவளை அழைத்துப் போனாள். எண்ணற்ற கூடங்களையும் ஹால்களையும் கடந்து செல்ல வேண்டியிருந்தது. வழி பூரா ஆலிஸனைப் பற்றியே சளசளவென்று பேசிக்கொண்டு வந்தாள் அந்த நர்ஸ். 'என்ன அழகான பெண்! எவ்வளவு அருமையான முடி!' என்றெல்லாம் அவள் சொன்னது பேஜின் காதில் விழுந்ததே தவிர, மனம் தவித்துத் தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தது.

உடம்பு மொத்தமும் கட்டுப்போட்டுப் படுக்கையில் கிடக்கும் ஆலிஸனை அழகான பெண் என்று எப்படித்தான் இவர்களால் சொல்ல முடிகிறதோ! ஆலிஸனின் கண்களுக்குக் கூடக் கட்டுப்போட்டு முடியிருப்பார்களே!

வழியெங்கும் லிப்டுகள். தானே திறந்து மூடிக்கொள்ளும் கதவுகள். அவற்றின் வழியே செல்லும் போது பேஜ் மனசைத் திடப்படுத்திக் கொண்டாள். கன்னாபின்னாவென்று கற்பனை செய்துகொண்டிருக்காமல் பிரத்தியட்ச நிலைமையைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

(தாய் தொடர்வாள்.....)

20 இன்ச் இடை

இளம் சமுதாயத்தின் நித்திரையைக் கெடுக்கும் இன்னுமொரு மின்னல் அமிஷா பட்டேல் ஆகும். இவருக்கு அழகு அவரது இடைதான். அப்படி என்ன சமாச்சாரம் அதில் உள்ளது என்றால் அவரின் இடை ஆக 20 இன்ச் ஆகும். ஒரு படப்பிடிப்பின் போது இவர் படப்பிடிப்புக் குழுவிக்கே தனது செலவில் சீனா உணவு வழங்கினாராம். இதைப் பார்த்த படப்பிடிப்புக் குழு நீங்கள் உங்கள் இடை அழகை தொடர்ந்தும் பேண இவற்றை தவிர்த்தல் நன்று என்று அறிவுரை வழங்கினார்களாம். அதற்கு அவர் சிரித்துக் கொண்டு இவ்வுணவு என் வீட்டிலேயே தயாரிக்கப்பட்டது. இதில் பொரித்த கிழங்கு, அவித்த அரிசி மற்றும் எண்ணெய் என்பன இல்லை. எனவே இவ்வுணவு தான் என்னை இவ்வாறு வைத்திருக்கிறது என்றாராம் நெத்தியடியாக.

அமிஷா

காதலா.... உறவா....

பிரியங்கா

ஜோன் ஆபிரகாம்

பீபாஷா பாசுவின் காதலரான ஜோன் ஆபிரகாம்மை பிரியங்கா சோப்ரா அள்ளிக் கொண்டு போனது அனைவருக்கும் தெரிந்ததே! தெரியாத இன்னுமொரு விடயம் என்னவென்றால் பார்சட் எனும் இந்திப் படமொன்றில் பிரியங்காவும், பீபாஷாவும் அக்கா - தங்கையான நடித்துவருகிறார்கள். இருவருக்கும் இடையில் குடும்மிச் சண்டை வரும் என்று தான் இயக்குநர் நினைத்தாராம். ஆனால் அப்படி ஆகவேயில்லை இருவரும் நல்ல நண்பிகளைப் போல் 'ஹாய்' சொல்லிக் கொள்கிறார்களாம்.

பாசு பெய்ல்

சமீரா

வட இந்திய சினிமாத்துறையை இன்று பல கவரச்சிப்புயல்கள் கலக்கி வரும் நிலையில் இன்று நமக்கு தெரிந்த சச்சின் படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமாகிய பீபாஷா பாசு வட இந்திய சினிமாத்துறையில் பல எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். அண்மையில் கூட அவருக்கு வரவேண்டிய பட வாய்ப்பு ஒன்றினை சமீரா ரெட்டி தட்டிப் பறித்துக் கொண்டு சென்றது தான் பீபாஷாவால் தாங்க முடியாத வேதனைக்குள்ளாக்கியுள்ளது. இதைப்பற்றி இயக்குநரிடம் காரணம் கேட்ட போது அவர் கூறினாராம் தனக்கு நல்ல நடிகைகளை விட நல்ல கவர்ச்சி நடிகையே வேண்டும் என்றாராம். மனம் உடைந்து போன பீபாஷா சமீராவிடமே எப்படி இந்தப் படத்திற்கான வாய்ப்பு கிடைத்தது என்று கேட்டுவிட்டாராம். அதற்கு சமீரா கூறியது. என்னை இயக்குநர் அணுகிய போது நான் அவரிடம் உடனே நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை நான் இயக்குநரின் கடந்த கால படங்களின் போக்கை பார்த்தேன் மற்றும் அவர் என்ன விதமான நடிப்பை எதிர்பார்க்கிறார் என்பதையெல்லாம் தெரிந்து கொண்ட பின்பே நடிக்க சம்மதம் தெரிவித்தேன் என்றாராம். இயக்குநர் கவர்ச்சி நடிகை தேவை என்கிறார். சமீராவோ தான் இயக்குநரின் கடந்த கால படங்களின் போக்கை பார்த்தேன் என்கிறார் என்று பலவாறாக எண்ணி குழம்பிப் போய்யிருக்கிறாராம் பீபாஷா பாசு.

ಮಹಿಳೆಯರ ಮೇಲೆ ಹೆಚ್ಚಿದ ಗೃಹಬಂಧನ ಮತ್ತು ಅತ್ಯಾಚಾರ

மூட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

சமாதான செயற்பாடுகளும் போராட்ட முனைப்புகளும்

சிறையிலிருந்து தப்பிக் கிழக்கு மாகாணக் காடுகளுக் கூடாகக் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் எதிரி களிடம் சிக்காமல் தப்பிச் சென்றுகொண்டிருந்தபோதே புளொட் உறுப்பினர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க உறுப்பினர்களுக் குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுவிட்டன. இதனால்தான் மழையையும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பாம்பு, பூச்சிகள் மற்றும் பயங்கர விஷ ஜந்துகளுக்கு மத்தியில் ஒன்றித்துப் பயணித்த இரு அமைப்புகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் தம்பலகாமத்தில் இரு வேறு பாதைகளில் பிரிந்து போனார்கள்.

இன ஒடுக்குமுறைக்கெதிராக ஆயுத மேந்திப் போராடப் புறப்பட்ட தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியம் இருக்கவில்லை. இயக்கங்களுக்கிடை யேயும் இயக்கங்களுக் குள்ளும் முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்கமுடியாதது. ஆனால் பொதுவேலைத் திட்டமொன்றின் அடிப்படையில் இயக்கங்கள் ஐக்கியப்பட்டிருந்தால் இவற்றின் சக்தி அளப்பரியதாக இருந்திருக்கும். அதுவும் அண்டை நாடான இந்தியாவும் இலங்கை இனப்பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு வேண்டுமென்று வற்புறுத்திச் செயற்பட்டபோது இயக்கங்கள் தமக்கிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்பியிருக்கலாம். தவறுகள், இயக்கங்களையே தடம்புரள வைத்துவிட்டன.

இதற்கிடையில் மட்டக்களப்புச் சிறையுடைப்பின் பின்னர், தப்பிய அரசியல் கைதிகள் யாவரும் தமிழகம் சென்றடைந்துவிட்டனர். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சென்ற கைதிகள் கும்பகோணத்தில் ஒரு வீட்டில் குடியமர்ந்தனர். இ.வீரமணியின் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து சென்ற குழுவினர் இவர்களுக்கு உதவி புரிந்தனர். திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து சென்ற ஸ்டாலின் என்பவர் கும்பகோணத்தில் தமிழ் இளைஞர்கள் தங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். பார்த்தசாரதியூடாக இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காண இந்தியா முயற்சியெடுத்துக் கொண்டிருந்த வேளையிலேயே தமிழ் இளைஞர்கள் தமிழகம் சென்றிருந்ததால், பல முக்கிய தலைவர்கள் இவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன், எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம் ஆகியோர் தமிழ் இளைஞர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். எம்.ஜி.ஆர்., டக்ளஸ் தேவானந்தாவை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். உத்தேச சர்வகட்சி மாநாட்டின் சாதக, பாதகங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

இலங்கையில் அமுலிலிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பழிவாங்கப் படுவதையும் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் அரசாங்கம் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது பற்றியும் டக்ளஸ் தேவானந்தா எம்.ஜி.ஆருக்கு எடுத்து விளக்கினார். எனவே இலங்கை அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்து இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை முன்னெடுப்பது குறித்த தனது தயக்கத்தையும் எடுத்துக் கூறினார். இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய அரசாங்கமோ அல்லது தமிழக மாநில அரசோ எடுக்கும் முயற்சிகளுக்குத் தாம் குறுக்கே நிற்கப் போவதில்லையெனத் தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, நியாயமான தீர்வு எட்டப்படாவிட்டால் தமது இயக்கத்தின் போராட்ட நடவடிக்கைகள் தொடருமென்றும் வலியுறுத்தினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கமும் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசினார். எம்.ஜி.ஆரிடம் தெரிவித்த அதே கருத்துக்களையே அமிர்தலிங்கத்திடமும் அவர் கூறினார்.

சர்வகட்சி மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றினை ஜெயவர்த்தனா 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டினார். அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளையும் இக் கூட்டத்திற்கு ஜனாதிபதி ஜெயவர்தனா அழைத்திருந்தார். 1983ஆம் ஆண்டு ஜூலை இனசங்காரத்தைப் பயன்படுத்தித் தடைசெய்யப்பட்டிருந்த ஜே.வி.பி.யும் நவசமசமாஜக்

இன ஒடுக்குமுறைக்கெதிராக ஆயுத மேந்திப் போராடப் புறப்பட்ட தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியம் இருக்கவில்லை. இயக்கங்களுக்கிடை யேயும் இயக்கங்களுக் குள்ளும் முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்கமுடியாதது. ஆனால் பொதுவேலைத் திட்டமொன்றின் அடிப்படையில் இயக்கங்கள் ஐக்கியப்பட்டிருந்தால் இவற்றின் சக்தி அளப்பரியதாக இருந்திருக்கும்.

(அரசியல் தொடர்)

கட்சியும் இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. இனக் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்க முயன்றார்களென்று இக் கட்சிகள் மீது போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. சுமார் ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்ற இக் கூட்டத்தில், சர்வகட்சி மாநாட்டை 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டு நிகழ்ச்சி நிரல்கள் பற்றியும் ஆராயப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியை பத்தாம் திகதிய மாநாட்டுக்கு அழைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியை மாநாட்டுக்கு அழைப்பதென்ற முடிவை அப்போது இலங்கையிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிலொருவரான நீலன் திருச்செல்வத்துக்கு அரசு அறிவித்தது. இது குறித்த சம்பிரதாயபூர்வ அழைப்பு இந்திய உயர் ஸ்தானிகரிடம் டிசம்பர் மாதம் 28ஆம் திகதி கையளிக்கப்பட்டது. அன்று மாலையே சென்னைக்கு விமானம் மூலம் பறந்து சென்ற சட்வால், அமிர்தலிங்கத்தைச் சந்தித்து சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பைக் கையளித்தார். அமிர்தலிங்கத்துடனும் சிவ சிதம்பரத்துடனும் சிறிது நேரம் அரசியல் விவகாரங்கள் குறித்து அளவளாவிய பின்னர் சட்வால், புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சர்வகட்சி மாநாட்டுக்கான அழைப்பிதழோடு இரு

தஸ்தாவேஜுகளையும் சட்வால் அமிர்டம் கையளித்திருந்தார். பின்னிணைப்பு - ஏ, பின்னிணைப்பு - பி என்று இவை தலைப்பிடப் பட்டிருந்தன. 'பின்னிணைப்பு - ஏ' யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஐந்து தஸ்தாவேஜுகள் இருந்தன. 'பின்னிணைப்பு - பி' யில் 14 அம்சச் சமாதானத் திட்டங்கள் குறிக்கப்பட்டிருந்தன. இத்திட்டங்கள் பற்றி ஜனவரி பத்தாம் திகதிய சர்வகட்சி மாநாட்டில் ஆராயப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பதினான்கு அம்சச் சமாதானத் திட்டங்களும் வருமாறு :-

1. தனிநாட்டுக் கோரிக்கை கைவிடப்பட வேண்டும்.

2. ஒரு மாகாணத்துக்குள் உள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைகளை இணைக்கலாம். ஆனால், அதற்குச் சம்பந்தப்பட்ட

இணைந்து எழுதுவது
த. சபாரத்தினம்
+
அம்பி மகன்

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் விருப்பம் தெரிவிப்பதோடு சம்பந்தப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் சர்வஜன வாக்கெடுப்பொன்றில் அந்த இணைப்புக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

3. பிராந்தியச் சபைகள் உருவாக்கப்படவிருக்கும் பிரதேசங்களில் அச்சபையைப் பொறுத்தவரை பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் கட்சியின் தலைவரை முதலமைச்சராக ஜனாதிபதி நியமிக்க வேண்டும். முதலமைச்சரால் நியமிக்கப்படும் செயற்கமிட்டியோடு சேர்ந்து அவர் இயங்க வேண்டும்.

4. இப்பிராந்திய சபைகளுக்கு மாற்றப்படாத சகல விடயங்களையும் பொறுத்தவரை ஜனாதிபதியும் பாராளுமன்றமும் முற்றுமுழுதாகப் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் கொண்டிருக்கும். பொதுவாக குடியரசின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம், பந்தோபஸ்து, முன்னேற்றம், அபிவிருத்தி ஆகிய விடயங்களைப் பொறுத்தவரை முழுமையான அதிகாரங்களும் ஜனாதிபதியிடமும் பாராளுமன்றத்துடன் மட்டுமே இருக்கும்.

5. பிராந்திய சபைகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரம் அல்லது கட்டணம் அறவிடும் அதிகாரம் இருக்கும். மத்திய அரசாங் கத்திடமிருந்து கடன்கள், மானியங்கள், நிதி ஒதுக்கீடுகள் ஆகிய வற்றைப் பெறமுடியும்.

6. திருமலை துறைமுகத்தின் நிருவாகம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கும்.

7. ஒவ்வொரு பிராந்தியத்திலும் மேல் நீதிமன்றம் ஒன்று செயற்படும். இதேவேளை உச்ச நீதிமன்றம் புறம்பான அரசியலமைப்பு அதிகாரங்களைக் கொண்டு செயற்படும்.

8. பிராந்திய சபைகளுக்கு ஒதுக்கப்படும் விபரங்கள் பற்றிய பட்டியல் விரிவான முறையில் தயாரிக்கப்படும். பிராந்திய சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களைப் பொறுத்தவரையில் நிர்வாக அதிகாரங்களைச் செயற்படுத்த வழிவகை செய்யப்படும்.

9. பிராந்தியமொன்றில் சேவையாற்றுபவர்கள் அல்லது சேவையாற்றப் பிரேரிக்கப்படுபவர்கள் அரசாங்க அதிகாரிகளின் பிராந்திய சேவைகளுக்குள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

10. ஆட்சேர்ப்பு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காகப் பொதுச் சபை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும்.

11. இலங்கையின் அரசாங்க சேவையையும் ஆயுதப் படைகளையும் பொருத்தவரை இனவிகிதாசாரம் பேணப்படும். பிராந்தியச் சபை எல்லைகளுக்குள் உள்ளூர் பந்தோபஸ்துக்குப் பொறுப்பான பொலிஸ்சேவை அந்தப் பிராந்தியத்தின் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கும்.

12. காணிக் குடியேற்றம் தொடர்பாக தேசியத் திட்டமொன்று உருவாக்கப்படும்.

13. அரசகரும மொழி (சிங்களம்) தேசிய மொழிகள் (சிங்களமும் தமிழும்) ஆகியவை தொடர்பான அரசியல் அமைப்பு ஏற்பாடுகளும் ஏனைய சட்டங்களும் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். தேசியக் கொடி, தேசியகீதம் ஆகியவை சம்பந்தமான சட்டங்களைப் பொறுத்தவரையும் இந்த முறையே கடைப்பிடிக்கப்படும்.

14. அரசியல் இலக்குகளை அடைவதற்காக வன்செயல் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கியப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(தொடர்ந்து வடியும்....)

பாலசிங்கத்தின் உயிர்காக்க உதவி.....
மேலும் பக்கத் தொடர்ச்சி.....

கேள்வி : புலிகள் இயக்கம் உங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாக நீங்கள் கூறுகின்றீர்கள். நீங்கள் புலிகள் இயக்கத்தின் பெயரைக் கூறி, நிதி சேகரித்து பிழைத்து வருவதாகவும், இதனால் தான் புலிகள் இயக்கம் உங்களுக்குத் தண்டனை வழங்கியது என்றும் லண்டனில் உள்ள தமிழ் மக்கள் கூறுகின்றனர். இது குறித்து நீங்கள் கூறுவதென்ன?

பதில் : நான் புலிகள் இயக்கத்துக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்ற ஒரு நபரல்லர் என்பதை உங்களுக்கு நான் நேர்மையான முறையில் கூறுகின்றேன். பாலசிங்கம் உட்பட லண்டனில் உள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள், ஒரு சில ஊடகங்களைப் பயன்படுத்தி என்மீது சேறு பூசி வருகின்றனர். எங்களது கோயிலை புலிகள் பலவந்தமாகச் சுவீகரித்துக் கொள் வதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் நாங்கள் நீதிமன்றம் சென்று வழக்குத் தாக்கல் செய்து, அதன் மூலம் வெற்றியடைந்தோம். நான் திருடன் என்றால் நீதிமன்றத்துக்கு செல்வேனா? புலிகள் என்னைப் பற்றி பிரித்தானிய நிதி உதவி ஆணைக்குழுவிடமும், வருமான வரித் திணைக் களத்திடமும், ஸ்கொட்லன்ட்யார்ட் புலனாய்வுத் துறையினரிடமும் கூட முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். எனினும், இவர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் நான் நிரபராதி என நிரூபிக்கப்பட்டுள்ளேன்.

கேள்வி : இலங்கையில் உள்ள வாசகர்கள் அறிந்து கொள்ளும் முகமாக உங்களுடைய லண்டன் ஈழப்பதீஸ்வரர் ஆலயம் தொடர்பாகப் புலிகளுடன் ஏற்பட்ட மோதல் குறித்து விளக்கமாகக் கூறுவீர்களா?

பதில் : நாங்கள் செயற்படுத்தி வரும் கோயிலை புலிகள் இயக்கத்தின் உதிரிகளை வைத்துப் பலவந்தமாக அதனை உரிமையாக்கிக் கொள்வதற்கான முயற்சிகளை புலிகள் மேற்கொண்டனர். 2002 மே மாதம் 10ஆம் திகதி அவர்களில் ஒரு குழுவினர், நாங்கள் நடத்திக்கொண்டிருந்த ஒரு கூட் டத்தின் போது பலவந்தமாகவே இடையில் புகுந்தனர். இதன் போது பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். எங்களது மோத லுக்கு முக்கிய காரணமாக இச் சம்பவம் அமைந்துவிட்டது.

கேள்வி : உங்களை வன்னிக்கு வரும்படி கூறியது யார்?

பதில் : லண்டனில் உள்ள புலிகள் இயக்க உறுப்பினர் களால் எங்களுக்குப் பிரச்சினைகள் இருந்துவந்ததால், அது தொடர்பில் பேசுவதற்கு நான் கடந்த வருடம் ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தேன். இப் பயணங்களின் போது புலிகளின் தலைவர்களில் ஒருவரான திலகரைக் கூட நான் சந்தித்தேன். எனினும், புலிகள் இயக்கத் தின் சர்வதேச நிதி விவகாரங்களை மேற்கொண்டு வருகின்ற கஸ்ட்ரோவைச் சந்திக்க வேண்டிய தேவையே எனக்கு இருந்தது. அதே நேரம் தமிழ்ச்செல்வனை சந்திக்கும் தேவையும் இருந்தது.

கேள்வி : நீங்கள் வன்னிக்குச் சென்றதன் பின்னர் நடந்தது என்ன?

பதில் : அது ஒரு நீண்ட கதை. கஸ்ட்ரோவைச் சந்திக்கும் நோக்கில் நாங்கள் இந்த வருடம் ஜனவரி மாதம் 3ஆம் திகதி வீன்னிக்குச் சென்றோம். எனினும், கஸ்ட்ரோவுக்கு அடுத்தபடியாக உள்ள நதியவன் என்பவரே எங்களைச் சந்தித்தார். கஸ்ட்ரோ, சுனாமி சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் அவரால் எங்களைச் சந்திக்க இயலாது எனக் கூறிய நதியவன், அன்றைய தினம் எங்களை அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார். எனினும், நாங்கள் அன்றைய தினம் அங்கு தங்காமல், யாழ்ப்பாணத்துக்குச் சென்று தங்கி, மீண்டும் மறுநாள் வந்தோம்.

கேள்வி : நீங்கள் வன்னிக்கா சென்றீர்கள்?

பதில் : நாங்கள் கிளிநொச்சிக்கு கஸ்ட்ரோவைச் சந்திக்கச் சென்றோம். அவர் தர்மபுரத்தில் இருந்தார். அன்றைய தினமும் கஸ்ட்ரோவை எங்களால் சந்திக்க முடியாது எனக் கூறி, அங்கேயே தங்கும்படி கூறினார்கள். என்னுடன் எனது சகோதரர் டாக்டர் நரேந்திரனும் எனது நண்பரான விவேகானந்தனும் வந்திருந்தனர். டாக்டர் நரேந்திரன் 6ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குச் செல்ல வேண்டி இருந்ததால் நாங்கள் அனைவரும் 4ஆம் திகதி மீண்டும் கொழும்புக்குத் திரும்பி விட்டோம். எனது சகோதரரை வழியனுப்புவதற்காக நான் விமான நிலையத்துக்குச் சென்றிருந்த சமயம், கஸ்ட்ரோ மற்றும் தமிழ்ச்செல்வனை சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. எனவே, நாங்கள் மீண்டும் 8ஆம் திகதி கிளிநொச்சியை நோக்கிப் பயணமானோம். அன்றைய தினம் எங்களை அவர்கள் ஒரு முகாமில் நிறுத்தி வைத்தனர். 9ஆம் திகதி எங்களைச் சந்திப்பதற்காக நதியவன் வந்தார். இதன்போது, சட்டரீதியிலான விளக்கமளித்தல் தொடர்பாகவும் பாலசிங்கத்துடன் இருந்துவரும் எங்களது பிரச்சினைகள் தொடர்பாகவும் நான் அவரிடம் கூறினேன். நான் இவ்வாறு கூறியதும், பிரித்தானிய பயங்கரவாதக் கட்டளைச் சட்டத்தை அவர்கள் ஒரு பொருட்டாக எடுப்பதில்லை என்றும், பிரித்தானியாவில் உள்ள அனைத்து தமிழ் அமைப்பு களையும் புலிகள் இயக்கத்தின் கீழ் கொண்டு வர உள்ளதாகவும் அவர் கூறினார்.

பத்தாம் திகதி அவர்கள் எங்களை வேறொரு முகாமுக்குக் கொண்டுசென்றனர். கஸ்ட்ரோ இருந்த தர்மபுரம் பகுதிக்கு அருகில் உள்ள ஓரிடத்துக்கு எங்களை அழைத்துச் செல்ல வேண்டும் எனக் கூறியே அவர்கள் எங்களை இவ்வாறு கூட்டிச் சென்றனர். நானும் எனது நண்பர் விவேகானந்தனும் 12ஆம் திகதி மீண்டும் லண்டன் செல்ல வேண்டி இருந்ததால் ஒருவித பதற்ற நிலையில் இருந்தோம்.

11ஆம் திகதி நாங்கள் முல்லைத்தீவு பகுதியில் சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளைப் பார்ப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டோம். எங்களுடன் இன்னும் சிலரும் இருந்தனர். இந்தப் பயணத்தின் பின்னர் மாலை சுமார் 4.00 மணியளவில் கறுப்புநிறக் கண்ணாடிகளுடன், இலக்கத் தகடு இல்லாத ஒரு வேன் வந்தது. கஸ்ட்ரோவைச் சந்திக்கச் செல்வதற்காக அந்த வேனில் ஏறும்படி எங்களிடம் கூறப்பட்டது. கஸ்ட்ரோ இருந்த தர்மபுரம் பகுதியில் தான் நாங்களும் இருந்தோம் என்ற போதிலும் நாங்கள் சென்ற வாகனம் முல்லைத்தீவை நோக்கி சுமார் 40 மைல்கள் வரை பயணித்தது. இதனால் நாங்கள் கலவரமடைந்தோம்.

கேள்வி : அந்த வாகனத்தில் வந்தவர்கள் யார்?

பதில் : சாரதியும், புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரும்தான் அதில் வந்தனர்.

கேள்வி : அவர்களிடம் துப்பாக்கிகள் இருந்தனவா?

பதில் : அவர்களிடம் துப்பாக்கிகள் இருக்கவில்லை. எனினும் வாகனத்தின் கண்ணாடிகள் கறுப்பு நிறத்தைக் கொண்டிருந்ததாலும், இலக்கத் தகடு இல்லாததாலும் நாங்கள் பயந்துபோய் இருந்தோம். இந்த வாகனம் தென்னந் தோட்டமொன்றின் மத்தியில் இருந்த வீடொன்றின் முன்பாக நிறுத்தப்பட்டது. அத்தோட்டத்தைச் சுற்றிலுமாக உயர்ந்த முட் கம்பி வேலி இடப்பட்டிருந்தது. அந்த வீடு உடைந்து, சிதைந்த நிலையில் காணப்பட்டதுடன், இரு அறைகளைக் கொண்டிருந்தது. அதில் ஓர் அறையில் நானும் மற்ற அறையில் எனது நண்பர் விவேகானந்தாவும் இருந்தோம். அந்த அறையில் நான் மல்லாந்து படுத்துக்கொண்டிருக்கும் போது கூரையில் காணப்பட்ட ஓட்டைகளால் வானம் தெரிந்தது. அந்த வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்ற அவர்கள், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்படியும், எங்களைப்பற்றி அவர்கள் விசாரணைகளை நடத்தி வருவதாகவும் எங்களிடம் கூறினார்கள். அன்றைய தினம் இரவு ஒருவர் வந்து எங்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்.

கேள்வி : அந்த நபரின் பெயர் என்ன?

பதில் : அவரது பெயர் தமிழ்குமரன்.

கேள்வி : அவரின் பதவி என்ன?

பதில் : அவர் சிரேஷ்ட புலனாய்வுத் துறை அதிகாரி. எங்களுக்குக் காவலாக நால்வர் அங்கே நிறுத்தப்பட் டிருந்தனர். எங்களது அனைத்து நடவடிக்கைகளையும் அவர்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டி ருந்தனர். ஐந்து தினங்களாக எங்களை விசாரணைக்கு உட்படுத்தினர்.

கேள்வி : உங்களை விசாரணைக்கு உட்படுத்தியவரின் பெயர் உங்களுக்கு ஞாபகமா?

பதில் : அவரது பெயர் நீலவன். அதன் பின்னர் இன்னொருவர் வந்து விசாரணை நடத்தினார். அவரது பெயர் கண்ணன். இவர் நடுநிலையான கருத்துக்களைக் கொண் டவர். கஸ்ட்ரோ குழுவினர், புலனாய்வுத் துறையினருக்கு விசாரணைகளை நடாத்துமாறு ஒப்படைத்துள்ளதால் மேற்படி விசாரணை அறிக்கையைப் பிரபாகரனுக்கு அனுப்ப வேண்டும் என கண்ணன் கூறினார்.

நாங்கள் வன்னியில் இருக்கும் போது, பாலசிங்கமும் வன்னிக்கு வந்திருந்தார். சுனாமி உதவிகள் தொடர்பாக நோர்வே அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற் காகவே அவர் வன்னிக்கு வந்திருந்தார். பாலசிங்கத்துக்கு நன்றியுணர்வு சிறிதளவேனும் இருந்திருக்குமானால் அவர் என்னை வன்னியில் இருந்து மீட்டிருக்க வேண்டும்.

வன்னி அனுபவம் ஜெயதேவன் பேட்டி

விசாரணைகள் முடிந்து பல நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப் படவில்லை. இந்த நிலையில் எனது உடல் ஆரோக்கியமும் பாதிப்படைய ஆரம்பித்துவிட்டது. ஒரு சமயம் என்னை அவர்கள் புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் அவர்களின் மருத்துவ நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

எங்களை விடுவிக்கும்படி கோரி தமிழ்மொழியில் பிரபாகரனுக்கு இரு கடிதங்களை நாங்கள் அனுப்பிய போதும் அவற்றுக்கு எவ்விதமான பதில்களும் கிடைக்கவில்லை.

பெப்ரவரி 16ஆம் திகதி சுகாதார அதிகாரி ஒருவருடன் வருகை தந்த நீலவன், எங்களை விடுவிப்பதற்கு பிரபாகரன் அனுமதி வழங்கியுள்ளதாகவும், இன்னும் இரு தினங்களில் நாங்கள் விடுவிக்கப்படுவோம் என்றும் எங்களிடம் கூறினார்.

கேள்வி : பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில் : வன்னியில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்களைப் பார்க்கும்போதும், அங்குள்ள வர்களுடன் பேசிப் பார்க்கும் போதும் பிரபாகரன் சுனாமியி னால் பாதிக்கப்படாமல் உயிர் பிழைத்துள்ளார் என்றே தெரிய வருகின்றது. எனினும் அவர் இருக்கும் இடத்தை விட்டு வெளியில் வருவதில்லை.

18ஆம் திகதி இருவர் வந்து விவேகானந்தனை மாத்திரம் அழைத்துச் சென்றனர். லண்டனில் உள்ள எங்களது கோயிலை புலிகள் இயக்கத்திடம் ஒப்படைக்கும் வரை என்னைத் தடுத்து வைப்பதாக அவர்கள் என்னிடம் கூறி னார்கள்.

19ஆம் திகதி இரவு இருவர் வந்து மேற்படி கோவிலை, புலிகள் இயக்கத்துக்கு நெருக்கமானவரான சிவரத்தினம் என்பவரிடம் ஒப்படைத்து விட்டதாகக் கூறி என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள்.

மார்ச் மாதம் 9ஆம் திகதி பிரபாகரன் என்னை விடுப் பதற்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகக் கூறி என்னை அவர்கள் விடுதலை செய்தனர். நான் அன்றைய தினமே கொழும்புக்கு வந்து பிரித்தானிய தூதரகத்திற்குச் சென்றேன். பிரித்தானிய அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாகத்தான் என்னை அவர்கள் விடுதலை செய்தார்கள் என்பதை அதன் பின்னர்தான் நான் அறிந்து கொண்டேன்.

என்னை விடுதலை செய்து கொள்வதற்கு பெரி கார்டினர், என்ட்ரூ டிஸ்டோர், ரொபர்ட் வென்ஸ், கெரின் தோமஸ் மற்றும் டோனி மெக்நலிட் ஆகியோர் மிகுந்த உதவிகளை மேற்கொண்டுள்ளனர்.

கேள்வி : நீங்கள் வன்னியில் இருந்த சமயம் வதை முகாம்களைக் கண்டதாகக் கூறப்படுகிறது இது. உண்மையா?

பதில் : நான் வதை முகாம்களைக் காணவில்லை. எனினும் வதை முகாம்கள் இருப்பதாக அங்கிருந்தவர்களின் மூலம் அறிந்து கொண்டேன்.

கேள்வி : புலிகள் இயக்கம் பற்றி தமிழ் மக்கள் கொண்டிருக்கும் கருத்து என்ன?

பதில் : புலிகள் இயக்கம் என்பது இராணுவ மயமான தொரு இயக்கமாகும். எனவே அவர்கள் மீது அதிகமான நம்பிக்கையினை வைத்துக்கொள்ள முடியாது. தமிழ் மக்களிடையே ஜனநாயகக் கட்சிகள் உருவாக வேண்டும். இவ்விடயம் தொடர்பில் தமிழ் மக்கள் பொறுப்புடன் சிந்திக்க வேண்டும்.

அடுத்த வாரம் வரும்

எங்கிருந்து வந்ததோ அங்கேயே போனது!

'கடவுள் உண்டா? இல்லையா?'

இதைவிடப் பழமையான, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய சர்ச்சை வேறெதுவும் இருக்கவே முடியாது!

இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி இங்கே பார்ப்போம். அவரது ஞானத்தை வியந்து நாட்டின் மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் அவரை வந்து நிறையப் பேர் தரிசிப்பார்கள்! இராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்த அதே ஊரில் ஒரு பண்டிதரும் இருந்தார். பரமஹம்சரைப்பார்த்து அவருக்கு பொறாமை. பல துறைகளைப் பற்றியும் படித்துக் கரைத்துக் குடித்தவர் இந்தப் பண்டிதர். அறிவு மிக்கவர். ஆனால், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்! ஒரு நாள் இந்தப் பண்டிதர் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் வந்து, "கடவுள் என்ற ஒருவர் கிடையவே கிடையாது" என்று வாதிட ஆரம்பித்தார். தர்க்கவியலில் அந்தப் பண்டிதர் நிபுணர் என்பதால், அவர் எடுத்து வைத்த வாதங்கள், தனது வாதத்தை நியாயப்படுத்த அவர் சொன்ன கதைகள், சம்பவங்கள், மேற்கோள்கள் என்று அத்தனையையும் பார்த்து, இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்களுக்கு "கடவுள் இல்லை" என்ற கட்சி ஜெயித்துவிடுமோ என்று லேசான பயமே வந்துவிட்டது.

பண்டிதர் தனது வாதத்தை முழுமையாக எடுத்து வைக்கும்வரை புன்சிரிப்புடன் பொறுத்திருந்துவிட்டு, கடைசியில் பரமஹம்சர் சொன்னார்....

"பலே! உங்கள் வாதம்

அற்புதம்! அபாரம்! அழகாகத் திறம்படப் பேசினீர்கள். உங்கள் பேச்சிலும் ஒவ்வொரு வார்த்தையிலும் இருந்த அழகில் நான் இறைவனைத் தரிசித்துக் கொண்டிருந்தேன். இறைவனைக் காட்டிய உங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி!"

பண்டிதர் வாயடைத்துப் போனார்.

இறைவனை முதலும் முடிவும் இல்லாதவன் என்று வேதங்கள் வர்ணிக்கின்றன. முதலும் முடிவும் இல்லாதது எது? இயற்கை! அப்படி என்றால் கடவுள் என்பது இயற்கையா? இந்தக் கேள்விக்கு ஜென் மதம் ஒரு கதை வாயிலாக விடை சொன்னது.

அந்த ஊரில் பல ஆண்டுகளாக மழையே இல்லை. பயிர் விளையும் பூமி எல்லாம் வறண்டு கட்டாந்தரை மாதிரி வெடித்து விட்டது. அப்போது அந்த ஊருக்கு ஒரு ஜென் மதத் துறவி வந்தார். ஊர்க்காரர்கள் மழை இல்லாததால் தாங்கள் படும் அவதிகளைக் கண்ணீரோடு அவருக்கு விபரித்தார்கள். துயரத்தைப் போக்குவது என துறவி முடிவெடுத்தார். துறவி கேட்டுக் கொண்டபடியே அவர் கிராமத்தின் மையப் பகுதியில் அமர்ந்து தியானம் செய்ய, ஊர்க்காரர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். தியானம் செய்ய உட்கார்ந்த ஐந்தாவது நாள், அந்த ஊரில் வானத்தைக் கிழித்துக் கொண்டு மழை பெய்ய ஆரம்பித்தது. சந்தோஷத்திலும் மழையிலும் நனைந்தபடியே ஊர்மக்கள் நன்றிப்பெருக்கோடு துறவியைச் சூழ்ந்து கொண்டு, "உங்களால் இதை எப்படிச் செய்ய முடிந்தது?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். துறவி சொன்னார் -

"நான் தியானம் செய்த போது மனதிலே தோன்றிய அமைதியால் உடம்பிலே ஒரு சமன்நிலை (Harmony) ஏற்பட்டது! அதனால் என் உடம்பைச் சுற்றியிருந்த காற்று மண்டலமும் என் உடம்பில் உண்டானமாதிரியே சமன்நிலை அடைந்தது! அதாவது, வருடக்கணக்காகத் தொடர்ந்து வெயில் என்ற அசாதரணநிலை விலகியது! மழை தானாகப் பொழிந்தது!"

உள்ளத்துக்குள் உண்மையும் அமைதியும் இருந்தால், உடம்புக்கு வெளியிலும் அமைதி பரவும்! மனிதன் பொய் இல்லாதவனாக இருந்தால், பருவ மழையும் பொய்க்காது! மனிதன் பிறரை ஏமாற்றாமல் இருந்தால், இயற்கையும் ஏமாற்றாது. இதுதான் அந்த ஜென் துறவி நிரூபித்துக்காட்டிய தத்துவம்!

இது மாயமந்திரம் அல்ல... அறிவியல்பூர்வமான உண்மை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம் - இயற்கையில் நமது அறிவுக்குச் சுலபமாகப் புலப்படாத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன!

நமது வேதம் இதை எல்லாம் 'மாயா' என்கிறது!

மாயா என்ற தத்துவத்தையும் ஒரு சுவாரஸ்யமான கதையின் மூலம் நமது வேதங்கள் விளக்குகின்றன.

அவன் ஒரு விவசாயி! நோய்வாய்ப்பட்டிருந்த அவன், ஒரு நாள் திடீரென்று இறந்துவிட, அவனின் மூன்று மகன்களும் தங்களின் தந்தைக்கு ஈமக்கிரியைகள் செய்து முடித்துவிட்டு, அடுத்த நாள் அவர் எழுதி வைத்திருந்த உயிலை எடுத்துப் பார்த்தனர். உயிலில் 'என்னுடைய சொத்தில் இரண்டில் ஒரு பங்கு என் முதல் மகனுக்கும் மூன்றில் ஒரு பங்கு இரண்டாவது மகனுக்கும், ஒன்பதில் ஒரு பங்கு கடைசி மகனுக்கும் சேர வேண்டியது' என்று எழுதி இருந்தது!

உயிலைப் படித்ததும் மூன்று மகன்களுமே குழம்பிப் போய் தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டார்கள். காரணம்.... தந்தையின் சொத்து என்று இருந்தது 17 பசுக்கள் மட்டுமே! தந்தையின் உயில் கணக்குப்படி 17 பசுக்களைப் பாதிப்பாதியாகவோ, மூன்றில் ஒரு பங்காகவோ, ஒன்பதில் ஒரு பகுதியாகவோ முழுப் பசுக்களாகப் பிரிக்க முடியாதே! மூன்று மகன்களும் தவித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து, துறவி ஒருவர் இவர்களின் உதவிக்கு வந்தார்! இவர்கள் தந்தை எழுதி வைத்த உயிலைக் கவனத்தோடு படித்த துறவி, பெரிய புன்னகையோடு 17 பசுக்களையும் வரிசையாக நிற்க வைத்துவிட்டு இப்படிச் சொன்னார்.

"என் ஆசிரமத்தில் ஒரு பசு இருக்கிறது. அதை உங்கள் தந்தை விட்டுச் சென்ற பதினேழு பசுக்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். இப்போது பசுக்களின் எண்ணிக்கை பதினெட்டு ஆகிவிட்டது இல்லையா? சரி, மூத்த மகனே, முதலில் நீ வா. இதோ உன்னுடைய இரண்டில் ஒரு பங்கு பசுக்கள்" என்று ஒன்பது பசுக்களை அவனுக்குக் கொடுத்தார். ஒன்பது பசுக்களோடு அவன் ஒரு ஓரமாகப் போய் நின்றான். உயிலில் எழுதியுள்ளதைப் போலவே, இரண்டாவது மகனுக்கு மூன்றில் ஒரு பங்கு, அதாவது ஆறு பசுக்களையும் கடைசி மகனுக்கு ஒன்பதில் ஒரு பங்கு என்று இரண்டு பசுக்களையும் கொடுத்தார். பிறகு துறவி சொன்னார் - "பிள்ளைகளே! உங்கள் தந்தை வைத்துவிட்டுப் போன பசுக்களை அவர் சொன்ன கணக்குப்படியே உங்களுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டேன். உங்களிடம் இப்போது பதினேழு பசுக்கள் உள்ளன. இப்போதும் ஒரு பசு, அதாவது கணக்கில் நான் சேர்த்த எனது பசு என்னிடமே இருக்கிறது. அந்தப் பதினெட்டாவது பசுவை நானே மீண்டும் எடுத்துக் கொண்டேன்."

'மாயா' என்ற தத்துவத்தை விளக்க இதைப் போலவே இன்னொரு கதையும் நமது வேதத்தில் இருக்கிறது!

சீடன் ஒருவனுக்கு ஒரு தீபத்தின் வெளிச்சத்தில் குரு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு பெருங்காற்று அடிக்க, தீபம் அணைந்து போனது.

சீடன் கேட்டான்:

"குருவே! விளக்கின் சுடர் எங்கே போனது?"

குரு சொன்னார்: "அது எங்கிருந்து வந்ததோ அங்கேயே போய்விட்டது."

எனவே, கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற வாதங்களில் கவனம் செலுத்துவதை விட, நமக்குள்ளேயே இருக்கும் 'ஆண்டவன்' என்ற சக்தியை உணர்ந்து பலப்படுத்திக்கொண்டால் அதைவிடப் பெரிய சக்தி எதுவும் கிடையாது!

நன்றி: சுவாமி சுகபோதானந்தா.

(தொடர்ந்து வரும்.....)

முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 118க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

திருமதி காஞ்சனாதேவி விஜயரத்தினம், வல்டமர் எஸ்டேட், உடபுஸ்ஸலாவ

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. செல்வி. எம்.எப். அஸ்மா, 145, கல்பொக்கை வீதி, வெலிகம.
2. செல்வி ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த. மல்வனை.
3. காமில் ஜாவித் ஜ.ப்ர் நிஷா, 33, காட்டுப்பள்ளி குறுக்கு வீதி, ஏறாவூர் - 03.
4. கே.எம்.எஸ். ஆப்தீன், 36, போள்ஸ் வீதி, நகரசபை விடுதி, புத்தளம்.
5. திருமதி. ரி. பரமேஸ்வரன், அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு -05.
6. எஸ். ஜெயச்சந்திரராசா, இராசேந்திரம்குளம், வவுனியா.
7. செ.ஜெ.ஏ. நிம்றோ, 33/1, வண்டவேர்ட் பிளேஸ், தெகிவளை.
8. ஹாலித் மீராமுகைதீன், இல 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்-03 ஏ.
9. எம்.ஆர்.எம். இக்பால், 387, ஜும்மா மஸ்ஜிட் வீதி, கொழும்பு -10.
10. க .கமால்தீன், புன்னைக் குடா, ஏறாவூர் - 03.

குறுக்கெழுத்துப் போட்டி 120

இடமிருந்து வலம்

2. இந்தியாவின் தேசிய விளையாட்டு (குழம்பியுள்ளது).
5. வேவுகாரன் (குழம்பியுள்ளது).
10. உலகம்
14. விழுதுள்ள மரம் இது (திரும்பியுள்ளது).
16. பரத் - சந்தியா இணைந்து நடித்த திரைப்படம் (குழம்பியுள்ளது).
20. ஒரு சொல்லையோ, சொற் றொடரையோ இரு பொருள்படத் தொடுப்பது (குழம்பியுள்ளது).

குறுக்கெழுத்துப் போட்டி 118 விடைகள்



மேலிருந்து கீழ்

1. இது அசுத்தமடைவதாலும் பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்படும்.
2. புள்.
3. பனங்கிழங்கின் மாற்று வடிவம் (குழம்பியுள்ளது).
12. விஷம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
17. சீயான் கபோதியாக பாத்திரமேற்ற திரைப்படம்.
18. மறியல் என்றும் சொல்லலாம்.

போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கப்பலில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 17.05.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-120
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

பல வாரங்களாக முரசில் இடம் பெற்று வந்த ராதாஸ் டெக்ஸ்டைல்ஸ்ஸின் வண்ணச் சேலை பரிசுப் போட்டி இந்த வாரத்துடன் முடிவடைகின்றது. இவ்வளவு காலமும் எமக்கு தபாலட்டைகளை அனுப்பிய அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும், மீண்டும் இன்னுமொரு போட்டி வெகு விரைவில் அறிவிக்கப்படும்.

இந்த வாரம் யாருக்கு சேலை?
கொழும்பு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 92

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

பி.சுமதி.
161/375, மோதரை வீதி, கொழும்பு - 15.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

ஓவியக் காதல்

சூடு புலிபோல் குறுக்கும் நெடுக்குமாக அறையை அளந்து கொண்டிருந்தான் கதிர்.

"சார்....போஸ்ட்!" தபாற்காரனின் கணீர்ச்சத்தம் கேட்டதும் ஓட்டமும் நடையுமாகச் சென்ற கதிர், தபாலைக் கொடுத்த வேகத்திலேயே அதைப் பிரித்தான். மலையளவு எதிர்பார்ப்புகளோடு பிரித்த கதிருக்கு வானளவு ஏமாற்றம். ஏதோ பக்கம் பக்கமாக வார்த்தைகளைக் கோர்த்து எழுதியிருப்பாள் என்று நினைத்தவனுக்கு, ஓவியத்தைப் பார்த்ததும் விண்ணளவு பறந்த எண்ணப் பட்டாம்பூச்சிகளெல்லாம் சிறகொடிந்து மண்ணில் வீழ்ந்தது போல் ஓர் உணர்வு. ஸப்தநாடிகளின் வேகம் குறைந்து உடல் உஷ்ணம் ஏற,

ஓவியத்தாளை கசக்கி ஒரு மூலையில் எறிந்து விட்டு பக்கத்திலிருந்த கதிரையில் சுரணையற்று உட்கார்ந்தான்.

கதிருக்குப் பதினைந்து வயதாக இருக்கும்போது பெற்றோர் விபத்தொன்றில் இறந்துவிட்டனர். தந்தை ராமச்சந்திரர் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர் மட்டுமல்லாது பிரபல்யமான ஓவியரும் கூட. அவரது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்திய ஓவியப்போட்டியில் அவரது ஞாபகார்த்தப் பரிசை வழங்குவதற்குச் சென்றிருந்தான் கதிர். "சமாதானத் தூதுவர்" எனும் தலைப்பில் அமைந்த வெண்ணிற ஆடைகட்டிய பெண்மணி வெண்புறாவை ஏந்தியவாறு நின்ற ஓவியம்தான் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது. ஏதோ முதுபெரும் ஓவியராக இருப்பார் என்ற எதிர்பார்ப்போடுதான் கதிர் இருந்தான். ஆனால் பரிசைத் தட்டியது இருபது வயது நிரம்பிய அழகுப் பதுமை. ஆம்! பதுமை என்றுதான் சொல்லனும். அந்த அளவு ஓவியத்தைப் போல அழகாக தாமரை என்ற பெயருக்கேற்றாற்போல் தாமரையாகத்தான் மேடையில் மலர்ந்து நின்றாள். பரிசுக்காக நீட்டிய மெல்லிய வெண்டைப்பிஞ்சு விரல்களை கதிர் நோக்கினான். நீண்டிருந்தன. நீண்ட விரல்கள் உடையவர்கள் ஓவியம் வரைவதில் வல்லவர்கள் என்று எங்கோ படித்த ஞாபகம் வந்தது அவனுக்கு. அடக்கமாக எளிய கோலத்தில் நின்றவளைப் பார்த்த மாத்திரத்திலே கதிருடைய இதயத்தடாகத்தில் தாமரை மலர்ந்துவிட்டாள். பரிசோடு தன் இதயத்தையும் அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

தாமரையைச் சந்தித்த பின் அவள் நினைவு கதிரை வாட்டிஎடுக்க, அவள் விலாசத்தின் மூலம் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க திடம் பூண்டான். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆற்றுக்குச் சென்றான் கதிர். எவ்வளவுதான் மாபிள் தொட்டியில் நீச்சலடித்தாலும் வார இறுதியில் ஆற்றில் இறங்கி நீராடினால் தான் மனதுக்கு நிம்மதி. நீராடினான். கதிர் நீராடி கரையேறியபோது என்றுமில்லாதவாறு அன்று ஒரு குரங்கு அவனது உடுப்புகளெல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு ஓட, அதைத்தொடர்ந்து கதிரும் ஓடினான். குரங்கு ஒரு குடிசைக்குள் நுழைய, டேய்....இதென்ன கெட்டபழக்கம்? ஒருநாளும் இல்லாம இண்டைக்கி..... ஓடு! கொண்டுபோய் கிடந்த இடத்துல போட்டுத்து வா. போ.....!போடா...! என்று ஒரு வயதான பெண்மணியின் குரல் அதட்ட.....

"அம்மா....என்னோட உடுப்புத்தான்! நானே வந்திட்டன் தாங்கம்மா?"

கூதலில் கதிர் நடுங்கி நடுங்கிச் சொன்னான். அப்போது சில்லறை சிதறிய சிரிப்போடு ஒரு முகம் எட்டிப்பார்த்து மறைய, கதிர் அப்படியே அதிர்ந்து போனான். "நான் தேடிச் செல்ல இருந்த மூலிகை என் காலிலேயே சுற்றிக் கொண்டதே. இதுதான் தெய்வ நாட்டம் என்பதோ? ராமனுக்கு சீதையைக் காட்டிக் கொடுத்த அனுமன்போல் என் இதய தேவதையிடம் இழுத்து வந்த குரங்கே உனக்கு கோடான கோடி நன்றி ஐயா!" என எண்ணிக்கொண்டு பக்கவாட்டில் பார்வையை ஓட்டினான். அக்கம்பக்கத்தில் சிறுசிறு குடிசைகள் காணப்பட்டன. இவ்வளவு ஏழ்மைக்குள் ஒரு கலைப்பொக்கிஷமா? குப்பைக்குள் தானே குண்டுமணி!

"அம்மா....சீக்கிரம் உடுப்பக் கொடுங்கம்மா"

தாமரை தனக்குக் கிடைக்காமாட்டானென்று தெரிந்ததும் தனிமையிலே என்று தாமரை உள்ளிருந்து சொல்ல, அப்போதுதான் சுயநினைவுக்கு வந்த கதிர் தான் நிற்கும் நிலையறிந்து வெட்கிப்போய், தாமரையின் தாயார் நீட்டிய உடுப்புகளை வாங்கிக் கொண்டு விரைந்தான்.

தாமரையின் இருப்பிடத்தைக் கண்டபின் அவளது வீட்டிற்கு கதிர் அடிக்கடி சென்றான். தாமரைக்கு உறவென்று சொல்லிக்கொள்ள தாயார் லீலா மட்டும்தான்! பணக்கஷ்டம் அவளது கலைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதைக்கண்டு தான் உதவ முன் வந்தான் கதிர். முதலில் தாமரை மறுத்தாலும் தாயாரின் கட்டளைப்படி ஏற்றுக்கொண்டாள். ஊர் மட்டுமல்ல அந்த நாடே பேசுமளவிற்கு அவளைப் பிரபல்யமடைய வைத்தான் கதிர். நாளடைவில் இருவரும் அன்னியோன்னியமாகப் பழகினார்கள். கதிர் தன் காதலைச் சொல்வதற்கு இரண்டு ஆண்டுகள் தயங்கித் தயங்கி இருந்து இறுதியில், தாமரையிடம் சொல்வதென்ற முடிவோடு அவளது வீட்டிற்குச் சென்றான். அவனது காலடி ஓசை கேட்டுச் சட்டென்று திரும்பிய தாமரை,

"நீங்களா?" என்றாள் அசட்டையாக. அவள் கேட்ட தொனி வேறு யாரையோ எதிர்பார்த்ததை உணர்த்த....

"வேற ஆரு வாற?" என்று கேட்டான் கதிர்.

"ஏன் வரக்கூடாதா?" வரைவதில் கண்ணாக கடுப்போடு கேட்டாள்.

"அது சரி! ஏகப்பட்ட ரசிகர்கள் போவார்கள் வருவார்கள். அதப் போய் கேட்க நான் ஆரு?"

"தெரிஞ்சா சரிதான்!" என்று தூரிகையில் மையைத் தொட்டவாறு கேலியாகச் சொன்னாள்.

"வழமைக்கிமாறா ஏன் தாமர என்மேல எரிஞ்சி விழுற? என்கூட பேசப்பிடிக்கலைன்னா சொல்லு நான் போறன்" என்று கரகரத்த குரலில் அவன் பேச, தூரிகையை ஒரு பக்கமாய்ப் போட்ட தாமரை அவன் முகத்தை ஏறெடுத்து சில நிமிடங்கள் வைத்தகண் வாங்காமல் பார்த்தாள். அந்தப் பார்வையின் அர்த்தம்,

"உன்னை சீண்டிப் பார்க்கத்தான் என்றா? இல்லை உன்மேல் வெறுப்பாகத்தான் பேசுகிறேன் என்றா?" அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேர மௌன இடைவெளியின் பின் அவளாகவே பேச ஆரம்பித்தாள்.

"ஆ....வந்து...உங்ககிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசணும். நா...நான் ஒருத்தரக் காதலிக்கிறன்." அவ்வளவுதான் தூக்கிவாரிப் போட்டது கதிருக்கு. இருந்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவசரமாக.....

"ஆரு தாமர?" என்று தானாக இருக்கலாமென்ற நப்பாசையில் கேட்டான்.

ஆ...ரெண்டா...ஒரு ரசிகன் : "சொல்லுறத்துக்கு எனக்கு வெட்கமா இருக்கு. நாளைக்கி உங்க வீட்டுக்கு தபால்ல அனுப்புறன். பார்த்து தெரிஞ்சுக்குங்க."

அவன் இதயமலர் கருகுவது தெரியாமல் பேசினாள். அதற்குமேல் தாமரையிடம் எப்படிக் காதலைச் சொல்வது? வேதனையைக் குத்தகைக்கு எடுத்தவன் போல் வீட்டிற்குப் புறப்பட்டான். அன்றிரவு முழுவதும் அவனுக்கு உறக்கமில்லை.

தாமரையின் காதலன் தானாக இருக்கலாமென்ற துளி நப்பாசையில் அதிகாலையிலிருந்து அன்னந்தண்ணி அருந்தாமல் அவள் பதிலுக்கு வாசலில் தவம் கிடந்தான் கதிர்.

தாமரை தனக்குக் கிடைக்காமாட்டானென்று தெரிந்ததும் தனிமையிலே அழுது புலம்பினான் கதிர். அப்போது அங்கே வந்த நண்பன் ரகுவைக் கண்டதும், வேதனையில் ஓடிப் போய் அவனைக்கட்டியணைத்து விசயத்தைச் சொல்லி விக்கிவிக்கி அழுதான். நண்பனின் துக்கம் தாளாது எவ்வளவோ புத்திமதி சொன்னான் ரகு. அவன் கேட்கவில்லை. மனப்பாரம் தீரும் வரை நன்றாக அழட்டும் என்று அவன் பாட்டுக்கு விட்டவன், மூலையில் கசங்கிக் கிடந்த சித்திர ஒற்றையை எடுத்து விரித்தான். அழகாகத் தத்ரூபமாய் வரைந்த ஓவியத்தை மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்த ரகுவின் மூளையில் சின்னதாய் ஒரு மின்னல் வெட்ட, படத்தை உற்று நோக்கினான். சட்டென்று உற்சாகமிகுதியில் துள்ளி குதித்த ரகு....

"டேய் மச்சான்....ஒன் காதல் சக்ஸஸ்டா...சக்ஸஸ்! இங்கப்

-விஜயமலர் பொன்னுதுரை, சம்பூர்.

பொம்பளைங்களே இப்படித்தான்டா. தங்களுக்கிட்ட இருக்கிற திறமையாலேயே ஆண்கள வருத்திப்போடுவாளுக. ஓவியன்ட மகன் எண்டு பெரி.....ஸ்ஸா புழுகுவ. படத்தப்பார்த்து விசயத்தப் புரிஞ்சிக்க முடியல. அதுக்குள்ள காதல் வேற வந்திற்று ஐயாவுக்கு" என்றான்.

இருள் கப்பிக்கிடந்த கதிரின் முகம் ஸ்விட்ச் தட்டினாற்போல் பிரகாசமடைய,

"டேய்...சும்மா பேத்தாம சீக்கிரம் விசயத்தைச் சொல்லுடா? அவள் என்னக் காதலிக்கிறாளெண்டு எப்படிடா கண்டுபிடிச்ச. பிளீஸ் சீக்கிரம் சொல்லுடா...பிளீஸ்" என கெஞ்சினான்.

"ஐய...முகத்தப்பார் அசடு வழியுது! மொக்கு...இங்கபார்...தண்ணித்தடாகத்துல தாமர மலருது. எதனால...? கதிர் ஒளிபட்டுத்தான்! அதுமட்டுமில்ல தாமரையின் காதலன் யார் தெரியுமா? கதிரவன்! தன் காதலன் நீதான் எண்டு படங் கீறிச் சொல்லியிருக்கிறா." ரகு விளக்கம் சொல்லிமுடிக்கவில்லை சட்டென்று ஓவியத்தைப் பறித்த கதிர் படத்திற்கு முத்தமிட்டு மார்போடு அணைத்துக் கொண்டான்.

"எப்படி டாக்டர் எங்களால் நம்பவே முடியலியே....?" தங்கம்மாவின் குரல் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் தளதளத்தது.

"நம்பித்தான் ஆகணும்...! கடவுளா நேரில வந்துதான் ஒங்க மகன காப்பாத்தியிருக்கான்."

"யாரு டாக்டர்.....யாரு? அந்த தியாகத்தைச் செய்தது?"

"யாரென்றே தெரியல. வந்தாரு உதவினாரு ஒரு நன்றிகூட சொல்ல முன்னாடி போயிட்டாரு"

"போறப்ப இந்த கடிதத்தை மட்டும் வச்சிட்டுப் போயிருக்காரு"

டாக்டர் தங்கம்மாவின் கையில் கடிதத்தை வைத்துவிட்டுச் சென்றார்.

கடிதத்தைப் பிரித்துப்பார்த்த தங்கம்மா கற்சிலையானாள்....!

அவளது மனச்சாட்சி அவ்ளை கொலை செய்ய முனைவது போல இருந்தது.

"இவனா.....?சீ...இவ...ரா? எங்க ரிஸானா?"

தங்கம்மாவின் மனம் கடந்தகால நிகழ்வுகளை நோக்கி வேகமாக ஓடியது.

"டேய் அங்க என்னடா செய்யிற....? இந்த வெறக ஒடச்சிப்போட சொல்லி எத்தன நேரமாச்சி? வரவர நீ வேலையே செய்யிறதில்ல. ஒங்கம்மா போன எடத்துக்கே ஒன்னையும் அனுப்பினாத்தான் சரி."

ரிஸான் பயத்தினால் நடுங்கிகொண்டே "இதோ....இதோம்மா இப்போ உடச்சிடுறன் என்று உலர்த்திக்கொண்டிருந்த துணியை அவ்வாறே போட்டுவிட்டு, விறகை உடைக்க தயாரானான். விறகை ஒடச்சி முடித்த ரிஸானுக்கு தலையெல்லாம் சுத்துவதைப் போல இருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. வீட்டுக்கடிகாரம் மாலை ஆறு மணியாகி

பட்டால் தெரியும்

விட்டதை அலாரம் மூலமாக அறிவித்தது. ரிஸான் காலையில் சாப்பிட்ட பாண் துண்டோடதான் இன்னும் இருக்கிறான். காலையில் ஐந்து மணிக்கு தொடங்கிய வேலை இன்னும் முடியவில்லை. தினமும் இதைப்போலவே அவனுடைய வாழ்க்கை நகர்கின்றது.

ரிஸான் யோசிக்கலானான். "எனக்கும் எங்கம்மா இருந்தா நா இந்த மாதிரி கஷ்டபடத் தேவையில்லையே. என்ன விட்டுட்டு நீ மட்டும் சந்தோசமா போயிட்ட இல்லையா அம்மா? ரிஸானின் கண்கள் குளமாகின. ரிஸானின் தந்தை ஒரு பிரை வே ட் க ம் ப

-நா.வீஜயகாந்த் வறல்வத்துரை, இங்கிரிய.

னியில் கணக்காளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது ரிஸான் தரம் ஆறில் கல்வி கற்றுக்கொண்டிருந்தான். நன்றாகப் படிப்பதாலும் துடுக்கான மாணவனென்பதாலும் பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் ரிஸானெண்டால் பிடிக்கும். இவ்வாறு சந்தோஷமாக சென்றுகொண்டிருந்த ரிஸானின் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்தது." ஒருநாள் ரிஸானைப் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு அழைத்துவரும் வேளையில், எதிரே வந்த லொறியில் ரிஸானின் தாய் மோதி அவ்விடத்திலேயே உயிர்துறந்தாள். தனது கல்வியை முடிக்க முன்னரே தனது தாயின் இறுதிக் கிரியைகளை முடிக்க நேரிட்டது ரிஸானுக்கு மட்டுமன்றி, அவன் அறிந்தவர் அனைவரையுமே ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியது. தனது தாயின் சடலத்துடன் தனது வாழ்க்கையையும் சேர்த்துதான் எரிக்கிறோம் என்று அன்று ரிஸான் அறிந்திருக்கவில்லை.

ரிஸான் சிறியவன் என்பதாலும் ரிஸானின் அப்பாவுக்கு வேலைப் பளு காரணமாக அவனைக் கவனிக்கப் போதிய நேரம் இல்லாமையினாலும் குடும்பத்தவரின் வலுக்கட்டாயத்தில் மறுமணம் முடிக்க அரைமனதுடன் ஒப்புக்கொண்டார். ஆரம்பத்தில் ரிஸானைத் தனது சொந்த மகனாகவே நடாத்திய தங்கம்மா, காலப்போக்கில் மாற்றமடைய ஆரம்பித்தாள். ரிஸானின் அப்பாவும் அவளை எதிர்த்துப் பேச முடியாமல் மௌனமாய் இருந்தார். தங்கம்மாவின் ஆரம்ப நடவடிக்கையா ரிஸானை பள்ளியிலிருந்து நிறுத்தினாள். ஆசிரியர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் தங்கம்மா அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக தனது மகனை உயர்ந்ததொரு பாடசாலையில் கல்வியைத் தொடர வழிசமைத்தாள்.

"ஏய்....இன்னும் வேலைய முடிக்கல்லியா" என்ற தங்கம்மாவின் அதட்டலைக் கேட்டு நிகழ்காலத்திற்கு வந்தான்.

தங்கம்மாவின் மகனான கரனுக்கு ரிஸானின் மேல் அளவற்ற அன்பிருந்தது. அவன் தனக்கு தரும் உணவுகளை ரிஸானுடன் பரிமாறிச் சாப்பிடத் தவறுவதில்லை. ஆனால் தங்கம்மா இதனை அவதானித்தால் தனக்கே பாதிப்பு என்பதால் ரிஸான் கரனுடன் சேர்வதைத் தவிர்த்துக் கொண்டான். ரிஸானைக் கொடுமைப்படுத்த வேண்டாமென கரன் தனது தாய்க்கு கூறும் போதெல்லாம்;

"நீ சும்மா கெட. எனக்கு எல்லாந் தெரியும். அவனுக்கு கூட இடம்கொடுத்தால் சொத்தெல்லாம் எடுத்துக்கொண்டு நம்மல நடுரோட்டுல விட்டுறுவான்" எண்டாள். கரனும் மேலும் பேசாதுமௌனமாவான். தனது மகனுக்கு தன் கையாலேயே பாதாளத்தைத் தேடித்தந்துவிட்டோமே என்ற கவலையால் ரிஸானின் தந்தையும் படுக்கையில் வீழ்ந்தார். எத்தனையோ வைத்தியம் செய்தும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவரும் ரிஸானின் தாயின் இருப்பிடத்தை சென்றடைந்தார். ரிஸான் அனாதையானது மட்டுமின்றி, தனது சித்தியின் கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

இதனால் தங்கம்மா சந்தோஷமடைந்ததுடன் மீண்டும் வந்து சொத்துக்களை கேட்பானோ? என்று அச்சமடைந்தாள். ரிஸான் வீட்டைவிட்டுச் சென்று 10 வருடங்கள் கடந்தும் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை.

இவ்வாறு இருக்கையில் கரன் ஒருநாள் மயக்கம் போட்டு நிலத்தில விழுந்தான். தங்கம்மா பதற்றத்துடன் அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தாள். அங்கு வைத் தியர்

சொன்ன வார்த்தை அவளை தூக்கிவாரிப் போட்டது. ஆம்! பெற்றோரின் கவனமின்மையாலும் அளவுக்கதிகமான சுதந்திரத்தாலும் கரன் மதுவுக்கு அடிமையாயிருந்தான். உடனடியாக அவனுக்கு சத்திரச் சிகிச்சை செய்யாவிடின் அவன் இறக்க நேரிடும் எனவும், அதற்குப் பல இலட்சங்கள் செலவாகும் எனவும் கூறினார். தங்கம்மாவோ தலையில் கையை வைத்தாள். ஆம்... அவளது அனைத்துச் சொத்துக்களும் 'ஆற்றில் கரைத்த புளிப்போல' அழிந்திருந்தது. இப்பொழுது அவளுக்கு இருப்பது வீடு ஒன்றுதான். அவள் தனது உறவினர்கள் பலரையும் நாடினாள். நல்ல பலனில்லை. இறுதியில் பத்திரிகையில் விளம்பரம் செய்தாள். விளம்பரத்தை தற்செயலாக பார்த்த ரிஸான் அவன் தான் சிறிதுசிறிதாக சேர்த்து வைத்திருந்த பணத்தில் கரனுக்கு உதவினான்.

"மகனை பார்த்தார்சா என்ற டாக்டரின் வினாவால் நிலவுலகம் வந்த தங்கம்மா கரனை பார்க்க விரைந்தாள். அங்கே கரன் தெரியவில்லை கரனின் முகத்தில் ரிஸானே தெரிந்தான்.

தவறுகள் செய்பவர்கள் தண்டிக்கப்படுவதில்லை; மன்னிக்கப்படுகின்றார்கள்." மன்னிப்பவர்கள் மனிதத் தெய்வங்கள். தங்கம்மாவின் மனம் புதியதொரு தெய்வத்தை வழிபடத் தயாராக இருந்தது.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

சிந்தித்துப் பார்க்க...

கற்றுக் கொள்

மற்றவர்களில் யாரேனும் உங்களைப் பற்றிய தவறான தகவல்கள் வைத்திருந்ததாக எந்தவொரு சம்பவமும் நிகழ்ந்ததுண்டா? அவை எந்த வகையிலும் உங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததுண்டா?

தவறான தகவல்கள் எந்த அளவிற்குப் பெருஞ் சேதம் விளைவிக்கும் என்று நம் மனதிற்குக் கொஞ்சமாவது தெரியும். மற்றவர்களைப் பற்றிக் கூட உங்களிடம் தவறான தகவல்கள் இருந்திருக்கலாமே!

உண்மையான தகவல்களிலிருந்து, பொய்யான தகவல்களைப் பிரிக்கும்போது, நமக்குள் நன்கு புரிந்துகொள்ளும் தன்மை ஏற்படுகிறது.

நம்மைச் சுற்றி தவறான தகவல்கள் ஏராளமாக உள்ளன. தீய எண்ணம் கொண்ட தனி மனிதர்கள், தங்களின் சொந்த நலன்கள் ஈடேறும் வகையில் இவ்வாறான தகவல்களை உருவாக்குகின்றனர். சில தகவல்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்படும்போது, அவைகளிலிருந்து இம் மாதிரியான பொய்த்தகவல்கள் உருவாக்கப்படுகின்றன. இவை உண்மையான தகவல்களை ஏற்றுக்கொள்ளும் நிலையினை அப்படியே தடுத்துவிடும்.

- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.

"தமிழர்கள் செய்த தவம்" என்று எதைச் சொல்வீர்கள்?

-ஏ.திவ்யராஜன், வவுனியா.

அவர்களது 'தவப் புதல்வர்'களைப் பார்க்கிறபோது, தமிழர்களின் தவ வலிமை பற்றியே நம்பிக்கையிழந்து விட்டேன் நான்!

ராதிகாவின் 'அண்ணாமலை' தொடர் பார்க்கிறீர்களா? எப்படி?

-எஸ்.ராஜா, வத்தளை.

ராதிகா (அண்ணாமலை) தன் அப்பாவித் தனம் களைந்து அதி சூர அசகாயப் பெண் மணியாக (சித்தி போல) எப்போது மாறுவார் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், அதுவரைக்கும் அவருடன் நடிக்கும் மற்றவர்க ளெல்லாம் அவரைவிட அசட்டுத்தனமாக அப்பாவித்தனத்தைப் பிழிந்து கொண்டிருப்பார்கள் என்பதால் தாங்க முடியவில்லை!

வாழ்க்கை எப்போது இனிக்கும்?

-ச.நிரஞ்சலா, மஹியாவ.

அதை நேசிக்க முடிகிறபோது!

'சச்சின்' ஏமாற்றி விட்டதே?

-கோ.ஷாலிகா, இறம்புக்கந்தை.

துடுப்பாட்டக்காரரும்தான் ஏமாற்றி வருகிறார்.

டெலோ இயக்கம் மாநாட்டைக் கூட்டி, தங்கள் அமைப்பின் தலைவராக மீண்டும் அடைக்கலநாதன் எம்.பி.யைத் தெரிவு செய்திருக்கிறதே?

-ஏ.எம்.ஏ.அஸீஸ், காத்தான்குடி.

"அப்போ,ஏகப் பிரதிநிதிகளை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? அப்படியானால் அவர்களுக்கு மாறுபாடான என்னென்ன கருத்துக்களை இவர்கள் கொண்டிருக்கிறார்கள்? எந்த விதத்தில் ஏகப் பிரதிநிதித்துவத்துக்கு அப்பால் டெலோ கட்சிக்கும் தேவை இருக்கிறது என்று இவர்கள் கருதுகிறார்கள்? சரி, இவர்களுக்கு வெளியே "ஏகப் பிரதிநிதித்துவம் தான் இன்றைய தமிழ் மக்களின் ஒரே கொள்கை" என்று சொல்லும் 'தமிழ்ப் பெரியவர்கள்' இதைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?.....எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது. தெரிந்தவர்கள் யாராவது விளக்குங்களேன்!

த்ரிஷா மாமிக்குப் பிறகு கலக்கப் போவது யாரு? அசினா? சதாவா? நயன்தாராவா?

எதிர்காலம் எந்த மாமிகளுக்கும் சாமிகளுக்கும் இல்லை; குறைந்த பட்சம் சிம்ரன், ஜோதிகா போல நடிப்பையும் கொண்டு வரப் போகும் புயல் ஒன்றுக்கு!

உங்களை ஒரு கழுதையோடு ஒப்பிட்டால் என்ன செய்வீர்கள்?

-எம்.எம்.மிஹ்லார், குருநாகல்.

உதைப்பேன்.

நம் வானொலிகள் பற்றி?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

எம்.எஸ்.கல்யாணசுந்தரம் என்றொரு எழுத்தாளர் 1960இலேயே தன் சிறுகதை ஒன்றில் இவ்வாறு சொல்கிறார்: "ரேடியோவின் சுட்சுமத்தை அதிகரித்து விட்டால் ஆகாயத் திலுள்ள குப்பை ஒலிகளையெல்லாம் அழைத்து வரும்." எவ்வளவு தீர்க்கதரிசனம்!

பேராசிரியர் நயந்தும் வலிந்தும் கேட்டுக்கொண்டபடி, தமிழ்க் கூட்டமைப்பினர் இந்தியாவை வென்றெடுத்துவிட்டார்களா?

-ஆர்.பிரியதர்ஷினி, கொழும்பு - 13.

ஒன்றாக வாழவேண்டிய சகோதரர்களான முஸ்லிம் களையே முகம் திருப்பி முன்றாம் தரப்பாக்கி விட்டிருப் பவர்கள் தானா.... விமானமேறி இந்தியாவை வெல்லப் போகிறவர்கள்! பேராசிரியர் ஏகப் பிரதிநிகளுக்கு நேரே நாவசைக்க முடியாப் பயக் கெடுதியில் சும்மாவேனும் இவர்களை மிரட்டிக்கொண் டிருக்கிறார் பாவம்!

யாரையாவது தவறாகப் புரிந்துகொண்டு விட்டோமே என்று பிறகு வருந்தியதுண்டா?

-க.கமலதாசன், வந்தாறுமூலை.

எவரையும் முழுமையாகப் புரிந்து கொண்டுவிட முடியும் என்று நான் நம்புவதில்லை. தவறாகப் புரிந்துகொள்ளுதல் என்பதும் தவிர்க்க முடியாதது என்பதால், தவறாமல் அடிக்கடி வருத்தப்படத் தவறுவதில்லை.

தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் மக்களைக் கும்பிடுவதை எதற்கு ஒப்பிடலாம்?

-எம்.எ.ப். எம். இர்பான், கல்முனை.

திருடர்கள் சாமி கும்பிட வருவது போல.

எனக்குத் திடீர் திடீரென மூக்கின் மேல் கோபம் வருகிறது. என்ன செய்யலாம்?

-ஏ.எம்.கலீல், புத்தளம்.

மூக்கின் மேல் வந்தால் பரவாயில்லை. உங்கள் மூக்கு தானே! மற்றவர்கள் மேல் கோபம் வந்தால்தான் அவ்வளவு சரியில்லை.

வசந்தம் வந்தது அன்று! வாழ்வு நொந்தது இன்று!!

வசந்தன் கோயில் வாசலில் காத்திருந்தான். அன்று வெள்ளிக்கிழமை. அவ்வூரின் இளம் பெண்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் தரிசிக்கக் கிடைப்பதென்பது அவனைப் பொறுத்தவரையில் கடவுள் தரிசனத்துக்கு இணையானதுதான்.

அவன் கண்கள் பசியோடிருந்தன. அதனால் கால்கள் சுடுவது அவனுக்குப் பெரிதாய் உறைக்க வில்லை. நேரம் ஆக, ஆகப் பசியைச் சூடு வென்றது. அருகிலிருந்த மரநிழலை நோக்கி நடந்தான். 'நம்முடைய ஊர்தான் இவ்வளவு காய்ந்த ஊர்' என்று எரிச்சலோடு நினைத்துக் கொண்டான். நாட்டின் மத்திய பகுதியின் குளிரை

தருவது முழுமதியன்

நினைத்தான். மனித உடலுக்கு மரியாதையும், சீராட்டி மகிழ்வும் தரும் காலநிலை! ஏன்? தென்பகுதிகளிலும் வசந்தன் அலைந்து திரிந்திருக்கிறான். காற்றும், வெளியும் இப்படி எரிச்சலடுத்துவதில்லை அங்கெல்லாம்.

ஆனாலும் வெப்ப எரிச்சலை மேவியிருந்தது அவனது "அழகை மேயும் வெறி". பெண்கள் வெளியே வரத் தொடங்கி விட்டால் போதும், சூழல் தண்மையாகிவிடும். அவர்களை மீறிச் சூழலுக்குக் கடுமை தரக்கூடிய ஆற்றல் சூரியனுக்கு இல்லை. அத்தனை நிலவுகளுக்கு முன்னால் கதிரவன் ஒரு அற்பப் பிறவி!

திடீரென சூழல் உயிர் பெற்றது போல விழிப்புக் கொண்டது. நதியின் சலசலப்பு வசந்தன் காதை நிறைத்தது. சிரிக்கிறார்களா, பேசுகிறார் களா? என்பது புரியாத ஒரு சங்கீதத்துடன் நாலைந்து பெண்கள் கூட்டமாக வெளிவந்தனர்.

திரும்பி உயரே தெரிந்த கோபுரத்தை நோக்கி நாடியில் வலது கை விரல்களால் தொட்டுக் கொண்டார்கள். சொல்லி வைத்தது போல் வரிசைக் கிரமமாக எல்லோரும் இந்த அபிநயத்தை முடித்தார்கள். மறந்தும் இவன் நின்றிருந்த இடத்திற்குப் பார்வையைத் திருப்பி விடாதிருந்தார்கள். தங்களைப் பார்ப்பதற்கு வாலிபர்கள் எங்கெங்கெல்லாம் நிற்பார்கள் என்பது அவர்களுக்கு இயல்பாகவே தெரிந் திருக்கிறது. ஜாக்கிரதை உணர்வு!

பிறக்கும் போதே இவர்களுக்கு எல்லாம் தெரிந்துவிடுகிறது.

எல்லோரும் ஒரே மாதிரியாக, தலையி லிருந்து பின்னல் ஆரம்பிக்கும் இடத்தில் கரும் பச்சையான நொச்சி இலைகளைச் சொருகியி ருந்தார்கள். சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்ட தாயிருக்க வேண்டும்.

அந்த சூழலுக்கே ஒரு மிருதுத் தன்மையைப் படர விட்டபடி அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

வசந்தனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

'ஒருத்தி கூடவா திரும்ப மாட்டாள்?'

பின்னால் வேகமாக நடந்தான். அவன் கண்களின் குறி, அவள் அசைவுகளில் எல்லாம் மென்மையான இழை இருப்பதாக அவனுக்குத் தோன்றிய அந்தக் கரும் பச்சை நிறச் சேலை அணிந்தவள் மீதே இருந்தது.

வேறெந்த உடைகளுக்கும் இப்படிக் கவர்ச்சிகரமாக வளைவுகளை விளம்பரப்படுத்தும் வல்லமை இல்லை என்று எண்ணிக் கொண்டான்.

அவள் முகத்தில் ஒரு பூவின் மலர்ச்சியை நினைவுபடுத்தும் புன்னகை எப்போதும் நெளிந்தபடி இருந்தது.

வேகமாக நடந்தான். அவளைக் கடந்து போகும்போது ஏதாவது கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான்.

அப்போதுதான், எதிரே ஒரு கும்பல் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். அந்தக் கும்பலை இவர்கள் கடக்கும் நேரத்தில் தானும் அங்கு போய்விடமுடியும் என்று அனுமானித்தான். திட்டத்தை மாற்றிக் கொண்டான்.

வசந்தன் மிக வேகமாக அந்த நெரிசலில் நுழைந்தான். அவள் ஒதுங்கிய சமயத்தில், இவனும் ஒதுங்க இடமில்லாத பாவனையில், அவளுடன் மோதி, மடித்த முழங்கையினால் அவளது மெத்தென்ற பாகத்தை இடித்துவிட்டு, மிகத் தாழ்மையாக மன்னிப்புக் கேட்டான்.

அவள் ஒரு கணம் திரும்பி, கண்களால் இவனைக் காறித் துப்பிவிட்டுப் போனாள்.

வசந்தன் உல்லாசமாகச் சீட்டியடித்தான். முழங்கையில் இப்போதும் மெத்தென்று பரவிய உணர்ச்சியினால் புல்லரித்தான்.

கரும் பச்சை நொச்சி இலைகளும், கரும் பச்சை நிறச் சேலையும் தொலைவில் சென்று மறைந்து கொண்டிருந்தன.

வசந்தன், அடுத்து வருகிற நொச்சி இலைகளுக்காக மீண்டும் கோயில் வாசலை நோக்கி நடந்தான்.

இப்போது நினைத்துப் பார்க்கையில், இளமை மிக ஏக்கமாக அவனுள் நிறைந்தது. அலட்சியப் பார்வைகளுக்கு மட்டுமல்ல, அடி விழுந்தாலும் சலித்துக்கொள்ளாத ஆர்வம் பருவம் அது! இன்றைய இளைஞர்கள் பலருக்கு அந்த வசந்தம் மறுக்கப்பட்டு விட்டது.

நொச்சி இலைகளை அவர்களால் பெண்களின் கூந்தல்களில் தேடமுடியவில்லை.

இறந்தவர்களின் உடலிலிருந்து பெருகிய இரத்தக் கறை கலந்து உருவம் மாறிய நொச்சி இலைகளை ஊன் என்று எண்ணிக்கொண்டு பருந்து பறந்து வந்து கொத்துவதையே அவர்கள் பார்க்கிறார்கள்.

நொச்சி இவர்களுக்கு விரும்பத்தக்க மரமல்ல. அதைச் சூடி மகிழ்பவர்களைப் பார்க்கும் வாலிப வினோதங்கள் இவர்களுக்கு வாய்க்கவில்லை. நீர்வளமற்ற இந்த நிலத்தில் வாழ்வும் வளமற்றுப் போய்விட்ட கொடுமையை இப்போதுதான் உணர்கிறார்கள். உணர்கிறார் களா? அல்லது வதைபடும் சுகத்தில் ஊறித் திளைக்கிறார்களா? வதைபடுதல்களை விரும்பவும், மனங்களுக்கு வல்ல கோஷங்கள் கிடைத்துவருகின்றன.

நீர் அறவு அறியா நிலமுதற் கலந்த
கருங்குரல் நொச்சிக் கண் ஆர்
கரு உத் தழை, மெல் இழை மகளிர்
ஐது அகல் அல்குல், தொடலை ஆகவும்
கண்டனம்; இனியே வெருவரு
குருதியொடு மயங்கி, உருவு கரந்து,
ஏறுவாய்ப் பட்ட தெரியல் ஊன் செத்து
பருந்து கொண்டு உகப்ப யாம் கண்டனம்
மறம் புகல் மைந்தன் மலைந்த மாறே!

(புறம் : 271.)

சிந்தியா பதில்கள்

வயதான தந்தையைப் புறக்கணிக்கும் மைந்தர் பற்றி?

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

கஷ்டங்கள் நேரும்போது, தனது அனுப வத்தைத் தந்து உதவி செய்ய தந்தை இல்லாமல் போனாரே என்று ஏங்கும் பிள்ளைகளும் உண்டு.

ஒரு ஜப்பானியக் கதை

முன்னொரு காலத்தில், வேலை செய்ய முடியாத கிழவர்களைத் தூக்கிக் கொண்டு போய் மலைப் பகுதிகளில் விட்டுவிட்டு வந்துவிட வேண்டும் என்று அந்நாட்டு மன்னன் கடுமையாக உத்தரவிட்டிருந்தான்.

தகப்பன் மீது மிகுந்த பாசம் கொண்ட ஒரு மகனும், இவ்விதம் தன் தந்தையை மலையில் கொண்டுபோய் விட்டுவிட வேண்டிய நேரம் வந்தது. அரச தண்டனைக்குப் பயந்து தகப்பனை முதுகில் சுமந்து கொண்டு போன மகனுக்கு, இறக்கிவிடப்பட வேண்டிய மலையடிவாரம் வந்தபோது மனம் உருகியது. தந்தையை அங்கே தனியே விட்டுவிட்டு வருவதை எண்ணிப்பார்க்க முடியாதவனாக, அவரைத் திரும்பவும் வீட்டுக்கே கொண்டு வந்தான். யாருக்கும் தெரியாமல் அவரை மறைத்து வைத்து தினமும் உணவளித்து வந்தான்.

ஒருசமயம் மன்னன் விசித்திரமான ஆணை பிறப்பித்தான். பிரஜைகள் ஒவ்வொருவரும் சாம்பலினால் ஆன கயிறு ஒன்றைத் திரித்துக்கொண்டு வர வேண்டும் என்பதுதான் அந்த ஆணை. யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

கேள்விப்பட்ட தந்தை, மகனிடம் கூறினார். "ஒரு கயிற்றை நன்கு முறுக்கிப் பின் அதை எரித்துவிடு."

ஒரு பலகையில் கயிற்றை வைத்து மகன் எரித்தபோது, சாம்பலான கயிறு மிஞ்சியது. அதைக் கொண்டுபோய் மன்னனிடம் காட்டிப் பாராட்டுப் பெற்றான் மகன்.

மற்றொரு சமயம் மன்னன் ஒரு மரத்தடியைக் கொடுத்து, அதன் அடிப்பகுதி எது? தலைப்பகுதி எது? என்று கேட்டான். அதை வீட்டுக்கு எடுத்து வந்த மகன், தந்தையிடம் காட்டினான். "அதைத் தண்ணீரில் போடு. லேசாக மூழ்கும் பகுதி அடிப்பகுதி. மேலாக மிதக்கும் பகுதி தலை என்றார் தந்தை.

அதன்படியே செய்து காட்டி மன்னனிடம் பாராட்டும் பெற்றான் மகன்.

மன்னன் மீண்டும் கடினமான ஒன்றைக் கேட்டான்.

"அடிக்காமலே ஒலிக்கக் கூடிய மேளம் ஒன்றைச் செய்ய முடியுமா?"

மகன், தந்தையிடம் ஆலோசனை கேட்டான்.

தந்தை சொன்னார் : "மலைப் பகுதிக்குப் போய் தேனீக் கூடு ஒன்று கொண்டு வா. அதனை உள்ளே வைத்து மேளம் தயார் செய்."

மகன் அவ்வாறே செய்து மன்னனிடம் கொண்டு போனான்.

அரசன் மேளத்தைக் கையில் வாங்கியவுடன், உள்ளே இருந்த தேனீக்கள் அதிர்ச்சியடைந்து பறக்கத் தொடங்கிப் பக்கங்களில் மோத ஆரம்பித்தன. மேளம் ஒலித்தது.

"உன்னால் மூன்று பிரச்சினைகளுக்கும் எப்படி விடை காண முடிந்தது?" என்று வியந்து கேட்டான் மன்னன்.

"என் வயதுக்கு இவையெல்லாம் தெரியாது" என்று சொல்லி, தந்தை தன்னுடனிருக்கும் உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்டான் மகன்.

அதன் பின், தவறுணர்ந்த மன்னன், தனது சட்டத்தை நீக்கினான்.

மக்களின் தனிச் சிறப்பு என்ன?

-எஸ்.கவாஸ்கர், கொச்சிக்கடை.

மறதி.

நீங்கள் சமீபத்தில் வியப்படைந்தது எது குறித்து?

-இரா.குமரேசன், கினலன்-எல்ல.

முன்னோடி எழுத்தாளர்களைத் திறனாய்வு செய்து ஏழு தொகுதிகளாக ஜெயமோகன் வெளியிட்டிருப்பதை சமீபத்தில் வாசித்து முடித்தபோது...வியப்பு மட்டுமல்ல, பிரமிப்பும்! அவர்களது படைப்புகள் அனைத்தையும் படிப்பதும், அவை பற்றிய கறாரான அபிப்பிராயங்களைத் தொகுத்துக் கொள்வதும், தருக்க ரீதியான முடிவுகளுக்கு வந்து அவற்றைக் கோர்வையாக வெளியிடுவதும் இலகுவான காரியமாக எனக்குப் படவில்லை. அதுதான் வியப்பு!

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பற்றிய தனித் தனியான குறிப்புகளை இங்கே தொடர்ந்து எழுதி வருகின்றோம். இன்றும் கூட அதே பட்டியல் தொடர்கிறது.

தற்கொலை செய்துகொண்ட டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பின்வருமாறு:

சிட் பார்ன்ஸ் (அவுஸ்திரேலியா), ஏ.ஈ.ட்ரொட் (அவுஸ்திரேலியா), ஏ.ஈ.ஸ்டொட்டார்ட் (இங்கிலாந்து), பீ.ஜிலானி (இந்தியா), டபிள்யூ.எச்.ஸ்கொட்ன் (இங்கிலாந்து), சீ.ஏ.பொன்கர் (தென் ஆபிரிக்கா), டொம் ரிச்சர்ட்சன் (இங்கிலாந்து), ஜிம் பர்க்



(அவுஸ்திரேலியா), ஜி.எச்.சிரெஸ்வெல் (நியூசிலாந்து), ஏ.ஈ.ரெல்ப் (இங்கிலாந்து), ஏ.குரூன்பலி (இங்கிலாந்து), வீ.எம்.ட்ரென்கிறிஸ் (தென்னாபிரிக்கா).

நைட் (ஸ்ரீமத்) பட்டம் பெறுவது என்பது ஒரு விளையாட்டு வீரர் பெறுகின்ற மிகப் பெரிய கௌரவமாகக் கருதப்பட்டு வருகிறது. கிரிக்கெட் வரலாற்றை எடுத்துக்கொண்டால் 21 வீரர்கள் மாத்திரமே நைட் பட்டம் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

இதில் 11 வீரர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களது விபரங்கள் பின்வருமாறு:

ஸ்ரீமத் டொனல்ட் பிரட்மன் (அவுஸ்திரேலியா).

இங்கிலாந்து: ஜோர்ஜ் ஒஸ்வல்ட் பிரவுனின் எலன், எலெக் விக்டர் பெட்ஷர், மைக்கல் கொலின் கவ்ட்றி, ஜோன் பெலி ஹொப்ஸ் (ஜெக் ஹொப்ஸ்), லெனாட் ஹட்ன், பிரன்சிஸ் ஸ்டென்லி ஜெக்ஸன், ஹென்ரி டட்லி சிரஸ்ஹெம் லிவெசன் கவர், திமதி கலீவ் ஓப்ரேன், சார்ள்ஸ் ஓப்ரி ஸ்மித், பெல்ஹெம் பிரென்சின் வர்ணர்.

தென்னாபிரிக்கா: மரே பிசெட், விலியம் ஹென்ரி மில்டன்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி: லிபரி நிக்கலொஸ் கொன்ஸ்டன்டைன், காபீல்ட் கோபர்ஸ், க்ளயிட் லியோ போல்ட் வோல்கொட், எவர்டன் வீக்ஸ், பிரென்ச் மோர்டிமர் மெக்லினெ வொரல்.

இந்தியா: கஜபதிராஜ் விஜய ஆனந்த் (மஹாராஜா)

இனி போட்டி நடுவர்களாக மாறிய டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் குறித்துப் பார்ப்போம்.

அவுஸ்திரேலியா: சீ.பெனர்மன், ஜி.கொல்தார்ட், டீ.டபிள்யூ.கார்னட், பீ.ஜி.மெக்ஷேன், எச்.எச்.மெசி, ஏ.ஜே.ரிச்சர்ட்சன், ஜே.பீ.எப்.ட்ரவஸ்.

இதில், பீ.ஜி.மெக்ஷேன் எனும் வீரர் 1984/85ஆம் வருடங்களின்போது இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலியா அணிக்கும் இடையில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியின் போது விளையாட்டு வீரராகவும், போட்டி நடுவராகவும் செயற்பட்டுள்ளமை கிரிக்கெட் வரலாற்றிலேயே குறிப்பிடத் தக்கதொரு அம்சமாகும்.

இங்கிலாந்து: ஆர்.ஜி.பார்லோ, ஜே.பிர்கென்ஸோ, எல்.சி.பிரவுன், எச்.ஆர்.பட், ஜே.எப்.கிரெப், ஏ.டொல்பின், எச்.எலியட், ஏ.ஈ.பெக், டபிள்யூ.சன், ஜே.எச்.ஹெம்ப் ஷயர், ஜே.ஹட்ஸ்டாப், எப்.ஹிபர்சன், ஜே.டபிள்யூ.ஹிச், ஜே.லிலி வைட், ஏ.எஸ்.எம்.ஒக்மன், என்.ஓல்ட்பீல்ட், கே.ஈ.ப்ளமர், டபிள்யூ.எப்.எப்.பிரைஸ், எம்.ஷர்வின், ஈ.ஜே.ஸ்மித், ஜி.ஜே.தொம்சன், பீற்றர் விலீ, எச்.யன்ச்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி: ஈ.ஈ.எக் ஹான்க், பீ.ஈ.கோமஸ்.

அசோக டீ சில்வா

தென்னாபிரிக்கா: டபிள்யூ.டபிள்யூ.வேட்.

நியூசிலாந்து: ஜே.ஏ.கோச், ஈ.டபிள்யூ.டி.லின்டில்.

இந்தியா: ஸ்ரீனிவாஸ் வெங்கடராமன்.

பாகிஸ்தான்: ஜாவெட் அக்தார், மொஹம்மட் சலாம்.

இலங்கை: அசோக்க டி சில்வா.

அடுத்து, பிரபலம் பெற்ற போட்டி நடுவர்கள், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் காட்டிய திறமைகளைப் பற்றிப் பார்ப்போம்:

பீற்றர் விலீ - (இங்கிலாந்து)

இவர் 1954.12.06இல் பிறந்துள்ளார். 1996ஆம் வருடம் இவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் நடுவராக நியமிக்கப்பட்டார்.

நோர்த் ஹெம்டன்ஷயர் மாநில அணி சார்பில் கேம்பிரிஜ் பல்கலைக்கழக அணியுடன் முதன் முதலில் (1965இல்) முதல் தரப் போட்டியொன்றில் கலந்துகொண்டபோது இவருக்கு 16 வயதாகும். பிற்காலத்தில் இவர் லெஸ்டர்ஷயர் மாநில அணியில் இணைந்துகொண்டார். இங்கிலாந்து அணி சார்பில் 26 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள இவர், இரு சதங்களையும், ஐந்து அரைச் சதங்களையும் பெற்றுக்கொண்டவராவார். இப் போட்டிகளின்போது இவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 1,184 ஆகும் (சராசரி 26.90). ஒரு போட்டியின் போது இவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை 102 ஆகும். பந்து வீச்சில் 7 விக்கெட்டுகளை இவர் கைப்பற்றிக் கொண்டுள்ளார். சராசரி இது 65.14 ஆகும்.

மைந்தன்

எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

ஆதிக்கம் 8 : பிறந்த கிழமை வெள்ளி

எண் 8 பிரயோசனத்திற்கும் யோகத்திற்கும் உரிய உயரிய எண்ணாகும். வெள்ளிக்கிழமை என்பது சர்வ மதங்களுக்கும் உரிய உயரிய தினமாகும். பக்தியும், புனிதமும் மிக்க நன்நாள் வெள்ளிக்கிழமைதான். இவ்வாறான சிறப்புக்கள் உடைய எண் 8இலும் வெள்ளிக் கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் காலத்தின் பெறுமதியையும் நேரத்தின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டவராக இருப்பீர்கள். ஒரு நொடிப் பொழுது சென்றால் அது மீண்டும் வராது என்று கருதி ஒரு நொடிப் பொழுதினையும் வீணாக்கமாட்டீர்கள். எப்போதும் பிரயோசனம் தரக்கூடிய ஒரு காரியத்தைச் செய்த வண்ணமாகவே காணப்படுவீர்கள். சோம்பல், சோர்வு என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையில் வந்து விழும் நெருப்பு என்று கருதி சோம்பலையும், சோர்வினையும் தவிர்த்துத் தேனீபோல் சுறுசுறுப்பாக இயங்குவீர்கள்.

தன்னுடைய ஆற்றலினாலும் முயற்சியினாலும் நீங்கள் செய்யக்கூடிய காரியம் வெற்றியை உங்களுக்குத் தரும். பிறருக்கு சிரமத்தை ஏற்படுத்தும் காரியங்களையும், பிறரால் செய்ய முடியாத வேலைகளையும், பிறர் வியக்கக்கூடிய செயல்களையும் நீங்கள் உங்கள் புத்திக் கூர்மையினாலும் அறிவு முதிர்ச்சி காரணமாகவும் மிக இலகுவாகச் செய்து முடிப்பீர்கள். விசித்திரமான, போற்றத்தக்க வேலைப்பாடுகள் உடைய கைத்தொழில்கள், கட்டிடக்கலை, பொறியியல் போன்ற துறைகளில் நல்ல தேர்ச்சி உடையவராகத் திகழ்வீர்கள்.

மனோதிடம், திடகாத்திரமான உடல், நுட்பமான புத்திக் கூர்மை, சுறுசுறுப்பாக இயங்கும் பண்பு இவைகள் உங்கள் திறமைக்கும் வெற்றிகளுக்கும் பக்கபலமாக அமையும் பண்புகளாகும். நீங்கள் யாருடைய போதனைகளையும் ஆலோசனைகளையும் கேட்க வேண்டிய அவசியமேயில்லை. சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்துத் தானே எந்தக் காரியத்தையும் தியமையாகச் செய்து முடிக்கக்கூடிய வல்லமை பெற்றவர்தான் நீங்கள்.

நீங்கள் சிறுவயது தொடக்கம் கைத்தொழிலில் விருப்பம் உடையவராகவும், எதையும் சுயமாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் உடையவராகவும் இருப்பீர்கள். இதனால் தொழில் முறையில் ஈடுபாடு கொள்வீர்கள். எது எப்படி இருப்பினும் 26 வயது வரை தொழில் துறையினைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் காணமாட்டீர்கள். 26 வயதுக்குப் பின்னர்தான் நீங்கள் படிப்படியாக முன்னேற்றம் அடைவீர்கள். 27 வயது தொடக்கம் 36 வயது வரை வருமானம் கிடைக்கும். 37 வயதிலிருந்து 46 வயது வரை வருமானம் மேலும் அதிகரிக்கும். 47 வயது முதல் 56 வயது வரை வருமானம் ஒரு அளவில் காணப்படும். தேவைக்கு ஏற்ற வகையில் வருமானம் கிடைக்கும். 57 வயது தொடக்கம் தொழிலில் இருந்து இளைப்பாறி உற்றார், உறவினர்கள் உதவி மூலம் வாழ்வீர்கள்.

7,18 வயதுகளில் உங்களுக்குக் கண்டம் ஏற்படும். கவனம் தேவை. உயிருக்கு ஆபத்து இல்லை. உங்களுக்கு வாயு சம்பந்தமான நோய் அடிக்கடி 32 வயதிலிருந்து 41 வயது வரை ஏற்படும். நெஞ்சு வலி, வயிற்று வலி, கை கால் மூட்டுப்பிடிப்பு போன்ற தொந்தரவுகள் ஏற்படும். இது தொடர்ந்து ஏற்படாது. மாதத்தில் ஓரிரு தினங்கள் இருந்து குணமாகும். நீங்கள் இந்தக் காலத்தில் வாயுவை உண்டாக்கும் உணவு வகைகளைத் தவிர்த்து, வாயுவைக் குணமாக்கும் உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். வாயுவைக் குணப்படுத்தும் உணவுகள் சுக்கு, இலவங்கப்பட்டை, ஏலக்காய், சீரகம், நெல்லிக்காய், புளியாரைக்கீரை, மிளகு, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு.

நீங்கள் எப்பொழுதும் வெள்ளை நிறமான ஆடைகளையே அணியவேண்டும். வைரம், புஷ்பராகம், இமிடேசன் வைரம் இவைகளில் 7 கற்கள் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். நன்மையும் அதிர்ஷ்டமும் உங்களுக்கு ஏற்படும்.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் 6. மாதத்தில் வரக்கூடிய 6,15,24 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். காரியங்கள் கைகூடும். இந்தத் திகதிகள் வெள்ளிக்கிழமையில் அமையுமானால் இதன் பலன் பல மடங்கு சிறப்பாகும்.

நீங்கள் எந்த எண் உள்ள வீட்டிலும் வசிக்கலாம். எல்லாம் நன்மையே. ஆகவே, ஆதிக்க எண் 8ஐயும் வெள்ளிக்கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்வில் சகல சிறப்புகளும் அடைய எனது நல்லாசிகள்.

புத்திக்கூர்மை எண் எட்டுக்கு. பக்திக்கிழமை வெள்ளி இணையும் போது சித்தியும் முக்தியும் உண்டு. அதிர்ஷ்ட வித்து விழுந்து முளைக்கும் வாழ்வில்.

அடுத்த வாரம் ஆதிக்கம் 8 சனிக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

அவுஸ்திரேலியா VS உலகத் தெரிவு அணி

அவுஸ்திரேலியா தற்போது நடப்பு உலகச் சம்பியன் என்பது தெரிந்த விடயமே. ஆகவே உலக சம்பியன் அணிக்கும் ஏனைய நாடுகள் பங்கு பற்றும் அணிக்கும் இடையிலான போட்டித் தொடர் ஒன்று ஒக்ரோவில் நடை பெறவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

சூப்பர் சீரிஸ் என அழைக்கப்படும் இத் தொடரில் பங்கேற்க 7 டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளில் இருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கைஅணி, இந்திய அணி, பாகிஸ்தான் அணி, இங்கிலாந்து அணி, நியூசிலாந்து அணி, தென் ஆபிரிக்கா அணி, மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களுடன் உலக சம்பியன் அவுஸ்திரேலியா போட்டியிட இருக்கிறது.

இச்சுற்றுப் பயணத்தில் டெஸ்ட் தொடர்களும், ஒரு நாள் போட்டிகளும் இடம் பெற இருக்கின்றன.

டெஸ்ட் அணியில் :-

ஸ்டீவ் ஹர்மிசன், அன்ட்ரு ஸ்டாஸ், மைக்கேல் வோன், அனில்கும்ளே, வி.வி.எஸ். லக்ஸ்மன், டெனிஸ் கனோரி, யூனுஸ் கான், அன்ரிநெல், கிரஹம் சிமித் ஆகியோர் அடங்குகின்றார்கள்.

ஒரு நாள் போட்டி அணியில் :-

டெரன்கோப், கெவின் பீட்டர்சன், மார்க்கஸ் திரெஸ்கோதிக், யூனுஸ் யுகானா, சயிட் அப்ரிடி, சொயிப்மலிக், அப்துல் ரசாக், சனத்ஜெயசூரிய, கிறிஸ்கெலில் ஆகியோரும் விளையாடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 4 இலங்கை, 7 இந்திய வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பங்களாதேஷ் கடந்த 5 ஆண்டுகளில்

பங்களாதேஷ் அணி தனது 37ஆவது டெஸ்ட் கிரிக்கெட்டை மே மாதம் 26 இல் விளையாட உள்ள நிலையில் பங்களாதேஷ் அணி கடந்து வந்த

பாதைகளை நாம் சற்று திரும்பிப் பார்ப்பது நல்லதே!

1999 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்டதன் பின் ஐ.சி.சி. பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கியது. பல சர்ச்சைகள் இவற்றுக்கு எதிராக கிளப்பட்டாலும் அதனை பெரிதாக பொருட்படுத்தாமல் தங்களால் முடிந்த அளவு திறமையுடன் தமது விளையாட்டுகளைக் காட்டினார்கள்.

2000ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணியுடன் டாக்காவில் மோதிய இவ்வணி 91ஓட்டங்களாலும், 9 விக்கெட்டுகளாலும் தோல்வியை தழுவிக்கொண்டது.

2002ஆம் ஆண்டு கொழும்பில் இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்றியது. இதில் முத்தையா முரளிதரனின் அதிரடி பந்து வீச்சின் மூலம் பங்களாதேஷ் அணி ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் திணறியது. இப்போட்டியில் பங்களாதேஷ் அணியின் பின் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிலர் தமது திறமைகளைக் காட்டியிருந்த போதும் இலங்கை அணியை வெற்றி கொள்ளும் அளவுக்கு அவர்களால் ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் போனது.

2003ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிராக முல்தான் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலாவது இன்னிங்ஸில் 66 ஓட்டங்கள் முன்னிலை வகித்தபோதும் இரண்டாவது இன்னிங்ஸில் இவை அனைத்தையும் தவறவிட்டு வெறும் 154 ஓட்டங்களைப் பெற்று 261 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. இந்நிலையில் தான் பங்களாதேஷ் அணிக்குப் பயிற்றுவிப்பாளராக டேவ் வட்மோர் நியமிக்கப்பட்டார். இதன் பின் சில காலம் டெஸ் போட்டிகளில் தலைகாட்டாமல் இருந்த இவ்வணி 2005 ஜனவரி மாதம் சிட்டாங்கோ மைதானத்தில் சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டிக்கு அதிரடியாக களமிறங்கியது.

புதிய வீரர்கள் புதிய பயிற்றுவிப்பாளர் என்று எல்லாம் புதியதாகவே ஆரம்பித்த பங்களாதேஷ்

களமிறங்கிய அணி சிம்பாப்வே அணியை திக்குமுக்காட வைத்து கோப்பையைக் கைப்பற்றிக் கொண்டது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது உண்மைதான்.

தமது முதலாவது வெற்றிக் கோப்பையை பெற்றுக் கொண்ட பெருமிதத்தை அவ்வணியானது பெரும் விமரிசையாகக் கொண்டாடியது. அதனை முன்னிட்டு பங்களாதேஷ் நாட்டில் விடுமுறையும் கூட அறிவிக்கப்பட்டிருந்தது. தமது வெற்றிப் பாதையில் ஏற்பட்ட தோல்விகளை தமக்கு ஏற்பட்ட அனுபவங்களாகக் கொண்டு வளர்ச்சியடைந்த அணி என்ற பெருமையை இவ்வணி பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

மா - சே - துங் (1893 - 1976)

உலகை வியக்க வைத்தவர்கள்

சீனாவில் பொதுவுடைமைக் கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்குக் காரணமாக இருந்தவர் மா-சே-துங் எனும் மாவோ. இந்த மாபெரும் நாட்டின் வரலாற்றில் மிகப் பரந்த செயல் விளைவுடைய தனிச் சிறப்புக்குரிய மாறுதல்களுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர் அவர்.

சீனாவில் ஹுனான் மாகாணத்திலுள்ள ஹுவோஷான் என்ற கிராமத்தில் 1893ஆம் ஆண்டில் மா-சே-துங் (Mao-Teo Tung) பிறந்தார். இவருடைய தந்தை ஓரளவுக்கு வசதியான ஒரு குடியானவர். சீனாவை 17ஆம் நூற்றாண்டு முதல் ஆண்டு வந்த ஷிங் மரபின் அரசு சீர்கேடுற்றிருந்தது. அந்த அரசுக்கெதிராக 1911இல் ஒரு புரட்சி மூண்டது. அப்போது மா-சே-துங் 18 வயது மாணவனாக இருந்தார். இந்தப் புரட்சி மூண்ட சில மாதங்களுக்குள்ளேயே ஷிங் குடியரசு கவிழ்க்கப்பட்டது. சீனா ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்தப் புரட்சியின் தலைவர்களால், சீனாவில் ஒரு நிலையான, ஒற்றுமையான அரசை ஏற்படுத்த முடியவில்லை. இந்தப் புரட்சி நீண்ட காலக் குழப்பத்திற்கும், உள்நாட்டுப் போருக்கும் வித்திட்டது. இந்த நிலைமை 1949 வரையிலும் நீடித்தது. இளைஞர் மா-சே-துங்கை இடதுசாரி அரசியல் கொள்கைகள் மிகவும் கவர்ந்தன. 1920ஆம் ஆண்டில் அவர் கொள்கைப் பற்றுமிகுந்த ஒரு பொதுவுடைமைவாதியாக விளங்கினார். 1921ஆம் ஆண்டில் சீனப் பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்த 12 பெருந் தலைவர்களுள் ஒருவராக மா-சே-துங் திகழ்ந்தார். எனினும், கட்சித் தலைமையின் உச்ச பீடத்திற்கு அவர் மிக மெதுவாகவே ஏறிக் கொண்டிருந்தார். 1935ஆம் ஆண்டில் தான் அவரால் கட்சியின் தலைவராக முடிந்தது.

இதற்கிடையில், ஆட்சியைப் பிடிப்பதில் சீனப் பொதுவுடைமைக் கட்சி பல எதிர்ப்புகளுக்கிடையில் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தது. 1927ஆம் ஆண்டிலும், 1934ஆம் ஆண்டிலும் இக்கட்சிக்குப் பெருந் தோல்விகள் ஏற்பட்டன. எனினும், இக்கட்சி எப்படியோ பிழைத்துக்கொண்டது. 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு மா-சே-துங் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அதன் பின் கட்சியின் வலிமை படிப்படியாக வளர்ந்தது. 1974ஆம் ஆண்டில் அப்போது சியாங்-கே ஷேக் தலைமையிலிருந்த தேசிய அரசை எதிர்த்து ஒரு பெரும் போரைத் தொடங்கும் அளவுக்குப் பொதுவுடைமைக் கட்சி வலிமை பெற்றது. இந்தப் போர் ஈராண்டுகள் நீடித்தது. நிலப்பரப்பு முழுவதும் பொதுவுடைமையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

முப்பது ஆண்டுக் காலம் உள்நாட்டுப் போர்களினால் அலைக்கழிந்த பின்னரே சீனா, பொதுவுடைமைக் கட்சித் தலைவர் என்ற முறையில் மா-சே-துங்கின் ஆட்சியில் கீழ் வந்தது. அப்போது சீனாவில் வறுமை தலைவிரித்தாடியது. நாடு வளர்ச்சியடையாமல் மிகவும் பின் தங்கியிருந்தது. பழைய மரபுகளில் ஊறிப் போயிருந்த கோடிக்கணக்கான மக்கள் படிப்பறிவில்லாத குடியானவர்களாக இருந்தனர். ஆட்சியைப் பிடித்தபோது மா-சே-துங்கிற்கு 56 வயது ஆகியிருந்தது. நவ சீனாவை உருவாக்கும் மாபெரும் பணி அவர் முன் மலைபோல் எழுந்து நின்றது.

மிகப் பெருஞ்செல்வாக்கினை மா-சே-துங் செலுத்திய ஒரு காலம் தொடங்கியது. அது முதற்கொண்டு 1976ஆம் ஆண்டில் மா-சே-துங் இறக்கும் வரையில், அவர் செயற்படுத்திய கொள்கைகள் சீனாவை அடியோடு மாற்றியமைத்தன. இந்த மாற்றத்தின் ஒரு முக்கியமான அம்சம், நாடு முழுவதும் பொதுவாக நவீனமயமாக்கப்பட்டதாகும். குறிப்பாக, நாட்டின் தொழில் மயமாக்குதல் மிகத் துரிதமாக நடைபெற்றது. பொதுக்கல்வி மிகப் பெருமளவுக்கு விரிவடைந்தது. பொதுச் சுகாதாரத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த மாறுதல்கள் முக்கியமானவையாயினும், இதே காலகட்டத்தின்போது வேறு பல நாடுகளிலும் இம்மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன. எனவே, இந்தப் பட்டியலில் மா-சே-துங்கிற்கு ஓர் உயரிய இடத்தை அளிப்பதை நியாயப்படுத்துவதற்கு இந்த மாறுதல்கள் மட்டுமே போதுமானவையாகா.

சீனாவில் பொருளாதார முறையை முதலாளித்துவத்திலிருந்து சமதரும முறைக்கு மாற்றியது, பொதுவுடைமை அரசின் இரண்டாவது பெருஞ் சாதனையாகும். அரசியல் ஆட்சியைப் பொறுத்தவரையில் ஈவிரக்கமற்ற ஒரு சர்வாதிபத்திய ஆட்சிமுறையில்தான் நிறுவப் பெற்றது. அரசின் பிரசார எந்திரத்தை இடைவிடாமல் பயன்படுத்தியதன் மூலம், அரசியல், பொருளாதாரப் புரட்சியை மட்டுமின்றி, சமூகப்புரட்சியைத் தூண்டுவதிலும் மா-சே-துங் வெற்றி பெற்றார். வரலாறு நெடுகிலும் சீன மக்கள் ஆழ்ந்த குடும்பப் பாசம் மிகுந்தவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால், கடந்த 25 ஆண்டுகளில் அவர்களுடைய இந்தக் குடும்பப் பாச உணர்வு தீவிர நாட்டுப் பற்றாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், கன்ஃபூசியசின் கொள்கைகளுக்கு எதிராகச் சீன அரசு தீவிரமான பிரசாரத்தை முடுக்கிவிட்டது.

(வியப்புக்கள் தொடரும்....)

காதிலை பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை

• நான் சொல்வ தெல்லாம் பொய். •
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

வணக்கமுங்கோ!

"ஐயோ எனக்கு வேலை இருக்குது. நீங்கள் போங்கோ. போயிட்டு உங்க ஏதாவது விசேஷம் எண்டால் சொல்லுங்கோ" எண்டு எவ்வளவு பிடிவாதமாச் சொல்லியும் நண்பர் கேட்கமாட்டன் எண்டு கூடவே கூட்டிக் கொண்டு போனவர்.

இவ்வளவு வில்லங்கமா எங்க கூட்டிக்கொண்டு போனவர் எண்டு யோசிக்கிறியளோ. வேற எங்க? பார்ளிமெண்டுக்குத்தான். போன கிழமை ஆறாந் திகதி ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கூத்தமைப்பு எம்.பி.மார் ஒரு விவாதம் நடத்திச்சின மெல்லோ! அதைப் பார்க்கத் தானுங்கோ நண்பர் கூட்டிக்கொண்டு போனவர். அட பார்ளிமெண்டுக்குப் போறதெண்டால் அவனவன் நான் நீயெண்டு அடிபடுகிறவன். இவர் ஏன் இப்பிடி சலிச்சுக்கொள்கிறார் எண்டு யோசிச்சுப் போடாதேயுங்கோ.

எங்கட பார்ளிமெண்டுக்கு ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் சேர்ந்து இருநூத்தி இருபத்தி ஐந்து பேர் எம்.பி.மார். எண்டினம். ஆனால் நான் பல தடவை போய் எண்ணிப் பார்த்திருக்கிறன். ஒரு நாள் கூட அத்தினை பேரும் இருந்ததில்லை.

ஆளும் கட்சிப் பக்கம் ஒரு பத்துப் பதினைந்து பேர், அதேபோல எதிர்க் கட்சியில் பத்துப் பதினைந்து பேர், எண்டு ஏதோ கூலிக்கு மாரடிக்கிற மாதிரித்தான் வில்லங்கத்துக்கு வந்து இருக்கிறவையாட்டம் இருப்பினம் எண்டால் எரிச்சல் வருமோ வாராதோ?

ஊடகவியலாளர் சிவாரமின்ர கொலையைக் கண்டிக்கிற பிரேரணையில அதே கருத்துச் சுதந்திர மறுப்பையும், ஜனநாயக மறுப்பையும் கூத்தமைப்பு எம்.பி.மார் உரையாற்றி, மறுவினாடியே மறந்து போட்டினம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொலைகளுக்கான கண்டனத்தை வாசிக்கேக்கே கூத்தமைப்பு எம்.பி.மார் - குறிப்பா இழவுவேந்தன் ரவியான ராயர், சினா வாஜிலிங்கம் ஆகியவர்கள் போட்ட கூச்சலும் குழப்பமும் முதலாம் வகுப்புப் பிள்ளைக் கணக்கா சூப்பரோ சூப்பர்.

அதையடுத்துப் பேசின சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. உந்த அரசின் மேலையோ பாதுகாப்புத் தரப்பு மேலையோ எவருக்கும் நம்பிக்கை இல்லையெண்டும் அதனாலேயே சுயாதீனமான சர்வதேச விசாரணைக் குழு அமைக்க வேணுமெண்டும் வீரம் கொப்புளிக்கப் பேசினதை கேக்கேக்கம் அப்பிடி நம்பிக்கை இல்லாதவர் என்ன காரணத்துக்காகப் பார்ளிமெண்டுக்குள்ள வந்து முழங்கிறார் எண்டதை கடைசி வரைக்கும் சொல்லாமலே உரையை முடிச்சார்.

அவரை அடுத்துப் பேசினார் ஹக்கீம். அதுவரையும் அமளி துமளியா இருந்த சபை அப்போதுதான் கொஞ்சம் அமைதியா இருந்துச்சுது. ஒரு கட்டத்தில ஹக்கீம் எம்.பி. தமிழர் தேசியமானது இரண்டு முகாம்களாக உள்ளது. ஒன்று ஒரு கருத்தையும் மற்றது மற்றொரு கருத்தையும் சொல்லினம் எண்டு சொல்லவும்.

இந்த மனிசன் தேசியத்தை இரண்டாக்கிப் போட்டுதே எண்ட குழப்பத்தில கூத்தமைப்பு எம்.பி.க்களிண்ட முகத்தில ஈ ஆடயில்லையுங்கோ. தங்கட பக்கமாக இருக்கிறவராச்சே, ஏதும் சாயம் பூசுவார் எண்டு நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டிருந்தவைக்கு இப்படியொரு கம்பியை நீட்டுவார் எண்டு கூத்தமைப்பார் நினைச்சுப் பார்க்காததை அவையின்ர முழுசாட்டத்தில புரிஞ்சுது. கடைசியா பொதுக்கட்டமைப்புபை டச் பண்ணின ஹக்கீம், கொடுப்போம், கொடுக்கப் போறம் எண்டு ஒரு தரப்பும், எடுப்பம் எடுக்கப்போறம் எண்டொரு தரப்பும் நடத்திற பேய்க்காட்டுத்தான் அது எண்டு சொல்லி தன்ர உரையை முடிச்சார். இந்தக் கட்டத்தில ஆளுந் தரப்புக்கு அஞ்சு பேரும் எதிர் தரப்புக்கு ஆறு பேரும் தான் சபைக் குள்ள இருந்திச்சினம்.

அதானுங்கோ எனக்குக் கோபம். எப்ப எம்.பி.மார் நிறைஞ்ச சபை கூடுதோ, அப்ப கூப்பிடுங்கோ வாறன் எண்டிட்டு நான் வந்திட்டேனுங்கோ....

யாவும் கலப்படமற்ற கற்பனை

இந்த வாரம் உங்கள் பலன்

(12.05.2005 தொடங்கி 18.05.2005 வரை)

சோதிட மாமணி தில்லை

இந்த வாரக் கிரக நிலை

மேடம் - சூரியன், புதன், இடபம் - வெள்ளி, மிதுனம் - சனி கன்னி - வியாழன், கேது, கும்பம் - செவ்வாய், மீனம் - இராகு.
சந்திரன் மிதுனம், கர்க்கடம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

மேடம் :
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலைக் கஷ்டம், பொருள் விரயம், அன்னியர் சகவாசம், வீண் தொல்லை, குடும்ப மேன்மை, சுபகாரிய நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

இடபம் :
(கார்த்திகை பின் முக்கால், ரோகினி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, வீண்குறை கேட்டல், இனசன விரோதம், பெரியோர் நட்பு, உத்தியோக உயர்ச்சி, தூர இடப் பயணம், மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

மிதுனம் :
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மந்தம், பண விரயம், பெரியோர் நட்பு, காரியத் தடை, குடும்ப சுகம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

கர்க்கடகம் :
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
செலவு மிகுதி, காரியத் தடை, அன்னியரால் தொல்லை, குடும்ப கவலை, உத்தியோக அலைச்சல், வீண் பிரயாசம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

சிங்கம் :
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் சிக்கல், செலவு மிகுதி, காரியத் தடை, வீண்பிரயாசம், குடும்பக் கலகம், பெரியோர் உதவி, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

கன்னி :
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அன்னியரால் தொல்லை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

துலாம் :
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, திடீர்ச் செலவு, வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

விருச்சிகம் :
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, கடன் படல், காரியக் கேடு, குடும்பப் பகை, உத்தியோக மாற்றம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

தனு :
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் மந்தம், வீண் செலவு, பெரியோர் சகாயம், தேக சுகம் பாதிப்பு, குடும்ப சுகம், உத்தியோகச் சீரமம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

மகரம் :
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் கலக்கம், மனச் சஞ்சலம், துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை, குடும்ப அமைதி, உத்தியோகக் குழப்பம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

கும்பம் :
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மாற்றம், செலவதிகம், இனசனப் பகை, வீண் துயர், உத்தியோகப் பலிதம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

மீனம் :
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, புதிய முயற்சி, குடும்பப் பகை, முரண்பாடு, உத்தியோகச் சிக்கல், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 6.30 மணி வரை
மீழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 103.6
நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்க
இதய வீணை
த.பெ. இல – 1665
கொழும்பு.
தொலை பேசி :– 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாதும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உரவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

Satellite : HotBird - 6
Localization : 13° East
Frequency : 11013 MHz
Polarity : Horizontal
Symbol rate : 27.500 Msb
FEC : 3/4
Transponder : 133



வேகம்

சொஹைப் அக்தார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் பல வேகங்களில் பந்து வீசக்கூடியவராக இருந்த போதும் இவரின் அதிகூடியளவு வேகம் 162.3 கீலோ மீற்றர் மணிக்கு (மணிக்கு 100.23 மைல்) இச்சாதனையை இவர் 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக நிகழ்த்திக் காட்டினார். இவ்வளவு திறமையுடைய வீரர் தற்போது பாகிஸ்தான் அணியில் விளையாடாதுதான் எல்லோருக்கும் கவலை. மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான போட்டியிலும் இவர் நீக்கப்பட்டுள்ளது கிரிக்கெட் இரசிகர்களை நிலைகுலைய வைத்துள்ளது. திறமைக்கு இந்தக் காலத்தில் மதிப்பு எங்கே?

உலகிலேயே மீக வேகமாகப் பந்து வீசும் பல வீரர்கள் வந்து போயுள்ளனர். அந்த வகையில் பந்துவீச்சு வேகத்தினை மேற்கிந்திய தீவுகள் அணியை விட யாரும் வீஞ்ச முடியாது என்ற நிலை காணப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால், தற்போது மீக வேகமாகப் பந்து வீசும் வீரராகப் பாகிஸ்தான் அணி

நீளம்

முதலைகள் என்றாலே அனைவரும் அதன் உருவத்தைப் பார்த்துப் பயப்படுவது வழமை. ஆனால் வாயைத் திறந்துள்ள முதலையார் சாதனைக்குரியவர். எப்படியென்றால் இம் முதலை 11-12 மீற்றர் (40 அடி) நீளம் உடையது. பூமியை இற்றைக்கு 110 மில்லியன் வருடங்களுக்கு முன் ஆட்சீயில் வைத்திருந்த ரெப்டிலியா இனத்தைச் சேர்ந்தது (டயனோஸர்). இது தனது முழு நீளத்தையும் வளர்ந்து முடிப்பதற்கு 50-60 வருடங்கள் எடுத்ததாம். சகாரா பாலைவனத்தில் காணப்படும் ஒரு சீறிய நீரோடையில் இம் முதலை கண்டுபிடிக்கப்பட்டது.

வேடிக்கை

வேடிக்கை காட்டுவது என்பது எல்லோராலும் முடியாத ஒரு வீடயம். அந்த வகையில் இங்கிருப்பவர்கள் வெறும் வேடிக்கைக்காக மட்டுமல்ல, தாம் வேடிக்கை காட்டும் அரங்கின் புகழை எடுத்துரைப்பதற்காகவும், இங்கு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார்கள். இவர்களின் அரங்கு 'வெலோஸ்யோ அரங்கு' என அழைக்கப்படுகிறது. இது அமெரிக்காவின் நிவாலா மாநிலத்தில் காணப்படுகிறது. இவ்வரங்கில் காணப்படும் ஒரு லிப்ட் கருவியானது அண்ணளவாக 339 m^3 பரப்பளவுடையது. இது நான்கு பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த லிப்ட் இயந்திரமானது மேற்பரப்பு இழுவிசை மூலமாக செயல்படுகிறது. இவ்விசையினை வழங்குவதற்கு அண்ணளவாக 5.6 மில்லியன் லீற்றர் நீர் பயன்படுத்தப்படுகிறது. இவ்வியந்திரம் ஆழ்கடல் ஆய்வாளர்களுக்கு உதவலாம் என நம்பப்படுகிறது. அன்றாடத் தேவைக்கு மட்டும் தண்ணீர் என்ற நிலை இன்றில்லை என்பது இங்கு தெரிகிறதல்லவா?

உயரம்

மோட்டார் வாகனங்கள் இப்போது வீதவீதமாகப் பாவனையில் உள்ளன. இங்கு இருக்கும் அவுஸ்திரேலிய நாட்டவரான கீரே மற்றும் ஷோலி எனும் இருவரின் வீபரீதமான ஆசையின் வீளைவே இது. இங்குள்ள மோட்டார் வாகனமானது 8 சக்கரங்களைக் கொண்டது. இது உலகச் சாதனைப் புத்தகமான கின்னஸில் மீக உயரமான மோட்டார் ஊர்தி என பதியப்பட்டுள்ளது. இதன் உயரம் 3.33 மீற்றர் (10 அடி 11 அங்குலம்). இம் மோட்டார் வாகனத்தில் இரண்டு வேறுபடுத்தப்பட்ட என்ஜின்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று வாகனத்தை இயக்குவதற்கும் மற்றொன்று வாகனத்தின் சக்கரங்களை இயக்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இவ் வாகனத்தை தயாரித்து முடிப்பதற்கு 4,000 மணித்தியாலங்கள் பிடித்தனவாம். இவ்வாகனத்தை எங்கள் நாட்டு வீதிகளில் செலுத்த முடியுமா.....

1ஆவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் அஜன் 03.05.2005

பாலியைப் பீரய்டமாகவும் தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வச்சந்திரன் - அம்பிகாதேவி தம்பதியின் செல்வப் புதல்வன் அஜன் தனது முதலாவது பிறந்த நாளை 03.05.2005 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகு வீமரிசையாகக் கொண்டாடினார். இவரை லண்டனில் வசிக்கும் அன்பு அப்பா - அம்மா, அண்ணா அஜன், இலங்கையில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா - அம்மம்மா, லண்டனில் வசிக்கும் பெரிசித்தப்பா குடும்பம், ரூபன் சித்தப்பா, ஜேர்மனியில் வசிக்கும் பெரியமாமா குடும்பம், லண்டனில் வசிக்கும் சின்னமாமா குடும்பம், இலங்கையில் வசிக்கும் பெரியம்மா, பெரிய சித்தி குடும்பம், ஆசைசித்தி, குட்டிச் சித்திமார், அத்தை, உற்றார், உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்தொலி :- அப்பா செல்வச்சந்திரன் (லண்டன்)